பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 22 சனிக்கிழமை (07-08-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:10

# வவுனியாவில் குண்டுவெடிப்பை அடுத்து

# ரெலோ முகாம் மீது படையினர் தாக்கு!

## அந்த இயக்கத்தின் 8 உறுப்பினர்கள் காயம்

வவுனியா,ஓக7

**வவுனியாவில் பட்டாணிச்சிபுளியங்குளத்தில் விசேட படையினரின் டிரக் மீது நேற்று கிளைமோர் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.**

**அதன் பின்னர் சற்றுத் தொலைவில் இருந்த ரெலோ அமைப்பின் முகாம் ஒன்றுக்குள் நுழைந்த விசேட அதிரடிப் படையினர் அங்கு வேட்டுக்களைத் தீர்த்து தாக்குதல் நடத்தியதில் எட்டு ரெலோ உறுப்பினர்கள் காயமடைந்தனர்.**

வவுனியா - மன்னார் வீதியில் சென்று கொண்டிருந்த டிரக் மீதே நேற்று முற்பகல் 11.30 மணிக்கு சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் குண்டை தூரத்தில் நின்று 'றிமோட கொண்ட்ரோல்' மூலம் வெடிக்க வைத்த ஒருவர் தப்பிச்சென்றதாகவும்-

அவரை படையினர் துரத்திச் சென்றதாகவும் - கூறப்படுகின்றது.

அப்போதே அவர்கள் ரெலோ முகாமுக்குள் புகுந்து தாக்கியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற ரெலோ உறுப்பினர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஏனையோர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் டிரக் மீதான கிளைமோர் தாக்குதலில் 6 படையினர் காயமடைந்தனர். கிளைமோர் நேரம் தவறி வெடித்ததால் படையினருக்கு ஏற்படவிருந்த பேரிழப்பு தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஹர்த்தால்

வவுனியா, ஓக.7

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் பாதை ஒன்று திறக்கப்படல் வேண்டும் எனக் கோரி வவுனியா நகரில் நேற்று பூரண கடையடைப்பு இடம் பெற்றது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கடையடைப்புக் காரணமாக வவுனியா நகரப்பகுதி நேற்றையதினம் வெறிச்சோடிக் காணப்பட்டது. (உ-7-164)

### 'பவள்' வாகனம் தடம் புரண்டது

வவுனியா, ஓக.7

வவுனியாவில் இருந்து தென் பகுதிக்கு சென்று கொண்டிருந்த பவள் கவசவாகனம் ஒன்று நேற்று நண்பகல் 1.30 மணிக்கு வவுனியா ரம்மியா ஹவுஸ் முகாம் முன்பாக உள்ள சோதனைச் சாவடியில் தடம் புரண்டது.

இதனால் 9 படையினர் காயமடைந்தனர் என்றும் -

அவர்கள் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## பொதுமக்கள் மீதான சூட்டில் இருவர் பலி!

வவுனியா பட்டாணிச்சிபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பை அடுத்து அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்களில் இருவர் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

பாலையா சக்திவேல்(வயது43-மகாரம்பைக்குளம்), முருகையா யோகலிங்கம்(வயது33) ஆகியோரே உயிரிழந்தனர்.

சம்பவம் நடந்த இடத்தில் சீனி சுப்பிரமணியம்(வயது51) என்பவரும்-

சம்பவ இடத்திலிருந்து 3 மைல்களுக்கு அப்பால் கோயிலில் நின்ற சமயம் சன்னம் பட்டு சுப்பிரமணியம் சஞ்சீவகன்(வயது18) என்பவரும்-

காயமடைந்தனர்.

இவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப் பட்டனர்.

## சர்வமதப் பிரார்த்தனை தொடர்ந்து 5ஆவது நாளாக!

யாழ்ப்பாணம்,ஓக.7

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்க இறை ஆசி வேண்டி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் சர்வமதப் பிரார்த்தனை ஐந்தாவது நாளாக நேற்று மாலையும் நடத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வன்னி மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவாகமகலாநிதி வை.மு.பரமசாமிக் குருக்கள், யாழ்.ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம், பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த எஸ்.சிவஞானசுந்தரம் ஆகியோர் நேற்று ஆசியுரை வழங்கி பிரார்த்தனையை ஆரம்பித்து வைத்தனர்.

நேற்றைய பிரார்த்தனையில இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களும் நூற்றுக்கணக்கான மாணவர்களும் கலந்து கொண்டு தத்தம் சமய வழிபாடுகளை நிகழ்த்தினர்.

இன்றைய பிரார்த்தனையில் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ.தா.மகாதேவககுருக்கள்கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்.

சர்வமதப் பிரார்த்தனை இன்றும் தொடர்ந்து நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தொடர் பிரார்த்தனைக்கு ஆதரவாக 'நியந்த்ரீ' ஏற்பாட்டில் நல்லூர் சிவன் கோயிலில் மிருத்துஞ்சய வில்வார்ச்சனை தினமும் நடைபெற்று வருகின்றது. (உ-5-6-7)

## படைகளுடன் ஒத்துழைக்காததால் எமது உறுப்பினர்கள் மீது தாக்குதல்

### ரெலோ எம்.பி. கூறுகின்றார்

"படையினருடன் ஒத்துழைக்காததால் எமது உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது"

நேற்றைய வவுனியாச் சம்பவம் குறித்து சஞ்சீவிக்குத் தகவல் வெளியிட்ட ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

கிளைமோர் வெடிப்புச் சம்பவத்தை அடுத்து தாக்குதல் நடத்திய புலி உறுப்பினரை துரத்தி வருவதாகத் தெரிவித்த படையினர் எமது முகாமுக்கு முன்பாக வந்து "இது யாருடைய முகாம்?" என்று கேட்டனர். "ரெலோ அமைப்பின் முகாம்" என்று கூறியதும் அவர்கள் முகாமுக்குள் நுழைந்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் எமது உறுப்பினர்கள் 8 பேர் காயமடைந்தனர். ஏனையோர் நிலத்தில் படுத்துத் தப்பிக்கொண்டனர்.

அதன் பின்னர் முகாமில் இருந்தவர்களை பலவந்தமாக வெளியே அழைத்துச் சென்ற படையினர் அவர்களை வீதியில் குப்புறப் படுக்க வைத்து துப்பாக்கிப் பிடிகளால் தாக்கினர்.

நாம் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிப்பதும் படையினருடன் ஒத்துழைத்து இயங்காததுமே எமது உறுப்பினர்கள் மீதான இந்தத் தாக்குதல்களுக்குக் காரணமாகும்.

இவ் விடயம் குறித்து வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கு நாம் முறையிட்டுள்ளோம். ஜனாதிபதிக்கும் முறைப்பாடு செய்ய இருக்கிறோம். – என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-164)

## புலிகளின் அனுமதியின்றி எல்லை கடந்து பயணிகளை அனுப்ப எடுத்த முயற்சி: வன்னிப் படைத் தலைமையகம் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஓக .7

கடந்த 28ஆம் திகதி படையினரின் முன்னணிக் காவலரண்கள் ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சுமார் 2ஆயிரம் பொதுமக்களை அனுப்பிவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தொடர்பாக படைத்தரப்பு விளக்கமளித்திருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த வார சஞ்சீவியில் 'பயணிகளை மனித கேடயமாக்கி படையினர் முன்னேற முஸ்தீபு? - புலிகள் பகுதிக்குச செல்ல முடியாது திரும்பியோர் தெரிவிப்பு' என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்தே வன்னிப் படைத் தலைமையக வட்டாரங்கள் மேலதிக விளக்கத்தை அளித்துள்ளன. அந்த விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வ்ன்னியில் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2ஆயிரம் பொதுமக்கள் தமது இடங்களுக்குச் செல்ல முடியாது வவுனியாவில் சிக்கிக் கொண்டனர்.

அவர்களின் நிலை தொடர்பாக வவுனியா அரச அதிபருக்கு தினசரி நெருக்குதல் கொடுக்கப்பட்டது. அரச அதிபர் அலுவலகம் முன் தினசரி ஒழுங்குமுறையாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதேசமயம் பாதை திறப்பதில் இழுபறி நீடித்தது.

பாதை திறக்கும் விடயத்தில் புலிகளுடன் அதுவரை இணக்கம் காணப்படாததால் எல்லைப் பிரதேசத்தைக் கடப்பதில் உள்ள ஆபத்தை அரச அதிபர் அந்த மக்களுக்கு மீண்டும் மீண்டும் விளக்கிவந்தார்.

இந்த ஆபத்துக்குத் தாங்களே பொறுப்பேற்று தாங்கள் பயணம் செய்ய விரும்புவதாக இந்த சிவிலியன்கள் தரப்பினால் அரச அதிபருக்கு மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம்,ஓக.7

அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகநாதன் (வயது34) என்ற குடும்பஸ்தர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரது வீட்டுக்கு இரவு 8 மணியளவில் முகமூடி அணிந்த ஒருவருடன் வாகனத்தில் வந்த படையினர் அவரைக் கைது செய்ததாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-66)

## தொண்டர் ஆசிரியர்கள் 600 பேருக்கு நியமனம்!

யாழ்ப்பாணம்,ஓக .7

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் 600 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் 600 தொண்டர் ஆசிரியர்களின் விவரப்பட்டியல் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இவர்களில் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் -

ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கு ஐந்து வருட காலத்துக்குள் அந்தப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காலிக நியமனம் வழங்கப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்தவாரமளவில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் குடாநாட்டில் வலய மட்டத்தில் நடத்தப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நியமனத்தைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் குடாநாட்டு இராணுவத் தரப்பு அக்கறை காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

### வெடிப்பொருள் மீட்பு

சாவகச்சேரி, ஓக.7

சாவகச்சேரி டச்சு வீதியில் ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்துக்கு அருகில் பெட்டி வடிவில் அநாதரவாகக் கிடந்த வெடிப்பொருள் ஒன்றை நேற்றுக் காலை 7.30 மணியளவில் அந்தப்பகுதியைத் துப்புரவு செய்த தொழிலாளர் கண்டுபிடித்தனர்.

பின்னர் இந்த விடயம் படையினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அங்கு வந்த படையினர் அதை வெடிக்கவைத்தனர். (உ-31)

### சூட்டுக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம்,ஓக.7

ஊரடங்கு அமுலில் இருந்த நேரம் - நேற்று அதிகாலை 3.30 மணியளவில் - வயலுக்குச் சென்றவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

அளவெட்டி அலுக்கை வயல் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சரவணமுத்து கதிரவேலு (வயது60) என்பவரே காயமடைந்தவராவார். (உ-3-15-139)

### பிரதேச சபை தலைவர்களுக்கு வாகனம்

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைத் தலைவர்களுக்கு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 'பிக்அப்' வாகனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

முதல் கட்டமாக 'லங்காமுடித்த' கப்பல் மூலம் ஓரிரு தினங்களில் 7 வாகனங்கள் இங்கு எடுத்துவரப்படவிருக்கின்றன. (உ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இளவாலை அருள்மிகு

**ஆனைவிழுந்தான் விநாயர் கோவில்**

**மஹாகும்பாபிஷேக மண்டல பூர்த்தின நவோத்திர சகஸ்ர மஹாசங்காபிஷேகம்.**

காலம்:- 07-08-99 சனிக்கிழமை
நேரம்:- காலை 10. மணிக்கு சங்காபிசேகம்.
பிரதம குரு:- 'சிவாச்சார்யமணி' இராமபாலச்சந்திரக் குருக்கள் (தேவஸ்தான பிரதமகுரு)

(68012) **விழா உபயகாரர்.**



# வாழ்த்துகின்றோம்

**உயர்திரு. இ. ஐயாத்துரை அவர்கள்**

**கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நியமனம் பெற்றதையிட்டு நிறைந்த மனத்துடன் வளமாக வாழ்த்துகின்றோம்.**

வடமராட்சி தெற்கு - மேற்கு உதவி அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் ப.நோ.கூ. சங்கத்தைத் தவிர்ந்த பேக்கரி உரிமையாளர்கள் ரூ. 10/-க்கு விற்பனை செய்த வெதுப்பியை ரூ.8/-க்கு விற்பனை செய்ய வேண்டும் என்றபோது உணர்வுடன் எமக்கு உதவி புரிந்து பேக்கரி உரிமையாளர் சங்கம் ஒன்று வடமராட்சியில் உருவாக ஊக்கம் தந்த பெருமகன் திரு. ஐயாத்துரை அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

இவை,
**மா. கனகராசா**
**இயற்கைநேசன்-குறள்வழிவள்ளல்**
**வடமராட்சி பேக்கறி சங்க அமைப்பாளர்.**

'சுதர்ஸனம்'
ஐடியல் பேக் ஹவுஸ்,
நெல்லியடி.

(சி-8453)


# லண்டனில் இன்றும் நாளையும் சர்வதேச சைவ மாநாடு

பிரிட்டனில் உள்ள சைவத் திருக் கோவில்கள் இணைந்து உருவாக்கிய பிரித்தானிய சைவத் திருக் கோவில்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சைவ மாநாடு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் லண்டனில் கோலாகலமாக நடைபெறுகிறது.

இன்றைய நிகழ்வுகள் காலை 9.30 மணிமுதல் இரவு 9.30 மணி வரை லண்டன் ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோவில் மாநாட்டு மண்டபத்திலும் - நாளைய நிகழ்வுகள் காலை 9.30 மணி முதல் இரவு 9.30மணிவரை லண்டன் உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் ஆலய மாநாட்டு மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இரண்டாவது ஆண்டாக இம்முறை நடத்தப்படும் இந்த சைவ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பல நாடுகளில் இருந்தும் சைவப் பெரியோர்கள் லண்டன் வந்து சேர்ந்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சைவ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற தமிழ்நாடு கோவை பேரூர் ஆதீனத்தைச் சேர்ந்த கயிலை மாமுனி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள், லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு சிவநந்தி அடிகள், சென்னைப் பல்கலைக்கழக இளைப்பாறிய தத்துவத் துறைப் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி, சென்னை லோயலா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அருணை பாலநாவாயன், ஜேர்மனி சைவ உலகத்தைச் சேர்ந்த உதவி ஆசிரியர் திருமதி கே.சுபாசினி, ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்தவரும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியருமான 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன், ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்தவரும்,வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஆசிரியருமான 'தமிழருவி' த.சிவகுமாரன், யாழ்ப்பாணம் குப்பிழானைச்சேர்ந்தவரும், இந்தியாவில் வசிப்பவருமான 'சித்தாந்தரத்தினம்' க.கணேசலிங்கம், சிங்கப்பூர் உலக சைவப பேரவையைச் சேர்ந்த திரு என்.கிருஷ்ணன் ஆகியோர் தயாராக உள்ளனர். இம்மாநாட்டில் லண்டனில் பிறந்து வளர்ந்தவர்களுடைய் சைவச்சொற்பொழிவுகளும், திருமுறை ஓதலும், பல்கலைக்கழக மாணவர்களுடைய ஆங்கிலச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் நாடகமும், லண்டன் தமிழ் நிலையத்தைச் சேர்ந்த முதியவர்களின் நாடகமும் பாரிஸ் நகர தமிழ்ச் சிறார்களின் பரதநாட்டியமும் இடம்பெறுகின்றன.

**லண்டனிலிருந்து**
**-சுதா-**

லட்சக்கணக்கான சைவத் தமிழர்கள் உலகம் முழுவதிலும் புலம்பெயர்ந்து வாழ்வதனால் அவர்களது வாழ்வியல் முறைகளையும், சைவப் பாரம்பரியங்களையும் பேணுவதற்காகவும் உலகம் முழுவதிலும் வாழ்கின்ற சைவ சமயத்தவர்களுக்கு உறுதுணை செய்வதற்கும் இம்மாநாடு கூட்டப்படுகிறது. இம்மாநாட்டில் உலகம் ஏற்றுக்கொள்ளும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருப்பதால் மிக முக்கியமான மாநாடு எனக் கருதப்படுகிறது. அத்துடன் லண்டனில் வாழும் புலம்பெயர்ந்த சைவர்களும் மாநாட்டில் கலந்துகொள்ள ஆவலாக உள்ளனர். இரு ஆலயங்களும் மாநாட்டுக்காக விழாக்கோலம் பூண்டுள்ளன.

இரண்டாவது அனைத்துலக சைவ மாநாட்டில் கலந்துகொள்ளவென யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியாக லண்டன் வந்திருக்கும் 'செஞ்சொற்செல்வர்' ஆறு திருமுருகன அவர்களிடம் மாநாட்டில் உங்கள் பங்கு என்ன வென்று வினாவியபோது அவரது அமைதியான - அடக்கமான - பதில்கள் ஆன்மிகச்சிந்தனை நிறைந்தவையாய் அமைந்தன. 'மேன்மைகொள் சைவ நீதி' ஈழத்துச் சைவப் 'பாரம்பரியம்' ஆகிய இரு தலைப்புகளும் முறையே முதலாம் நாள், இரண்டாம் நாள் நிகழ்வுகளில் உரை நிகழ்த்த தனக்குத் தரப்பட்டுள்ளதாக அவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய சைவ சமய வழிபாட்டுமரபுகளை எப்படிக் காப்பாற்ற வேண்டும் எனக் குரல் கொடுப்பதோடு தென்னிந்திய சினிமாப்படங்களில் சைவசமய வைபவங்கள், சைவசமய விழுமியங்கள் என்பவற்றைக் கேலிசெய்யும் நிலையில் நகைச்சுவைக் காட்சிகளாக சித்தரிக்கப்படுவதைக் கண்டித்து குரல் கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். 85வீதமான இந்துக்கள் வாழும் இந்தியாவில் சமயத்தில் அவர்கள் அசண்டைப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் அவர் சொன்னார். சைவசமய அநாதைக் குழந்தைகளை பொறுப்பேற்க அமைப்புக்கள குறைவென்றும் ஆனால் மற்றைய சமயங்களில் அநாதைக் குழந்தைகளைப பொறுப்பேற்க பல நிலையங்கள், அமைப்புக்கள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டியதோடு 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனை காணவேண்டும்' என்ற விவேகானந்தரின் தத்துவம் இன்னும் வளர்ச்சி அடையவில்லை என்றும் வருத்தமடைந்தார். வடக்கு - கிழக்கில் போரினால் பூசையின்றிச் சீரழிந்த நிலையில் காணப்படும் சைவத் திருக்கோயில்கள் பற்றிச் சிந்திக்க பலமான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் அவர் வலியுறுத்தினார்.

*

## யாழ.இளைஞர்குழு காலி விஜயம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 7

வடக்கு - தெற்கு நட்புறவுப் பால திட்டத்தின்கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலிருந்து 25 இளைஞர் யுவதிகள் காலி மாவட்டத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் எதிர்வரும்16 ஆம் திகதி காலிக்கு செல்லும் யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகள் 23 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து அங்குள்ள இளைஞர் யுவதிகளுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதுடன் அப்பகுதி மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வார்கள்.

வடக்கு - தெற்கு நட்புறவுப் பாலம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இரு மாதங்களுக்கு முன்னர் தென்பகுதியிலிருந்து இளைஞர் யுவதிகளைக் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)


**45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



**திருமதி நாகமணி சோதிலட்சுமி**
(தெல்லிப்பழை பிரபல ஆசாரியாரின் அன்புப் பாரியார்)

**தோற்றம்** 25-06-1950 **மறைவு** 24-06-1999

அன்பின் உருவாய் நல்வழி காட்டி எமை வழி நடத்திச் சென்றும் உற்றார், உறவினர் அயலாருடன் பண்பாய்ப் பழகியும் வந்த எங்கள் அன்புச் சுடர் எங்கள் அருமைத் தாயே சென்றனை எங்கு? நவின்றிடுவீர் எங்கள் அன்பு அம்மாவே நாள்கள் நாற்பத்தைந்து ஆனாலும் நாற்பத்தைந்து நாழிகை போல் தோன்றுதம்மா.

எமது தாயார் சிவபதம் எய்திய சமயம் எமது துயரில் பங்கு கொண்டு ஆங்காங்கு குறிப்பறிந்து பற்பல உதவிகளைச் செய்த அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு 07.08.99 இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வதிவிடம்:
நவாலி வடக்கு,
புலவர் வீதி,
மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**
(மகன்-நந்தகுமார்)
(மகள்-சசி).

(68003)



**வெளிவந்துவிட்டது**

**ஆற்றுகை**

(நாடக அரங்கியலுக்கான இதழ் - 07)

**அரங்குசார் ஆர்வலருக்கும் அரங்கியல் மாணவருக்கும் உகநதது.**

(யாழ். நகர புத்தகசாலைகளிலும் திருமறைக்கலாமன்றத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.)

(68013)



**நடிகர் தேவை**

**தொலைக்காட்சிப் படத்திற்கு நடிகர், நடிகையர் தேவை**

வெகு விரைவில் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட உள்ள தொலைக்காட்சித் தமிழ்ப் படத்தில் நடிக்க அழகும் திறமையும் உள்ள நடிகர், நடிகையர் தேவை.

அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். படங்கள், சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்

**விண்ணப்ப இறுதித் திகதி:** **20-08-1999**

தொடர்பு முகவரி:

**நிதுஷா ஸ்ரூடியோ**

**வதிரிவீதி, உடுப்பிட்டி.** (68014)



**பல் கட்டவேண்டுமா?**



**பல்லுப்போனால் சொல்லுப் போச்சு என்னும் பழமொழிக்கே முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமா?**
**வாருங்கள்!**

பலவருட அனுபவமுள்ள பல் கட்டுபவரினால் உங்கள் பற்கள் கட்டப்பட்டு, கிளிப் போடப்படும்.

**எரிக்கணேஷ்**

**566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-8454)

T. P. No - 2486



**லிபேட்டி தியேட்டர்**
**அச்சுவேலி**

**இன்றுமுதல்**

**அர்ஜுன், குஷ்பு**
நடித்த
**ரோஜாவை கிள்ளாதே**

நேரம்: 10.30 - 2.30

(67708)



**நாகம்ஸ்**
**சுன்னாகம்**

**கார்த்திக், நக்மா கவுண்டமணி, ஜெமினி கணேசன்**
**நடித்த**
**மேட்டுக்குடி**

காட்சிகள் – 11.00, 2.30
(புதிய நேரம்)

(68005)



**ராஜா**
**யாழ்ப்பாணம்**

அர்ஜுன் -ரஞ்சிதா
மற்றும் பலர் நடித்த
**ஜெய் ஹிந்த்**

10.30, 2.00, 5.00

(C/8419)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்து நின்று உளஆரோக்கியம் அளிக்கும் தெல்லிப்பழை மனநோய்ச் சிகிச்சைப் பிரிவு

ப.யூடி ரமேஸ் ஜெயக்குமார்

உயிரோட்டம் நிறைந்த ஒரு சமூகத்தின்அதி உயா செல்வங்களாக கருதக்கூடியவை உடல் ஆரோக்கியம் கூடவே உள ஆரோக்கியம். ஆனால் எம் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை. இவ்விரண்டு ஆரோக்கியங்களையும் இழந்து பலவருடங்களாகின்றன. இழந்த உடல் ஆரோக்கியத்தையாவது பயிற்சிகளினூடு பெற்றுவிடலாம். உள ஆரோக்கியத்தை எவ்வகையில் ஈடுசெய்வது? தொடர்கின்ற யுத்தமும் முடிவின்றி நீண்டே செல்கின்றது. உயிரிழப்புகளும், உடைமையிழப்புகளும், இடப்பெயர்வுகளும், கைதுகளும், காணமல் போதலும், புதைகுழிகளும் எமது நாளாந்த வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்டன.

இத்தாக்கங்கள் ஏற்படுத்திய ஆறாவடு உள்ளத்தில் ஆழமாகப் பதிந்த மனவடுவாக பலரைப் பாதித்து நிற்கின்றது. எமது பகுதிகளில் யுத்ததாக்கங்கள் ஏற்படுத்திய நெருக்கீடுகளின் விளைவாக உள ஆரோக்கியம் பாதிப்படைந்து உள நோயாளர்களின் எண்ணிக்கை சாதாரண நிலையைவிட அதிகரித்துச் செல்கின்றது.

யுத்தமும் அதனுடன் இணைந்த காரணிகளும் ஒருபுறம் இருக்க எதிர்பார்புகள் நிறைவேறாத நிலைமை, அச்சம், பதகளிப்பு, தோல்விகளை ஏற்கும் மனப்பக்குவமின்மை, குடும்பத்தகராறுகள், வறுமை, இளைஞரிடையே நிலவுகின்ற வேலைவாய்ப்பின்மை, மூடநம்பிக்கைகள், நோய்த்தாக்கங்கள், போதைப்பொருள் பாவனை, நீண்டகால மது பாவனை போன்ற பல்வேறுபட்ட காரணிகள் பரம்பரைக் காரணியின் செல்வாக்குடன் சேர்ந்தே செயற்பட வயது, பால் வேறுபாடின்றி வெகுவிரைவாக சாதாரண இயல்பு வாழ்வு வாழ்ந்த ஒரு மனிதனையும் உள நோயாளியாக மாற்றுகின்றன.

இவ்வாறான ஒரு நிலைமையில் பாதிப்படைந்த நோயாளியும் அவர் குடும்பமும் சமூக நிந்தைக்கும், அவமதிப்புக்கும், பழிச்சொற்களுக்கும் உட்படுவது மிகவும் கவலைக்குரியதே. எம்மவர்கள் இக்குடும்பங்களுக்கு இடுகின்ற இடுகுறிசொற்களை ஏற்று வாழ வேண்டிய நிலைமைக்கு இக்குடும்பங்கள் உள்ளாவது தவிர்க்கப்பட வேண்டியதொன்றே.

எவ்வாறாயினும் இன்று வளர்ந்து வருகின்ற விஞ்ஞானயுகம் எந்த

## சமூக சேவை அமைப்புக்களின் தயவை நாடி நிற்கிறது

நோயையும் விடுவிக்கும் வலிமை கொண்டு விளங்குவது இவ்வகையில் இந்நோய் உள்ளோரிற்கு மிகுந்த ஆறுதல் தருகின்றது.

தொடர்ந்து செல்கின்ற இந்த யுத்த சூழலில் பெருகிவருகின்ற உள நோயாளர்களை உள்ளெடுத்து, தக்க சிகிச்சை அளித்து அவர்களை மீண்டும் சமூகத்தின் உறுப்பினர்களாக மாற்றி, புதுவாழ்வளிக்கின்ற ஓர் உன்னதமான பணியை வடபுலத்தில் தனித்து நின்று தெல்லிப்பளை உள நோயாளர் சிகிச்சைப் பிரிவு செய்து வருகின்றது.

தனது சொந்த நிலத்தில் இருந்து மானிப்பாய், மந்திகையென்று பல தடவை இடம்பெயர்ந்து இன்று துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு முன்பாக - தற்காலிகமாக தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் ஒரு பிரிவாக - இத்துறை தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

அடிப்படை வளங்கள், வசதிகள் குறைவாக உள்ளபோதும் அவை இதுவரை நிவர்த்தி செய்யப்படாத போதும், உள்ளவற்றைக்கொண்டு இப்பிரிவு திருப்திகரமான சேவையை நோயாளர்களுக்கு செய்து வருகின்றது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அரசாங்கம் புனர்வாழ்வு, புனரமைப்பு என்று உலகளவில் கூறிய போதிலும் அக்கூற்று எவ்வகையில் உண்மையென்பது இங்குள்ள சாமானிய மக்களும் அறிந்ததே.

பெரும்பாலான தேவைகள் அரச நிர்வாகங்களிற்கூடாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் சில உள்ளூர், வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப் படுகின்றன. பொது அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் கூடவே சில தேவைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்ய முடியும்.

செய்ய வேண்டியவற்றை செயற்படுத்த வேண்டியவர்கள் தவறும் சமயத்தில் ஏனையோர் அத்தேவை மட்டில் அக்கறை கொள்வது, செயற்படுத்துவது மக்கள் சேவை அமைப்புகளை நல்ல முறையில் இயக்குவதற்கு உறுதுணையாக அமையும்.

தேவைகளை உரியநேரத்தில் - உரிய இடத்தில் - இனங்காண வேண்டும். அவற்றின் முக்கியத்துவத்தை எடைபோட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். அத்துடன் நிற்காமல் அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் செயற்படவேண்டும். தன்னம்பிக்கை, கடின உழைப்பு, உண்மை, நேர்மை, பணிவு போன்ற குணாதிசயங்கள் கூடவே செயற்பட எமது பலத்திற்கும் அப்பாற்பட்ட கருமங்களையும் செய்து முடிக்கலாம்.

இது அவரது கடமை; எனக்குரியதல்ல என்ற மனோநிலை எம்மத்தியில் இருந்து அகன்று தேவைகளை உரிய நேரத்தில் இனங்கண்டு செயற்படுத்தும் பக்குவம் எம் ஒவ்வொருவருடனும் இணையவேண்டும்.

தமது உளவியல் கற்கை நெறியை மேற்கொண்டிருந்த யாழ் - மருத்துவபீட 16ஆம் அணி 3ஆம் பிரிவு மாணவர்கள் இச்சிகிச்சைப்பிரிவில் மேற்கொண்ட நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடுவது, இவ்வாறாக சமூக மட்டத்தில் செய்யவேண்டும் அதிலும் குறிப்பாக தேவை உள்ளவர்களுக்கும் தேவையுள்ள இடங்களுக்கும் செய்யவேண்டும் எனச சிந்திப்போருக்கு அவற்றிற்காக, உழைப்போருக்கு சிலவற்றை செயற்படுத்த ஏதுவாக அமையும்.

இவ்வைத்தியசாலையில் உள்ள பெரும்பாலான கட்டடங்கள் சீரமைக்கப்படாத யுத்த சிதைவுகளுடனேயே இயங்குகின்றன. உளநல சிகிச்சைப் பிரிவிற்குரிய நோயாளர்களை பார்வையிடுகின்ற களம் அத்துடன் மருத்துவமாணவர்கள் கல்விகற்கும் கூடம் இம்மாணவர்களின் முதன்முயற்சியாக, சேவை மனம்கொண்ட யாழ் - நகர் வணிகப் பெருமகன் ஒருவரது உதவியுடன், தமது உடல் உழைப்பைக் கொண்டு சிரமதான முறையில் வர்ணம் பூசி பொலிவூட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நோயாளர்களின் மன அமைதிக்கு ஏற்றவகையில் அமைந்த இயற்கைக் காட்சிகள் பிறிதொரு படமாட உரிமையாளரின் உதவியுடன் 'பிறேம்' செய்து போடப்பட்டுள்ளன.

ஆழ்மனதில் ஆழமாகப் பதிந்துநிற்கின்ற மனக்குழப்பங்கள், மன அமைதியின்மை, பயம் என்பவற்றுடன் போராடும் நோயாளர்களை சாந்திப்படுத்துவதற்கு யோகாசன பயிற்சிகள், உளவிளையாட்டுக்கள், கைத்தொழிற் பயிற்சிகள், பாடல்களைக் கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் என்பன உதவுகின்றன. இவற்றுக்குரிய சாதனங்கள் பல இதுவரை இத்துறைக்கு கிடைக்கப்பெறவில்லை.

இந்நோயாளர்களின் தேவையோடு மட்டுமல்ல தமது உளநல கற்கையை தொடர்கின்ற மருத்துவமாணவர்கள், இன்னும் இந்நோயாளர் களை மிகுந்த கரிசனையோடு ஓய்வு, உறக்கமின்றிப் பராமரிக்கின்ற தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோரது தேவைகளுக்கும் இன்றியமையாத சாதனங்களாக தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ போன்றன எல்லோராலும் உணரப்பட்டது.

இந்த அத்தியாவசிய தேவையை பூர்த்தியாக்கும் முயற்சியில் இம்மாணவர்கள் ஈடுபட்டார்கள்.

நல் உள்ளம் கொண்ட யாழ் - நகர் வணிகப்பெருமக்களின் உதவியோடு யாழ் - வணிகர் கழகம் தொலைக்காட்சிபெட்டியையும் அதற்குரிய சகல சாதனங்களையும் மிகவும் குறுகிய காலத்தில் பெற்றுக் கொடுத்துள்ளது.

யாழ் - நகரில் கணித - விஞ்ஞான வகுப்புகளில் முன்னணி வகிக்கின்ற தனியார் கல்வி நிலைய நிர்வாகி, ஆசிரியர்களின் உதவியுடன் வீடியோ டெக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வுபகரணங்களை பாதுகாப்பதற்குரிய அலுமாரி திருநெல்வேலியில் உள்ள தச்சுதொழிலக உரிமையாளரது அன்பளிப்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இனி இவ்வுபகரணங்கள் மன அமைதியிழந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளருக்கு மன அமைதியை ஏற்படுத்தும், தமது கல்வியை தொடர்கின்ற மருத்துவ மாணவர்களின் கற்கை நெறிக்கான அலகுகளை கற்பதற்கு ஏதுவாக அமையும். அங்கு கடமையாற்றுகின்ற உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் வேலைப் பளு தணிய ஏதுவாக அமையும். ஒரு சிறிய குழுவாகிய இந்த அணி மாணவர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் இவ்வுதவிகளை செய்து முடித்துள்ளார்கள் என்பதை உணர்ந்து உவகை கொள்ளும் அதே வேளையில் இது போன்ற சமூகப் பணிகளில் தன்னலம் கருதாது திறந்த மனதுடன் ஏனையோரும் செய்ய முன்வரவேண்டும்.

ஏனெனில் இன்னும் பல அடிப்படைத் தேவைகள் இங்கு இதுவரை நிறைவேறாமல் இருக்கின்றன.

எமது தேவைகளை எமது வளங்களைக் கொண்டே பூர்த்தி செய்யக் கூடிய பொருளாதார அடித்தளம் எம்மிடம் காணப்படுகின்றது. விரிந்து நிற்கின்ற விரல்களெல்லாம் ஒன்று சேர்ந்து குவிய எவ்வாறு ஒரு வேலை இலகுவாகின்றதோ அதேபோல் பல்வேறு மனநிலையில் உள்ள யாபேரும் ஒன்றாகி ஒற்றுமையாகும் போது எமக்குள்ள பல்வேறுதேவைகளை நாமாக பூர்த்தி செய்து கொள்ளலாம்.

இவ்வகையில் இம்மாணவர்கள் மேற்கொண்ட சகல முயற்சிகளிற்கும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைத்து அன்புள்ளங்களையும் நன்றியோடு நோக்கும் வேளை தொடர்ந்தும் இவ்வாறான முயற்சிகளிற்கு இது போன்ற வள்ளல் மனம் கொண்ட யாபேரும் உதவ முன்வர வேண்டும்.

சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இருக்கின்ற தேவைகளை இனங்கண்டு ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்கின்ற முயற்சிகளில் ஈடுபடுகின்ற செயல்களை இப்போதிருந்தே கற்றுக் கொள்வோமானால், தொடர்ந்துசெல்கின்ற இந்த யுத்தம் விடைபெற்று சமாதானம் தளிர்க்கும்போது சிதைந்த எம்மனங்களையும் சீரழிந்த எம்வாழ்விடங்களையும் சீர்ப்படுத்தும் பக்குவம் இயல்பாகவே எம்மிடம் குடிகொண்டுவிடும். *



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 16ஆம் அணியின் 3ஆம் பிரிவு மாணவர்கள் அண்மையில் தெல்லிப்பழை உளநோய் வைத்தியசாலையில் சிரமதானப் பணியினை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.7

எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை மதிப்பிடும் பணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 62 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மதிப்பீட்டாளர்கள் அனைவரையும் உடனடியாக வேம்படி மகளிர் கல்லூரியில் சமுகமளித்து தன்னைச் சந்திக்குமாறு யாழ். மாவட்ட கல்வி நிர்வாக இணைப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

பிரதம மதிப்பீட்டாளர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பும் ஏனைய மதிப்பீட்டாளர்கள் 18ஆம் திகதிக்கு முன்னரும் கொழும்பு செல்ல வேண்டியிருப்பதால் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்காக உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மதிப்பீட்டாளர்களுக்கான தங்குமிட வசதிகள் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-6)

யாழ்ப்பாணத்தில் விற்பனை முகவர்கள் உடன் தேவை

யூகே டிஷ் அன்டெனா

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

உலகின் ஒரு மூலையில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக ஆதங்கப்படுகிறீர்களா? இல்லவே இல்லை!!

உலகோடு உங்களை நொடிப்பொழுதில் இணைக்கும் பணியை ஏற்றுக்கொள்ள யூகே நிறுவனத்தினர் தயாராகிவிட்டனர்!!!

தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைசிறந்த நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்பத்தில் செய்மதி டிஷ் அன்டெனாக்கள் மூலம் சர்வதேச அலைவரிசைகளை வழங்கியதில் முன்னோடிகள்

சில்லறையாகவும் மொத்தமாகவும் டிஷ் அன்டெனாக்களையும் உதிரிப்பாகங்களையும் மிகச்சாதாரண விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

UKAAYE 169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gaswork Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நஷனல் காஸ்குக்கர், சிலிண்டர், நஷனல்Oven,Hotplate,Rice Cooker, தேக்குமரம் என்பன விற்பனைக்கு உண்டு.தொடர்பு:-இ.தேவகுரு, ஊறணி, வல்வெட்டித்துறை. (67654)

6 ஸ்ரீ ஜப்பான் கார், கலர் T.V, B/W T.V, டெக், பற்றறி மற்றும் வீட்டுத்தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு S.தங்கராஜா, பதிவாளர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (67930)

Olimpia, Halda, Remington தமிழ்தட்டெழுத்து இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. ரேணுகா, 78, கன்னாதிட்டிவீதி, யாழ்ப்பாணம். (67954)

## (O/L) Maths

Distinction பெறுபேறடைவதற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் உதாரணங்களுடன் கற்பிக்கப்பட்டு பயிற்சிக்கணக்குகள் முழுவதும் செய்விக்கப்பட்டு மீட்டலுடன் பலவினப் பயிற்சிகளும் வினாவிடைப் பயிற்சிகளுடன நேரத்துக்குச சோதனை செய்யும் பயிற்சிகளும் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (67892)

## MATHS - ENGLISH

40 நாள்களில் ஆரம்பத்திலிருந்தும் O/L பரீட்சையில் Credit, Distinction பெறுபேறடையவும் தரமான 1000 வினாக்களுக்கு விடையளிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) B.Sc ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்குவீதி, திருநெல்வேலி. (67927)

## பொது அறிவு

அதிபர் பரீட்சைக்கும் மற்றும் அரசு நடத்தும் சகல போட்டிப் பரீட்சைத் தேர்வுகளுக்கும் வழிகாட்டி நூல் எங்கும் விற்பனையாகின்றது. ஆக்கம் V.A. சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (67940)

## மணமகள் தேவை

வயது 40, சொந்தமாக தொழில் செய்யும் வாய் பேச முடியாதவருக்கு மணமகள் தேவை. பொறுப்பில்லாத, தனியாக இருக்கும் நற்குணம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். இல. 921 மே/பா உதயன். (67856)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறையில் இ.போ.ச. டிப்போவுக்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் அருகில் 6 1/2 நிலப் பரப்பு கொண்ட காணியில் சகல வசதிகளுடனான கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- பா.சுப்பிரமணியம் சட்டத்தரணி, தும்பளை, பருத்தித்துறை. (சி-8410)

## அன்பளிப்பு

17-08-99 சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசைத்தினம். அதனை முன்னிட்டு நாயனாரின் திருவுருவப் படத்தை அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளலாம். இ.தவகோபால் 525/2, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (சி-8429)

## இறைச்சிக்கோழிகள்

இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை. அத்துடன் அடைமுட்டைகளும் வாழைக்குட்டிகளும் உண்டு. தொடர்பு:- இல.19, முருகேசர் ஒழுங்கை,(நல்லூர் வீடியோசென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67888)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 31, மான்ஸ் ஸ்கூல் லேன், உடுவில், சுன்னாகம். (67859)

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் நூலில் உள்ள பத்துச் சிறுகதைகளையும் வாசித்தால் இலங்கைத் தமிழ் மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒரு நாவலை வாசித்த உணர்வு ஏற்படும். வாசித்துப் பாருங்களேன். அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. ரூபா 50. (67978)

## சஜிந்தவில் சிமெந்து

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்7

பத்தாயிரம் பக்கெற் சிமெந்தை ஏற்றிக்கொண்டு 'சஜிந்த' கப்பல் கடந்த செவ்வாயன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் தனியாருக்கான ஒரு தொகுதி பாவனைப் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன. பொருள்களை இறக்கும் பணி நடைபெற்று வருகின்றன. (உ-ரி)

## விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு இருபாலைறோட், வன்னியசிங்கம் ஒழுங்கையில் 3 பரப்பு 2 குளி விஸ்தீரணமுள்ள மேல்மாடி வீட்டுடன் சேர்ந்த காணி உடன் விற்பனைக்கு உண்டு. தினமும் காலை 9 மணிக்குப் பின் சந்திக்கலாம்.

தொடர்பு:-

**என் . கதிரவேல்**
**ஜோதி மாளிகை,**
**சிவன் அம்மன்றோட், திருநெல்வேலி.**

(67834)

## வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் வெளியீடு செய்துவைக்கப்பட்ட இசைநாடகக் கூத்து, மூத்தகலைஞர் வரலாறு என்னும் நூலில் இடம் பெறச் செய்து கெளரவிக்கப்பட்டவரும், பதினெட்டுக்கு மேற்பட்ட நாடகங்களில், நூற்றுக்கும் அதிகமான மேடைகளில் தோன்றி நடித்துப் பெரும் புகழீட்டியவரும்,

**'பண்ணிசைச் செல்வர்', 'முத்தமிழ்வித்தகர்,' 'கலைமகிழ்நன்', 'நடிப்பிசைமாமணி'**

போன்ற பட்டங்களைப் பெற்றவருமான

இசைநாடகக் கலைஞர்

**வே.க.பாலசிங்கம்** (ஆசிரியர்) அவர்களைப் பல்லாண்டுகாலம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்.

அத்துடன்

**இசைநாடகக், கூத்து கலைஞர்களை வரலாறாக்கி ஆவணப்படுத்திய பெருமைக்குரிய நூலாசிரியரையும் பாராட்டுகிறோம்.**

"செந்தில்பதி"
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்:
**பா.பிரபாகரன** (மகன்)
**பி.நகுலமாலா** (மருமகள்)

(67931)

## ரஷ்யாவில் உயர்கல்வி

**கல்வியாண்டு 1999/2000**

மருத்துவம், பொறியியல், சட்டம்

**யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

**பின்வரும் பல்கலைக்கழகங்களில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

I Peoples Friendship University (Lumumba University) (Moscow)

II Tula Padogagical University (Tula)

III Moscow Energical Institute (Moscow)

IV Moscow Automobile Institute (Moscow)

V Kursk State Medical University (Kursk)

ஆங்கில மொழியிலும், ரஷ்யமொழியிலும் போதனைகள் நடைபெறுகின்றன. இலங்கை அரசு உட்பட சர்வதேச அரசுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்புப் பெற விரும்புவோர் மேலதிக விவரங்களுக்குக் கீழ் உள்ள முகவரியை நாடுங்கள்.

**N.SASIKESAVAN**
**PREM BOOK CENTRE,**
19, New Bus Stand,
Jaffna.

Tel/Fax:- 021 - 2404 (c/8416)

## விரைவில் எதிர்பாருங்கள்

**யாழ் மண்ணில்**

**முன்னாள் பிரபல**
**தென்னிந்திய திரைப்பட நடிகர்கள்**

AVM **ராஜன்**
**புஸ்பலதா**

(சி-8307)

## 95 ஆம் நாள் நினைவஞ்சலி



இவ்வுலகில் பிறப்பு 22 - 04 - 1958

விண்ணுலகில் பிறப்பு 05 - 05 - 1999

### திருமதி ஜெயமதி றோய்

'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.'
(யோவான் 11:25)

வாழ்வதற்கு மனமின்றி வானுலகம் சென்றாயோ - நம்மோடு
வாழ்ந்ததுதான் போதுமென்று வாழ்வதனை முடித்தாயோ- எங்கள்
கேள்விக்குப் பதிலுமில்லை, எம் வானில் மதியுமில்லை - நம்வீட்டை
ஆள்வதற்கு அன்னையுமில்லை, எம்மை அரவணைக்க - யாருமில்லை
நீள்துயிலை நீ கொண்டாய், நெருப்பாற்றில் நமைவிட்டாய்- உன்
கால்பட்ட இடமெல்லாம் அம்மா கண்ணீராய்ச் சொரிய வைத்தாய்.

உமது பிரிவால் துயருறும்
**தாய், கணவன், பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.**

திரு. றோய் அந்தோனிப்பிள்ளை,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8414)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 19 - 11 - 1961

உதிர்வு 30 - 07 - 1997

### செல்வி மைதிலி கந்தசாமி

திதி:- 07-08-1999

பாசமுள்ள மகளே! சகோதரியே!
பாதியிலே எமைவிட்டு பிரிந்ததேனோ
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**அம்மா, அக்காமார், தம்பிமார்.**

மாவத்தை, அளவெட்டி வடக்கு. (67839)

## தென்மராட்சி மக்கள் சுலபமாக

# ரீ.வி., டெக் திருத்த

**தென்மராட்சி மக்கள் போக்குவரத்து சிரமமின்றி ரீ.வி., டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்ளவும், சிரமமான திருத்த வேலைகளை யாழ்ப்பாணத் தலைமையகத்தில் திருத்திக் கொள்ளவும்**

## வீனஸ் டெல்கா

**11, பஸ்நிலையம்,**
**சாவகச்சேரி** (மீன்சந்தை அருகில்) (சி-8330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளிடையே சமரசம் காணும் முயற்சியில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் ஈடுபாடு

கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான் என்பது போல, யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமை குறித்து தெற்கிலும் வெளிநாடுகளிலும் சொல்லப்படும் 'கதை'கள், காட்டப்படும் 'படங்கள்' வெறும் பிரசார நோக்கம் உடையனவாகவே உள்ளன. இங்கு வாழும மக்களின் கஷ்டங்கள், சுதந்திரமற்ற நிலைகள் மறைக்கப்பட்டு எல்லாம் நல்லதாகவே நடக்கின்றன என்று நம்பும் அளவுக்கே கதைகள் சொல்லப்படுவது உண்டு.

இதனால் தெற்கிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இங்கு வருவோர் தாம் கேள்விப்பட்டதற்கும் நேரில் காண்பதற்கும் உள்ள வித்தியாசத்தை வாய்விட்டுக் கூறி ஆச்சரியப்படுவது உண்டு. தெற்கின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் இங்கு வந்து இரண்டு நாள் மட்டும் தங்கிய பின்னர், கவலை கலந்த ஆச்சரியத்தை வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணம் குறித்துக் கொழும்பில் இருந்து கேள்விப்படுவதற்கும் இங்கு வந்து நேரில் பார்ப்பதற்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்றார். இது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அவரைப் போலவே இம்மாதம் முதலாம் திகதி இங்கு வந்து யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் யாழ்ப்பாணத்தைப் பார்த்துக் கவலை தெரிவித்தனர். நேரில் பார்ப்பதும் கேட்பதும்தான் உண்மையான நிலையைத தெளிவுபடுத்தும் என்பதனை உணர்ந்து கொண்டதாக வாய்விட்டுச் சொன்னார்கள்.

இந்தத் தூதுக்குழுவில் மொத்தம் பத்துப் பேர் அங்கம் வகித்தனர். தேசிய கூட்டுறவுச்சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம் மாறிமாறி ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுவது வழக்கம். யாழ்ப்பாணத்தில் அதனைப் பல வருடங்களாக நடத்தமுடியவில்லை. வடபகுதி கூட்டுறவுச் சபையின் வீரசிங்கம் மண்டபம் சேதம் அடைந்த பின்னர் இங்கு கூட்டங்கள் எதுவும் நடைபெற முடியவில்லை என்று அறியப்படுகிறது.

தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தை இங்கு நடத்துவதோடு மட்டுமன்றி கூட்டுறவுத்துறைக்கு இங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கண்டு, கேட்டறிவதும் அவர்களின் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று.

தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் லயனல் சமரசிங்கா மற்றும் பணிப்பாளர்சபை உறுப்பினர்களான டி.ஏ.ஹேவாகம (மேல் மாகாணம்), கே.ஜி.விஜேசிங்கா (மத்திய மாகாணம்), ஏ.ஆரியரத்னா (வடமத்திய மாகாணம்), எம்.எஸ். பியதாச (சப்பிரகமுவ மாகாணம்), எச்.எல்.எம். டயஸ் (தென் மாகாணம்), ஹேமலத் உதயகுமார (வடமேல்மாகாணம்), பி.எம்.சந்திரசேன பண்டார (ஊவா மாகாணம்),எஸ்.எம்.டி.சேனரத்னா, செல்வி ஜெயந்தா நவரட்ண (உதவிச் செயலாளர், மகளிர் அபிவிருத்தி) ஆகியோர் யாழ்ப்பாணம் வந்த குழுவில் அங்கம் வகித்தனர்.

தென்னிலங்கையில் பிரசாரம் செய்யப்படும் அளவுக்கு யாழ்ப்பாணத்திற்கு உதவி கிடைக்கவில்லை என்பதனைத் தெரிந்து கொண்டோம் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். ஒரு நாள் தங்கி நின்றபோது அவர்கள் நகரச் சந்தைக்கும் யாழ்.நகரக் கடைகளுக்கும் சென்று பொருள்களின் விலைகளைக் கேட்டறிந்தனர். கொழும்பைவிட இங்கு வாழ்க்கைச் செலவு அதிகமாக 'இருக்குமே, என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் கொடிகட்டிப்பறந்த கூட்டுறவுத்துறை இப்போது வீழ்ந்து கிடப்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டனர். கூட்டுறவுத்துறையில் எல்லா வகைகளாலும், ஏனைய மாகாணங்கள், மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக யாழ்ப்பாணம் விளங்கி முன்னணி வகித்ததை இங்குள்ள கூட்டுறவுப் பிரமுகர்கள் அவர்களுக்கு நினைவுபடுத்தினர்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கோட்பாட்டுக்கு நிறைவான உதாரணமாக விளங்கியது யாழ்ப்பாணம். கூப்பன் கடைகள் என்று அழைக்கப்படும் கூட்டுறவுச்சங்கக் கடைகள் இரண்டாம் உலகப் போர் காலத்தில் மக்களுக்கு ஆற்றிய பணியும் தொண்டும் வரலாறாகி உள்ளது. கூட்டுறவு இயக்கம் அடிமட்டத்தில் உள்ள மக்கள் இயக்கமாகத் துலங்கியது. ஆங்காங்கே பதவிச் சண்டைகளும் சிறுசிறு தப்புத்தவறுகளும் ஊழல் மோசடிகளும் நிலவியபோதிலும் கூட்டுறவுத்துறை குடாநாட்டில் பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. ஒரு காலத்தில் தனியார்துறையுடன் போட்டி போட்டு மக்களுக்குப் பெரும் சேவை செய்து அவர்களின் நண்பனாக விளங்கியது. ஆனால் இப்போது அந்த நிலைமை பொய்யாய், பழங் கதையாய் போனதான தன்மையே காணப்படுகிறது.

## கொடிகட்டிப் பறந்த துறை

இந்த நிலை தொடரக்கூடாது. மீண்டும் முந்தியநிலை எய்தப்பட வேண்டும். குடாநாட்டு மக்களின் வாழ்விலும் வளத்திலும் பெரும் பங்காற்றும் நிலைக்கு கூட்டுறவுத்துறை மீண்டும் உயர்த்தப்பட வேண்டும். அதற்கு ஏற்பட்ட இழப்பும் அதன் பெறுபேறான வீழ்ச்சியும் சரிசெய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் வந்த தென்னிலங்கைக் கூட்டுறவாளர்களில் ஒரு சிலர் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னரும் இங்கு வந்திருந்தனர். 'யாழ்ப்பாணத்தின் முந்திய கூட்டுறவுத்துறைக்கும் இன்றைய கூட்டுறவுத்துறைக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. மிகவும் மெலிந்து போனதைக் காண்கிறோம். முன்னர் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கின. இன்றைய சங்கங்கள் வருமானமின்றிக் கஷ்டப்படுகின்றன' என்று அவர்கள் ஒப்பிட்டுப் பார்த்தனர்.

தென்னிலங்கைக் கூட்டுறவாளர்கள் இங்கு கூட்டுறவுச் சபையின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள், அரசாங்க அதிபர், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்ததோடு, பணிப்பாளர் சபைக் கூட்டத்தையும் இங்கு நடத்தினர். பணிப்பாளர் சபையில் யாழ். மாவட்டப் பிரதிநிதியாக அங்கம் வகிக்கும் எஸ்.சிவமகாராசாவும் பங்கு பற்றினார். கொழும்பில் இருந்து வந்த குழுவினர், நகரில் உள்ள சேதமடைந்த வீரசிங்கம் மண்டபம், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவற்றில் திருத்த வேலைகள் நடைபெறுவதையும் சென்று பார்வையிட்டனர். யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் தலைவர் பெ.கனகசபாபதி, அச்சபையின் செயலாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் குழுவினருக்கு அனுசரணையாகச் செயற்பட்டனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்த கூட்டுறவாளர்கள் குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் நிர்வாகிகளை சந்திக்க ஏற்பாடு செய்யப்படாதது பெருங்குறை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. எல்லாப் பிரதேசங்களையும் சேர்ந்த கூட்டுறவாளர்களும் சந்திக்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தால் கூட்டுறவுத் துறைக்கு உள்ள தேவைகள், பற்றாக்குறைகளை மட்டுமன்றி அந்தந்தப் பிரதேச மக்களின் பொதுவான பிரச்சினைகளையும் தூதுக்குழுவினரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்க முடியும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# குடாநாட்டு மக்களின் இடம்பெயர் நிவாரண நிறுத்தம் மறுபரிசீலனையில்

தேசியக் கூட்டுறவுச் சபை ஒரு மக்கள் அமைப்பு. அரசாங்கத் திணைக்களம் அல்ல. நீண்ட காலத்தின் பின்னர் அந்தச் சபையின் பணிப்பாளர்கள் இங்கு வருகை தந்துள்ள போது, குடாநாட்டில் இயங்கும் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், கூட்டுறவாளர்கள் ஆகியோரைச சந்திக்கஒழுங்கு செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு இங்குள்ள நிலைமைகளை மேலும் தெளிவுபடுத்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என்பது அந்த வட்டாரங்களின் கருத்தாக இருந்தது.

எனினும் ஒரு நாள் விஜயத்தில், அவர்கள் நடத்திய சந்திப்புகள், கலந்துரையாடல்களின் போது பல விடயங்கள் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டன.

* கூட்டுறவுத்துறைக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படாததால், தனியார்துறையினருடன் வியாபாரத்தில் போட்டி போட முடியவில்லை.

* யாழ்ப்பாணத்தில் மீண்டும் கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகளை பலமாக்குவதற்கு, அதிகரிப்பதற்கு, ப.நோ.கூ.சங்கங்களுக்கு அரச நிறுவனங்கள் உதவ வேண்டும்.

* கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு (ச.தொ.சவுக்கு) அனுப்பப்படும் பொருள்களை இரண்டு மாதக் கடன் அடிப்படையில் ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்க வேண்டும். கூ.மொ.வி.ஸ்தாபனம் தருவிக்கும் பொருள்களில் கணிசமான அளவை ப.நோ.கூ.சங்களுக்கு வழங்க வேண்டும்.

* கூட்டுறவுத்துறை அமைச்சினால் குடாநாட்டின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்ட பத்து லொறிகளையும் நன்கொடையாகப் பெறுவதற்கோ அல்லது அதற்குரிய கடனுக்கு வரி அறவிடப்படாமல் விடுவதற்கோ வழி செய்யவேண்டும்.

\- இவற்றுடன் இன்னும் பல கோரிக்கைகளும் தேவைகளும் அவர்களிடம் முன் வைக்கப்பட்டன.

குடாநாட்டில் கூட்டுறவுத்துறைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதைத் தாம் நேரில் கண்டு கொண்டதாக குழுவினர் தெரிவித்தனர். கூட்டுறவுத்துறையினரால் கட்டப்பட்ட 'மாக்பெட்' கட்டடத்தை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் வழங்குவது தொடர்பாக, கொழும்பில் 'மாக்பெட்' தலைவருடன பேசி, சிபார்சு செய்வதாகவும் கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர்கள் உறுதி அளித்தனர்.

அரசாங்கத்துக்கு, அரசாங்கத் திணைக்களங்களுக்கு, அடுத்து மக்களுக்குச் சேவை செய்யும் பொறுப்புடைய கூட்டுறவுத்துறை, குடாநாட்டில் பெரிதும் நலிந்து, மெலிந்து போயுள்ள நிலை மாறுவதற்கு இவர்கள் என்ன வகையில் உதவ முடியும், உதவுவார்கள் என்ற கேள்வி இவர்களின் யாழ். விஜயத்தைத் தொடர்ந்து எழுகிறது.

தேசியக் கூட்டுறவுச் சபை ஒரு மக்கள் அமைப்பு என்பதால் குடாநாட்டின் கூட்டுறவுத் துறை போரின் காரணமாக [illegible] பதை தென்னிலங்கையில் உ[illegible] ஏனைய கூட்டுறவாளர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அரசாங்கத்தினூடாக குடாநாடு பெறக்கூடிய உதவிகளை இனங்கண்டு அவற்றை வழங்க வேண்டிய அவசியத்தை அரசுக்கு வலியுறுத்தலாம். கூட்டுறவாளருக்குக் கூட்டுறவாளர் என்ற நெருக்கத்துடன் தமது சபை ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் கூட்டுறவு வளர்ச்சிக்கு உதவலாம், துணை புரியலாம். அதற்கான புரிந்துணர்வை தென்னிலங்கையில் தோற்றுவிக்க முடிந்தால் தேசிய கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர்களின் விஜயம் பயனுள்ளதாக அமையும். அதனையே இங்குள்ள மக்களும் எதிர்பார்க்கின்றனர். இல்லையேல் இது போன்ற குழுக்களின் விஜயங்கள் வெறுமனே யாழ்ப்பாணம் பார்ப்பது போலாகிவிடும்.

* * *

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடில் இந்த நாட்டுக்கு, பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பு உண்டாகும் என்பது எப்போதும் ஒப்புக் கொள்ளப்படும் விடயம். இதனை எல்லோரையும் விட சொந்த அனுபவத்தில் உணர்ந்தவர்கள் வர்த்தகர்கள், கைத்தொழில் அதிபர்கள்.

அந்த வகையில், கொழும்பில் தளமிட்டுள்ள பெரும் வர்த்தகப் புள்ளிகளும், கைத்தொழில் அதிபர்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தையும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியையும் ஒரே மேசைக்குக் கொண்டுவந்துள்ளன. அவர்களது பலமாத முயற்சி அண்மையில் முதற்கட்ட வெற்றியைத்தந்தது.

அரசாங்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகள் வர்த்தகர்களின் முகதாவில் கூடி இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இணக்கப்பாட்டுக்கு வருவது குறித்து ஆராய்ந்துள்ளார்கள்.

அரசு - ஐ.தே.க தரப்புப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில், தமிழர்களுக்கு வழங்கப்படவுள்ள உரிமைகள் அதிகாரங்கள் குறித்து இருதரப்பும் இணங்கிய பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் பேசுவது என்பது வர்த்தகர்களின் அட்டவணை - திட்டம்.

இதன் மத்தியில் -

கொழும்பு வர்த்தகர்களைப் போன்று யாழ்ப்பாண வர்த்தகர்களும் அரசியல் சமரச முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னணி வர்த்தகர்கள் நான்கு, ஐந்து பேர் ஏற்கனவே இந்த முயற்சியில் கடந்தவாரம் ஈடுபட்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பணியை தமிழீழ விடுதலைப் புலிகளே ஆற்றுவதற்கு இடம்கொடுத்துவிட்டு, இப்போது நாடாளுமன்ற அரசியலில் உள்ள தமிழ்க்கட்சிகள் சிலகாலத்துக்கு ஒதுங்கி இருக்க இணங்குமாறு அவற்றை கோருவது என்ற அடிப்படையிலேயே தமிழ் வர்த்தகர்களின் முயற்சி அமைந்திருப்பதாக அறிய வந்துள்ளது.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக கொழும்பில் வைத்து இரண்டு தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்களுடன் யாழ்.வர்த்தகர்கள் ஏற்கனவே பேசியுள்ளனர்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

பழம்பெரும் தமிழ்க்கட்சியின் இளைய தலைமுறைத் தலைவர் ஒருவருடன் வர்த்தகர்கள் இந்தவாரம் பேசினார்கள் என்றும், இது விடயமாக மூத்த தலைவர்களுடன் கலந்தாலோசித்துத் தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதாக அந்த இளந் தலைவர் கூறியிருப்பதாகவும் நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி நாடாளுமன்றத்தில் அதிக எம்.பிக்களைக் கொண்ட கட்சியின் தலைவருடன் யாழ். வர்த்தகர்கள் கொழும்பில் பேசியதாகவும்-

வர்த்தகர்களின் கோரிக்கை குறித்துப் பரிசீலனை செய்ய அவர் வாக்குறுதி அளித்துள்ளதாகவும் - தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் இப்போது யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். தமிழ் அரசியல் கட்சிகளின் மாவட்டத் தலைவர்களுடன் பேசி அந்தக் கட்சித் தலைவர்களை தமது திட்டத்துக்கு இணக்கம் தெரிவிக்கத் தூண்டுவதே அவர்களின் இப்போதைய வேலையாக இருக்கின்றது.

அந்தவகையில் ஒரு கட்சியின் மாவட்டத் தலைவருடன் வர்த்தகர்கள் கடந்த இரண்டொரு நாள்களுக்கு முன்னர் பேசியுள்ளனர் என்பது ஊர்ஜிதமாகி உள்ளது.

[illegible] வெற்றிபெறுவதற்கு உந்து சக்தியாகவும் உதவி செய்யுமாறு யாழ்ப்பாணத்தின் துடிப்பாளுமை கொண்ட ஒருவரை வர்த்தகர்கள் நாடியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மற்றொரு தமிழ்க்கட்சியின் கொழும்பில் உள்ள தலைவரிடம் வர்த்தகர்களின் முயற்சி குறித்துப் பிரஸ்தாபித்தபோது, வர்த்தகர்கள் தம்மிடமும் வருவார்கள் என்றே எதிர்பார்ப்பதாகவும் "எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமே" குறிப்பிட்டார்.

வர்த்தகர்கள் தமது முயற்சியில் வெகு தீவிரமாகவும் இதயசுத்தியுடனும் செயற்படுவதாக அவர்களுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பெறுபேறு எவ்வாறாகும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்பது ஒரு பழமொழி. பொதுச்சேவையில் அல்லது தொண்டில் ஈடுபடுபவர்களுக்கு இத்தகைய நிலை ஏற்படுவது உண்டு. ஒன்றைச் செய்தால் ஒருசாராருக்குப் பிடிக்கும்; வரவேற்பர். ஆனால் மறுசாரார் (தமக்கு அதனைச் சீரணிக்க முடியாதெனில்) சம்பந்தப்பட்ட தொண்டர் மீது குறைப்படுவர்; கோபம் கொள்வர். தனக்குச் சரியெனத் தெரிந்ததை ஆள்களைப் பாராமல், எவருக்கும் பயப்படாமல் தனக்குரிய கடமையைச் செய்பவனே நேர்மையான தொண்டன்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகள் பலாலி இராணுவத்தலைமையகத்தில் படை உயர் அதிகாரிகளைச் சந்தித்த போது சிறிது நேரம் இத்தகைய மனச்சோதனைக்கு ஆளானார்கள்.

குடாநாட்டு மக்களுக்கு உள்ள குறைகளை எவ்வாறு தீர்க்கலாம், இப்போது வழங்கப்படும் சேவைகளை எவ்வாறு மேலும் விருத்தி செய்யலாம் என்பதனைக் கலந்து பேசுவதே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக இருந்தது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், யாழ்ப்பாணத்தில் இயங்கும் மக்கள் அமைப்புக்கள், யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐ.நா. முகவர் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், ஜெய்ப்பூர் நிலையம் போன்ற உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

வடபிராந்திய படைத்தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா-தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் 51ஆவது படை அணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜென்ரல் என்.ஆர்.மாரம்பே, 52 ஆவது படை அணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மல்லவராய்ச்சி உட்பட யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் படைத்தளபதிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர். யாழ்.செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் பங்கு கொண்டனர். சமய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய சேவைகளான உணவு விநியோகம், சுகாதாரம், மருந்து, போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி, மீளக்குடியமர்வு மற்றும் கல்வி தொடக்கம் கசிப்புத் தொல்லை வரை பல விடயங்கள் இந்தக். கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

படை அதிகாரிகளும் தமது தரப்பை விட்டுக் கொடுக்காமல் விளக்கங்கள் கொடுத்ததோடு மக்களின் தேவைகள் பலவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தனர்.

கலந்துரையாடல் ஆரம்பமான சிறிது நேரத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் வெளியிடும் தகவல்கள் குறித்து படைத்தரப்பினரால் காரசாரமாக விமர்சிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் தளநிலையை எடுத்துக் காட்டும் வகையில் ஒன்றியம் நூலுருவில் வெளியிட்ட அறிக்கை குறித்தும் விசனம் தெரிவிக்கப்பட்டது – சற்றுக் காட்டமான வார்த்தைகளில். அந்நூலில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்களைக் கோடிட்டு வைத்திருந்து வாசித்துக் காட்டி விமர்சித்தார் உயர் அதிகாரி ஒருவர். இணையத்தின் அறிக்கைகளால் சிறிலங்கா இராணுவத்துக்கு சர்வதேசரீதியில் அபகீர்த்தி உண்டாகியதாகக் கூட அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. அத்தோடு அறிக்கைளில் காணப்படும் குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் அந்த உயர் அதிகாரி மறுக்கவும் செய்தார்.

இதன் விளைவாக ஒன்றியத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலநிமிட நேரம் திணுக்குற்ற நிலையில் காணப்பட்டனர். சபையில் சிலநிமிட நேரம் மௌனம் நிலவியது. அவர்களின் அந்த மௌனமும் அதிர்ச்சி நிலையுமே ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்...' என்ற பழமொழியை நினைவூட்டியது.

தொண்டர் நிறுவனங்கள் சமூகத்தின் அடிமட்டம் வரை சென்று பணி புரிபவர்கள். அலு

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரதநாட்டிய அரங்கேற்றம்



திருமறைக் கலாமன்ற மாணவியும் ஆசிரியத் தம்பதிகளான திரு திருமதி கணேசராஜாவின் புதல்வியுமான செல்வி இந்துஜா கணேசராஜாவின் நடன அரங்கேற்றம் அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. இவர் மேற்படி மன்ற ஆசிரியை ஸ்ரீமதி நளாயினி இராஜதுரையின் மாணவியாவார். 'நர்த்தகி ஆண்டாளாக' வரும் இந்துஜாவின் தோற்றத்தை இப்படத்தில் காணலாம்.

ஐ.நா.அபிவிருத்தித்திட்ட அமைப்பின் உதவியுடன்

# யாழ்.ஆஸ்பத்திரி கழிவுகள் சுத்திகரித்து வெளியேற்றப்படும்

யாழ்ப்பாணம்,ஓக7

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியாகும் கழிவுகளை ஆஸ்பத்திரி வளவில் வைத்து சுத்திகரிக்கும் திட்டமொன்று ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அமைப்பினால் நடைமுறைப்படுத்தபடவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக் கழிவுகள் யாவும் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள குழாய்வழியாக தற்பொழுது பண்ணைக் கடலுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இதனால் சுகாதார ரீதியாக ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஆஸ்பத்திரிக் கழிவுகளை அங்கேயே வைத்து சுத்திகரித்து வெளியே அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த சுத்திகரிப்புக்கென ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அமைப்பினால் ஆஸ்பத்திரி வளவில் சுத்திகரிப்புக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அந்த கட்டடத் தொகுதியில் கழிவுகள் சுத்திகரிப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கென சுத்திகரிப்பு இயந்திரங்களும் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படவுள்ளன. (இ-15-5)

## தமிழ்க்கட்சிகளிடையே.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலகங்களில் இருக்கும் அரசாங்க அதிகாரிகளைவிட சகல மட்ட மக்களினதும் கஷ்டங்களையும் அவர்களுக்கு உள்ள குறைகளையும் அதிகம் அறியும் வாய்ப்பு தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கே உண்டு. மக்களின் கஷ்டங்களை, துன்பங்களை குறைகளை வெளியே சொல்லி நிவாரணம் பெற்றுத் தரவில்லையானால் மக்கள் இவர்கள் மீது கோபப்படுவார்கள். நீங்களும் அரசாங்க அதிகாரிகள் போலச் சாய்ந்தாடும் பொம்மைகள் ஆகிவிட்டீர்களா என்று கோபிப்பார்கள். உங்கள் சேவையால் - தொண்டால் - எங்களுக்கு என்ன பயன் என்று கேட்பார்கள். ஆனால் உள்ளதைச் சொல்லப் போகும் வேளையில் காரசாரமான, காட்டமான சொற்களையும் கண்டனங்களையும் விமர்சனங்களையும் கேட்க நேரிடுவது தவிர்க்க முடியாததே.

கலந்துரையாடலின் போது சில நிமிட நேரம் நிலவிய நிசப்தத்தைக் குலைக்கும் வகையில், நிலைமையைப் புரிந்து கொண்டு, நிதானமாகவும் சாதுரியமாகவும் பேசி தொண்டர் நிறுவனங்களின் நிலையை விளக்கி சுமுகமான சூழலைத் தோற்றுவித்தார் பேராசிரியா வி.கே.கணேசலிங்கம்.

அவரைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் சற்று விவரமாக விளக்கமளித்தார். அவர் சொன்னார்:-

நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர். எமக்கு எந்த அரசியல் அமைப்புடனுமோ தொடர்பில்லை. நாம் சுயேச்சையாகவே செயற்படுகிறோம். சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் கஷ்டங்களை நேரில் அறிந்தவர்கள் நாங்கள்.அவர்கள படும அவலங்களை, கஷ்டங்களை விருப்பு, வெறுப்பு இன்றி சுட்டிக் காட்டுவது எங்கள் கடமை என்றார்.

அவரைத் தொடர்ந்து ஏனைய பிரதிநிதிகள் மக்களுக்கு உள்ள கஷ்டங்களையும் அவர்களின் இயலாமையையும் விடயவாரியாக, விலாவாரியாக இராணுவ உயர் அதிகாரிகள் முன்வைத்தனர்.

இராணுவ அதிகாரிகள் அவற்றுக்குப் பதிலளிக்க வெகுதயாராக வந்தவர்கள் போல கேள்வி கேட்டவரிடம் தாமும் திருப்பிக் கேள்விகள் கேட்டுப் பதில்களும் தந்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உறுதி அளித்தார்கள்.

குடாநாட்டின் கல்விநிலை ஆராயப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இப்போது கல்வி நிலை பின்னடைந்து விட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. பல பாடசாலைகள் திருத்தி அமைக்கப் படாததாலும் போதிய ஆசிரியர்கள் இல்லாததாலும் உரியகாலத்தில் பாடப் புத்தகங்கள், பாடவிதானங்கள் கிடைக்காமையாலும் இத்தகைய பின்னடைவு நிலை உருவாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி.வடக்கின் முன்னணிப் பாடசாலைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்க முடியாத நிலையை நீக்கி அவை அங்கு இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் படைத்தரப்பினிடம் கேட்கப்பட்டது.

படைத்தரப்பினர் தமது பதிலில்-

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் 60 சதவீதத்தினர் சித்தி அடைந்திருப்பது குறித்தும் தென்னிலங்கையின் மாவட்டங்கள் பல சராசரி 30 அல்லது 40 சதவீத சித்தியே கண்டிருப்பதாக புள்ளிவிவரங்களை காட்டித் தெரிவித்தனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரம், பல்கலைக்கழக அனுமதியில் வீழ்ச்சி நிலை உள்ளதாகவும், ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில்கூட இதற்கு முன்னர் சித்தியடைவோர் வீதம் 64ஐ விடவும் அதிகமாகவே இருந்ததாகவும் அவையினர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலைகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. குடிதண்ணீர் வசதி போன்றனவும் செய்யப்படுகின்றன. விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்றைய தேவைகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று படைத்தரப்பில் தொகுப்புரையாக தெரிவிக்கப்பட்டது.

இது போன்றே விவசாயம், சுகாதாரம், மருந்து, மீன்பிடி போக்குவரத்து, வியாபாரம் ஆகிய துறைகளில் உண்டான பின்னடைவுகள், மக்கள்படும் கஷ்டங்கள் என்பன படை அதிகாரிகளின் கவனத்துக்கு முன்வைக்கப்பட்டன.

தென்மராட்சியில் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போது, படை அதிகாரி ஒருவர் குறுக்கிட்டு, அந்த வயல்கள் எங்கே உள்ளன எவ்வளவு ஏக்கர் என்று விவரம் தரமுடியுமா என்று கேட்டார்.

இவ்வாறு அனேகமாக எல்லா விடயங்களும் ஆராயப்பட்ட போது குறுக்குக் கேள்விகள் வந்து விழுந்ததாகவும் பின்னர் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் விவரிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. பல சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக் காரணம் கருதி சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரிசிவிலை உயர்வு, மருந்து விலைகள் உயர்வு, அளவுக்கு அதிகமான மருந்தகங்கள், அரச ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு, தென்மராட்சியில் இருந்து தேங்காய்கள் கொண்டு வரும்போது நடத்தப்படும் சோதனைகளால் அவற்றுக்கு அதிக விலை கொடுக்க நேரிடுவது, மீன்பிடித் தொழில் மீதான கட்டுப்பாடுகள், நாகர் கோயில் - மருதங்கேணிப் பகுதிக்குத் தொண்டர் நிறுவனங்கள் செல்ல முடியாதநிலை, வல்லிபுரக் கோயில் பகுதிப் பாதுகாப்பு, கோப்பாய், கைதடி வீதியில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை என்று இன்னோரன்ன பல விடயங்கள் கலந்துரையாடலினபோது ஆராயப்பட்டன, விவாதிக்கப்பட்டன.

சுமார் 20,000 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமர முடியவில்லை. அக்குடும்பங்களைச் சேர்ந்தோர் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிறுவர்களைச் சிறுதொழில்கள் செய்வதற்குப் பெற்றோர் அனுப்புகின்றனர். மொத்தம் 44 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந்த 20,000 குடும்பத்தினரும் ஆவர். அவர்களில் வலி வடக்கைச் சேர்ந்த 33 கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்ந்த மக்களும் அடங்குவர் –

அவர்களை சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்க வேண்டும் இல்லையேல் அவர்களது பயிர்நிலத்துக்கும் குடியிருப்பு நிலத்துக்கும் அரசு மாத வாடகைப் பணம் அல்லது குத்தகை செலுத்த வேண்டும் – என்று ஒன்றியத்தின் சார்பில் படை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

33 கிராம சேவகர் பிரிவுகள் வலி வடக்கைச் சேர்ந்தவை என்றதும் படைத்தரப்பினர் சற்றுக் கடினப் போக்கைக் காட்டத்தொடங்கினர். வார்த்தைகள் வேகத்துடன் வந்து விழுந்தன.

பாதுகாப்புக் காரணம் கருதி அவர்களை மீளக் குடியமர அனுமதிக்க முடியாது. குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பினாற்கூட 25 வருடங்களுக்கு நிலைமையை அவதானித்த பின்னரே அவர்களை அங்கு மீளக்குடியமர்த்த முடியும். தங்கள் காணிகளை சுவீகரிப்பதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க முடியும். வேறு பகுதிகளில் அவர்கள் குடியமரவிரும்பினால் வீடு கட்டுவதற்கு உதவி செய்யலாம் – என்று படை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் –

1,500 புசல் விதை நெல் கொண்டு வர ஏற்பாடு செய்தல்,ஜெய்ப்பூர் நிலையத்துக்குத் தேவையான பிளாஸ்ரிக் மற்றும் அலுமினியம் கொண்டுவர பாதுகாப்பு அனுமதி வழங்குதல், கோப் பாய் - கைதடி வீதியால் லொறிகள் செல்ல அனுமதித்தல், ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகளைத் தாராளமாக அனுப்பநடவடிக்கை எடுத்தல், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் சுகாதார நிலையங்களை நடத்துவது குறித்து விரிவாக ஆராய்தல், தொண்டர் நிறுவனங்களைச் சோந்த அதிகாரிகள் கொழும்பு செல்வதற்கு ஒரு தடவை பாதுகாப்பு அனுமதி பெற்றால் மீண்டும் குறிப்பிட்ட காலத்திற்கு அதனைக் கொண்டு கொழும்பு செல்ல அனுமதித்தல், விலை உயர்வைக் கண்காணிக்க விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள படைத்தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

தொண்டர் நிறுவனங்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களைத் தக்கவாறு கவனத்தில் எடுத்து, மக்களின் கஷ்டங்களை அறிவதில் அக்கறையுடன் ஈடுபாடுகாட்டி சுமுகமான சூழ்நிலையில் கலந்துரையாடல் நடைபெற்றமையைக் குறிப்பிட்டு தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண எஸ். ஜெபநேசன் நன்றி தெரிவிக்கும் வகையில் பேசினார்.

அடிக்கடி காரசாரம் இருந்தாலும் கலந்துரையாடல் கலகலப்பாக பயனுள்ளதாக அமைந்ததாக அதில் கலந்து கொண்ட பிரமுகர்களில் பலரும் கருத்து வெளியிட்டனர்.

* * *

### நல்ல செய்தி

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் 90ஆயிரம் குடும்பங்களின் நிவாரணத்தை நிறுத்துவது என்ற அரசாங்கத்தின் முடிவு பரிசீலனையின்றி நிறைவேற்றப்படுமா? என்று சம்பந்தப்பட்ட மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு விரைவில் நல்ல செய்தி வரலாம் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில நிவாரணமபெறுவோர் தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு செலுத்தக்கூடிய வருமானம் பெறும் நிலை உருவாகும்வரை, இவர்களுக்கு நிவாரணத்தை தொடர்ந்து வழங்க அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யுமாறு யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்னா அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

51ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஆர்.மாரம்பே வலிகாமம் வடக்கு பிரதேசசபைத் தலைவர் சு.ஸ்ரீபாஸ்கரனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இந்த நல்ல செய்தியை தெரிவித்திருக்கிறார்.

நிவாரண நிறுத்தம் குறித்து ஜனாதிபதிக்கு தாம் அனுப்பிய மகஜரின் பிரதிகளை, வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர்," யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத்தளபதிக்கும் 51ஆவது படையணித்தளபதிக்கும் அனுப்பியிருந்தார். அதன் நிமித்தமே மேஜர் ஜெனரல் மாரம்பே பிரதேச சபைத் தலைவர் பாஸ்கரனுக்கு பதில் அனுப்பியிருந்தார். பிரஸ்தாபக் கடிதம கடந்த ஜூலை மாதம் 17ஆம் திகதி எழுதப்பட்டதாகும்.

அனேகமாக இதேகாலத்தில் கொழும்பிலும் குடாநாட்டு மக்களின் நிவாரணத்தை நிறுத்துவது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று யாழ்.அரசாங்கஅதிபர் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருந்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சில நாள்களுக்கு முன்னர் நிவாரணத்தை தொடர்ந்து வழங்க அரசாங்க உயர் மட்டத்தில் கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டதாகவும் இது சம்பந்தமான உத்தியோகபூர்வமான உத்தரவு எப்போதும் வெளிவரலாம் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

அரசாங்கம் கொள்கையளவில் மேற்கொண்ட முடிவு அனேகமாக மாற்றப்படமாட்டாது என்பதால் யாழ்ப்பாண மக்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் கிடைக்கும் என நம்ப இடமுண்டு. *

## திருமணப் பொன்விழாத் தம்பதிகள்



### திரு. வேலுப்பிள்ளை கந்தையா
### திருமதி கந்தையா கனகம்மா
தம்பதிகள்

அன்று போல் இன்றும்
இன்பமுடன் வாழும் நீங்கள்
இன்று போல் என்றும்
இன்பமுடன் வாழப்
பிரார்த்திக்கின்றோம்.

ஜீவரெட்ணம், கல்யாணி, பாமினி, பபிதா, நிரஞ்சன் (திருகோணமலை)
தர்மகுலசிங்கம், நீலலோஜனி, பிரியா, காயத்திரி (சீமெந்துக் கூட்டுத்தாபனம்-யாழ்ப்பாணம்)
புவிராஜசிங்கம், லீலா, தர்ஷிகா, ஜீவிதா (கனடா)
ராஜகுலசிங்கம், மணிமேகலை, யாதவன், யாழினி (கனடா)
விஜயகுலசிங்கம், கீதாஞ்சலி, வைஷ்ணவி, பிரணவன் (கனடா)
ரவீந்திரன், செல்வஜோதி, ரவிவர்மன், அஸ்வினி (கனடா)
சிவந்தன், புஷ்பஜோதி (கனடா)
Dr.பஞ்சகுலசிங்கம், மூனிக்கா, சிவகாமி, சித்தார்தா (நோர்வே)
இளங்கோ, பிறேமஜோதி (அமெரிக்கா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

உள்ளூராட்சிச சபைகளுக்கான தேர்தல்கள் நடக்க இருந்தபோதே குடாநாட்டைப் பொறுத்தவரை இங்குள்ள சூழ்நிலையில அது ஒரு 'நொண்டிக் கழுதையாகவே' இருக்கும் என்று பலதரப்பாலும் எடுத்துக் கூறப்பட்டது.

ஆனால் அதில் குதிரைச் சவாரி விடப்போவதாக பிரகடனப்படுத்திக் கொண்டுவந்த ஜனநாயகக் கட்சியினரின் நிர்வாகத் திறமைக்கு இது ஒரு சாம்பிள். உள்ளூராட்சி நிர்வாகங்கள் என்ற பெயரில் நடக்கும் திருகுதாளங்களுக்கு இது ஓர் உதாரணம்.

திருநெல்வேலிச் சந்தையில் இயங்கும் இரண்டு கடைகள் நல்லூர் பிரதேச சபையினரால் கடந்த வாரம் 'சீல்' வைக்கப்பட்டன. ஏன் என்று விசாரித்துப் பார்த்ததில் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் இருவரும் பிரதேசசபையை தமது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டதாகவும், அதற்குச் செல்லத் தவறியமைக்காக - அல்லது குறிப்பிட்ட நேரத்துக்குத் தாமதமாகச் சென்றதற்காக - எடுக்கப்பட்ட நடவடிக்கை அது என்று முதலில் கூறப்பட்டது.

ஏன் அங்கு அழைக்கப்பட்டார்கள் என்பதை விசாரித்த போது மேலும் அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்தன.

சந்தைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் கடைகளுக்கு சந்தைக் குத்தகைக்காரர்களினால் தினசரி வரி அறவிடப்படுகின்றது. இந்த வரிக்கு மேலதிகமாக உருளைக்கிழங்கு போன்றவற்றுக்கு விசேட வரி ஒன்றும் (எந்தச் சட்ட ஏற்பாடுகளுக்குக் கீழ் என்று விளங்கவில்லை) அறவிடப்படுகின்றது.

சந்தையில் விற்கும் பொருள்களுக்கு வரி அறவிடுவது சந்தைக் குத்தகைக்காரர்கள்தான். அது தவறல்ல. ரசீது கூட கொடுக்கிறார்கள் - குருநகரில் ஒரு பொது அமைப்பு உள்ளதாகக் குறிப்பிட்டு அதன் பெயரில்.

அந்த பொது அமைப்பின் பெயரில்தான் ஜனநாயகவாதிகள் குத்தகையை எடுத்திருக்கின்றார்கள் போல் தோன்றுகின்றது.

தினசரி வரி கட்டும் வியாபாரிகளில் சிலர் 'உருளைக்கிழங்குக்கு என தனியாக 'கிரி' கட்டத் தயாராக இல்லை. அது தவறு. பகற் கொள்ளை!'- என்று ஆட்சேபித்திருக்கின்றார்கள். அவ்வளவுதான். அவர்களை ஜனநாயகக் கட்சி அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு. போகத் தவறியதற்காக பிரதேச சபையின் பெயரில் கடை 'சீல்' செய்யப்பட்டிருக்கின்றது.

காலையில் கடையை வந்து பார்த்த - சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் - வேறு வழியின்றி, 'ஜனநாயகம் பேணும் பண்பை மெச்சியவாறே' கட்சி அலுவலகத்துக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி, கொடுக்கிறதைக் கொடுத்து ஒருவாறு சீலை அகற்றி வர்த்தகத்தைத் தொடருகின்றார்கள்.

இந்த விடயம் குறித்து விளக்கம் கேட்க நல்லூர் பிரதேச சபைக்குள் சென்றோம். தலைவர் எப்போது வருவார் எனத் தெரியாது என்றார்கள். செயலாளர் லீவில் என்றார்கள். பொறுப்பாக இருந்த அம்மணி 'கடைகள் சீல் வைத்துத் திறந்தது உண்மைதான். ஏன் அப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை, தலைவரின் உத்தரவின்றி செய்திருக்க மாட்டார்கள். அவர் வந்தால் கேட்டுச் சொல்கிறேன்' என்றார்.

சரி. பிரதேசசபைக்கு ஒழுங்காக வராத தலைவருடன் (பாதுகாப்புப் பிரச்சினைகள் காரணமாக இருக்கலாம்) தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றோம். அவர் 'பிஸி'யாக இருப்பதாகச் சொன்னார்கள். தொடர்பு கிட்டவில்லை.

எங்களுக்கு (பொதுமக்களுக்கும் கூடத்தான்) தேவையானதெல்லாம் சில விளக்கங்கள்தான்.

* அது என்ன உருளைக்கிழங்கு வரி?
* அந்த வரியை அறிவிடுவது யார்? எந்தச் சட்ட ஏற்பாடு அல்லது உபவிதிக்குக் கீழ் அத்தகைய வரி அறிவிடப்படுகின்றது?
* பிரதேச சபை அத்தகைய வரியை அறவிடுகின்றதாயின், ஏன் பிரதேச சபையினால் ரசீது வழங்கப்படவில்லை. அறவிடப்படும் வரிப்பணம் எங்கு செல்கின்றது?
* குத்தகைக்காரரினால் வரி அறவிடுவதாயின் அந்த வரி சம்பந்தமான பிரச்சினைக்கு பிரதேசசபை ஏன் கடைகளை 'சீல்' வைக்க வேண்டும்?
* குத்தகைக்காரரின் வரிப்பிரச்சினைக்கு கட்சி (இயக்க) அலுவலகத்துக்கு வர்த்தகர்கள் அழைக்கப்பட்டது ஏன்?
* வரி கட்டுவதில் சிக்கல் இருந்தால் அது குறித்து சம்பந்தப்பட்ட கடைக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எழுத்து மூலம் அறிவுறுத்தல் ஏதும் வழங்கப்பட்டதா? வரிப் பிரச்சினைக்காக கடையை சீல் வைக்க முன்னர் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் சரிவர பின்பற்றப் பட்டனவா?

- இன்னோரன்ன கேள்விகளுக்கு சம்பந்தப்பட்டோர் விளக்கம் தருவது நல்லது. உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவது வரவேற்கத்தக்கது!

* * * *

குடாநாட்டின் தேசிய கலாசாரத் திருவிழா என்று கருதப்படும் நல்லூர்த் திருவிழா நெருங்கிவிட்டது. மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய இந்த நிகழ்வு குறித்து சமூக அக்கறையுள்ள பலரும் கவலை கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி சமூகத்தை சரியான வழியில் இயக்கத் தக்கவர்கள் விலகிப்போன ஆண்டுகளில் இருந்தே நல்லூர்த் திருவிழா கலாசாரத் திருவிழா என்ற நிலையைத் தாண்டி கலாசாரச் சீரழிவுத் திருவிழாவாக மாறி வருகின்றது.

இளைஞர்களும், யுவதிகளும் கூட்டங் கூட்டமாக வந்து கும்மாளம் கொட்டி, கூச்சலிட்டு, கலவரப்படுத்தி, ஆரவாரம் பண்ணி, கொட்டம் போடும் இடமாக ஆலயச் சுற்றாடலைப் பயன்படுத்துவது வேதனை தருகின்றது.

கோஷ்டி கோஷ்டியாக அலைந்து கிண்டல் - நளினம் பண்ணுவது, மோதல்களில் ஈடுபடுவது, அடிதடி, கத்திக்குத்து என்று அட்டகாசம் புரிவது எல்லாம் சகிக்க முடியாதவை.

புனிதம் பேண வேண்டிய ஆலயச் சுற்றாடலை கேளிகைத் தலமாக்கி, நமது வழிபாட்டு மையங்களையே கலாசாரச் சீரழிவுக்குரிய இடமாக மாற்றும் இந்தப் போக்குப் பெரிய அளவில் இடம்பெற்றுவர நமது சமயமும் சமய, சமூக அமைப்புகளும் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றன.

இந்த முறையாவது இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்னேற்பாடு செய்யப்பட்டதாக இதுவரை தெரியவில்லை.

யாரேனும் முன்முயற்சி எடுப்பார்களா?

சமய கலாசாரத்தில் அக்கறை உள்ளவர்களின் ஆதங்கம் இது.

* * * *

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் படையினரின் தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ளது. அந்த ஆலயத்தில் தற்சமயம் நடைபெறும் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக தினமும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் செல்கின்றார்கள்.

அவர்கள் தெல்லிப்பழை சோதனைத்தடை முகாமில் தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்து அங்கு வழங்கப்படும் துண்டு ஒன்றுடன் ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். பின்னர் வந்து அடையாள அட்டையை பெறவேண்டும். அதுதான் ஏற்பாடு.

அடையாள அட்டை ஒப்படைக்கவும் மீண்டும் பெறுவதற்கும் பக்தர்கள் நீண்டநேரம் - மணிக்கணக்காக - கொளுத்தும் வெய்யிலில் காத்துக்கிடக்கும் பரிதாபநிலை.

ஆண்களும் சரி, பெண்களும் சரி சிறு குழந்தைகளுடன் மணிக்கணக்கில் அங்கு கியூவில் நிற்கவேண்டும்.

வெயிலில் காய்ந்து இப்படிக் கடவுள் கும்பிடவேண்டுமா என்பது ஒரு விவகாரம். கடந்த காலங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் உற்சவத்துக்கு செல்லும் பக்தர்களுக்கு குடி தண்ணீர், சுகாதார வசதிகளை வலி. வடக்கு பிரதேச செயலகமே வழங்கிவருவது வழக்கம். ஆலயத்தில் பிரதேச செயலகம் அலுவலகத்தைக் கூட அமைத்து செயற்படுவதும் வழமை.

தற்போது அத்தகைய சூழ்நிலை இல்லை. எனவே குறைந்த பட்சம் அடையாள அட்டை ஒப்படைத்துத் துண்டு பெறுவதற்காக காத்துக்கிடக்கும் பொதுமக்கள் தங்குவதற்கு - தரித்துச் செல்வதற்கு - சீற்றுக் கொட்டகையாவது பிரதேச செயலகம் அமைத்துக் கொடுத்திருக்கலாமே?

பக்தர்களை வெயிலில் வாட்டி எடுப்பதைத் தவிர்ப்பதற்காக போதிய ஏற்பாடுகளைப் படைத்தரப்பாவது செய்திருக்கலாம் என்று ஆலயம் சென்று வந்த பக்தர்கள் சொல்கிறார்கள்.

* * * *

வைத்தியத் துறையில் இடம் பெறும் சமூக விரோதப் போக்கு ஒன்று குறித்து மருத்துவ மாணவர்கள் சிலர் சுட்டிக்காட்டிய தகவல்கள் இவை:-

குடாநாட்டில் ஆங்கில மருத்துவத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தித் தினசரி போலி டாக்டர்கள் பலர் குடாநாட்டில் உருவாகி வருகின்றார்கள். இவர்களால் பெரும் சமூகச் சீரழிவு ஏற்பட்டு வருகின்றது.

வைத்தியரின் மகனாக இருப்பது, சித்த மருத்துவத்துறைக் கல்வியுடன் தொடர்புபட்டிருப்பது, தனியார் ஆயுர்வேதக் கல்லூரிகளில் மாணவர்களாகச் சேர்ந்து கொள்வது அல்லது ஏதாவதொரு வைத்தியசாலையில் மருந்து கட்டுபவராக அன்றி தாதியர் உத்தியோகத்தராக பணியாற்றி இருப்பது போன்றவை ஆங்கில வைத்தியத்துறை பற்றிய சில விடயங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.

இத்தகைய அறிவை வைத்துக் கொண்டு சிலர் பட்டம் பெற்ற ஆங்கில வைத்தியர் போன்று ஆங்கில மருத்துவ சிகிச்சை அளிப்பது - ஏன் வைத்தியசாலைகளையே உருவாக்கி நிர்வகிப்பது - ஆபத்தான விடயமாக மாறியுள்ளது.

ஆயுர்வேத, சித்த மருத்துவத்துறைகளில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் பக்கவிளைவுகள் குறைந்தவை. ஆனால் ஆங்கில மருத்துவத் துறையின் மருந்து வகைகள் மிகுந்த பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. உரிய சான்றிதழ் பெற்ற மருத்துவர்களின் சிபாரிசுப்படி, - உரிய பிரமாணப் பிரகாரம் - பயன்படுத்தப்பட வேண்டியவை. இல்லாவிடில் பாரதூரமான பக்கவிளைவை அவை ஏற்படுத்திவிடும்.

சில நோய்க்கிருமிகள் ஒரே வகையான மருந்துப் பாவனைகளினால் அத்தகைய மருந்துகளுக்கு எதிரான எதிர்ப்புச்சக்திகளைப் பெற்று வருகின்றன. இத்தகைய கிருமிகள் விடயங்களில் உயர் சக்தி கொண்ட மருந்துகள் தேவைப்படுகின்றன. இந்த மருந்துகளை உரிய அளவில் - உரிய பிரமாணப்படி பயன்படுத்த வேண்டும். இல்லையேல் பக்கவிளைவு மோசமாக இருக்கும்.

அத்தோடு சில தமிழ் வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளைத் தூளாக்கி அல்லது வேறு வடிவத்தில் மருந்தாக்கித் தமக்குத் தோன்றிய அளவுகளில் தமிழ் மருந்து போன்று வழங்குகின்றார்கள்.

வைத்தியத்துறையை வியாபாரத்துறையாக்கும் இத்தகைய போலி மருத்துவர்கள் குறித்து உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதன் பாதிப்புக்கு சமூகம் உயர்விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

இத்தகைய போலி டாக்டர்கள் குறித்து தகவல் தெரிந்தோர் -

அல்லது யாரேனும் டாக்டர்களாகக் கடமையாற்றுவோர் குறித்து சந்தேகம் கொள்வோர் -

அது குறித்து சுகாதாரப் பிரிவினருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துவது நல்லது.

அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பது வேறு விடயம்.

—மின்னல்

## சிவநேசனுக்கு பரிசு

யாழ்ப்பாணம், ஒக.7

இலங்கை நிதி நிறுவன ஊழியர்களுக்கு இடையில் வங்கியாளர் பட்டய நிறுவனம் நடத்திய கட்டுரைப் போட்டியில் தமிழ்ப் பிரிவில் மக்கள் வங்கி, யாழ்.பிரதேச அலுவலக அதிகாரி மு.சிவநேசன் சிறந்த கட்டுரைக்கான விருதைப் பெற்றிருக்கின்றார்.

'புத்தாயிரமாம் ஆண்டில் வங்கி வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள்' என்ற தலைப்பில் இக்கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது.

'சஞ்சீவி' உட்பட பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் பலதுறை சார்ந்த கட்டுரைகள், கதைகள், நாவல்கள் வரைந்து வரும் மு.சிவநேசன் யாழ் குடாநாடு அண்மைக் காலத்தில் அடையாளம் கண்ட கட்டுரையாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

வங்கியாளர் கட்டுரைப் போட்டியில் அவருக்கு ஐயாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி மாலை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜெயவர்த்தனா இவருக்கான பரிசில்களை வழங்குவார்.

(உ)

## இன்று

கைதடி, ஒகஸ்ட்7

கைதடி மத்தி குமரநகர் முன்பள்ளி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்விப்பூங்கா மைதானத்தில் வளர்ச்சிக்குழுத் தலைவர் க.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.சத்தியநாதனும் கலந்து கொள்வர். (ஜ-74)

* * *

வலிமேற்கு, ஒகஸ்ட்7

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இன்று தொடக்கம் அடுத்தமாதம் 5ஆம் திகதிவரை சனி ஞாயிறு தினங்களில் பி.ப 3 மணியளவில் போசாக்கு கல்வி நிகழ்ச்சித்திட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலிமேற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ச.பரமேஸ்வரநாதன் மேற்கொண்டுள்ளார். பண்ணாகம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கு 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஜ-175)

* * *

யாழ்ப்பாணம், ஒகஸ்ட்7

அராலி மத்தி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கழக மைதானத்தில் தலைவர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந.திருலோகநாதன் பிரதம விருந்தினராகவும் வலி மேற்கு பிரதேச செயலாளர் நா.சந்திரராசா முதன்மைச் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இன்றைய நிகழ்வில் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டியும் இடம் பெறும்.

(க)

* * *

யாழ்ப்பாணம், ஒகஸ்ட்7

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரின் 82 ஆவது ஜெயந்தி தின விழா இன்று பி.ப 2 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முருகப்பெருமான் அகத்திய மாமுனிவருக்கு உபதேசம் செய்த 'பசுவின் மகிமை' என்ற நூல் சண்டேசுர நாயனார் சரித்திரம், திருமூலர் சரித்திரம் ஆகியவற்றின் இணைப்புடன் வெளியிடப் படவுள்ளது.

(ஜ-5)

* * *

அரியாலை, ஒகஸ்ட்7

பட்டதாரி பயிற்சித்திட்டத்தின் கீழ் 1971ஆம் 1976ஆம் ஆண்டிற்கு இடையில் நியமனம் பெற்ற அரச அலுவலர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு வைமன் வீதியிலுள்ள கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் இடம்பெறும். (ஜ-17)

* * *

யாழ்ப்பாணம், ஒகஸ்ட்7

சுழிபுரம் மேற்கு கலைமகள் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் ஒரு மணியளவில் பா.மதனகோபால் தலைமையில் நிலைய முன்றலில் இடம்பெறும்.

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் நா.திருலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஜ-ரி)


உ

சர்வம் சிவமயம் ஜெகத்

**இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணம்**
**நல்லூர் சிவன் கோயிலில்**
நடத்தும்
**ஸ்ரீசிவ மஹாயாகம்**

இடம்: **நல்லூர் சிவன் கோயில்**
நாள்: **08,09-08-1999** ஞாயிறு, திங்கள்.
கிரியா விவரம்:-

**ஆடிமாதம் 23 ஆந் திகதி (08~08~99) ஞாயிற்றுக்கிழமை**

காலை 9.00 மணி அநுக்ஞை, விநாயக வழிபாடு, நவக்கிரக வழிபாடு.
மாலை 3.00 மணி வாஸ்துசாந்தி, 108 கலச பூர்வாங்க பூஜை, அக்கினி உத்பவம்.

**ஆடி மாதம் 24 ஆம் திகதி (09~08~99) திங்கட்கிழமை**

காலை 7.00 மணி ஸ்ரீ ருத்ரஹோமம்.
10.30 மணி 108 கலச சங்காபிசேகம்
12.00 மணி திருவருட் பிரசாதம் வழங்குதல்
மாலை 4.00 மணி விசேட பூஜை, உள்வீதி உற்சவம்.

*** அன்பர்கள் பால், தயிர், இளநீர், நெய், புஷ்பங்கள் கொடுத்துதவி திருவருள் பெறுக**

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

இந் நிகழ்ச்சியில் அனைத்து அந்தணப் பெருமக்கள், ஆலய அறங்காவலர்கள், இந்து சமய நிறுவனப் பிரமுகர்கள், கல்விமான்கள், வர்த்தகப் பெருமக்கள், பெரியோர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

அருட்சபி. சீ. வினாசித்தம்பி
தலைவர்

சி. சக்திகிரீவன்
[illegible]

(688)


## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒகஸ்ட்7

சாந்தனின் இரு நூல்கள் இம்மாதம் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் முன்னணிப் பதிப்பாளர்களான 'நர்மதா' பதிப்பகம் அவருடைய 'ஒரு பிடி மண்' என்ற தொகுதியை சென்னையில் வெளியிட்டுள்ளது.

சாந்தன் கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்புத்தொகுதி ஒன்றை கொழும்பிலுள்ள கொடகே பிரசுராலயம் வெளியிட்டுள்ளது. தேசிய இனப் பிரச்சினை பற்றிய கதைகளின் தொகுதி இது. 'மனிதர்களும் மனிதர்களும்' என்ற இத்தொகுதியை விமல் சாமிநாதன் மொழிபெயர்த்துள்ளார்.

(ஐ)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஒகஸ்ட்7

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் சதுரங்கச் சுற்றுப் போட்டி இன்று காலை 9மணிக்கு பல் கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

அணிகளுக்கிடையிலான போட்டிகள் இன்றும், நாளையும் -

தனிநபர்களுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 14ஆம், 15ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளிலும் - நடை[illegible] என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை தினத்தை விடுமுறையாக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.7

இந்துக்களின் முக்கிய விரத தினங்களில்ஒன்றான ஆடி அமாவாசை விரத தினத்தை விடுமுறை தினமாக அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று சைவபரிபாலன சபை உட்பட பல இந்து அமைப்புக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்து ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஆடி அமாவாசை தினம் தேசிய விடு முறைத் தினமாக நடைமுறையில் இருந்தது என்றும் -

ஆனால் பின்னர் அந்த விடு முறை தேசிய விடுமுறைப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டது என்றும- அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேநேரம் குடாநாட்டில் ஆடி அமாவாசை தினம் பிரகடனப்படுத்தப் படாத விடுமுறை தினமாகவே அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது என்றும் -

கண்டி பெரஹரவின் இறுதி நாளை உள்ளூர் விடுமுறை நாளாக மாற்று ஏற்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தும் திட்டத்தைப் போன்று யாழ். மாவட்டத்திலும் ஆடி அமாவாசை தினத்தன்று விடுமுறையை வழங்க முடியும் என்றும் - அந்த அமைப்புக்கள் கூறியுள்ளன.

அதேபோன்று தேசிய திருவிழாவான நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவையும் தேசிய விடுமுறையாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன.

இதே கோரிக்கையை முன்வைத்து குடாநாட்டிலுள்ள பல சைவ அமைப்புக்கள் அரசுக்கு மகஜர்கள் அனுப்பியுள்ளன. (ஐ-3-ரீ)

## அஸ்தி நல்லடக்கம்



### பிரான்சிஸ்கா பிலிப்ஸ்

(முத்தம்மா)

புலோலி தெற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற வ.அ.பிலிப்ஸின் (ஆசிரியர்) அன்பு மனைவி பிரான்சிஸ்கா முத்தம்மா பிலிப்ஸ் 22.05.99இல் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் அஸ்தி 09-08-99இல் புலோலி புனித சூசையப்பர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, காலை 10.30 மணி திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:-
அருட்திரு. இம்மானுவேல் யேசுதாசன்
அ.ம.தி
(மகன்)

'தொடர்பகம்'
657/1, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(68025)

## நல்லடக்க ஆராதனை

**சகோதரன் சிவசம்பு ஆனந்தராஜா (பவுல்)**

(தேவ ஊழியன், எபனேசர் ஜெப ஆலயம், வட்டுக்கோட்டை)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது சபையின் ஊழியன் - சகோதரன் சிவசம்பு ஆனந்தராஜா அவர்களின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (7.8.99) பி.ப 3.00 மணி (இலங்கை நேரம்) 6/4, மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போதகர்கள், சபையார், ஊழியர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

எபனேசர் ஜெப ஆலயம்,
வட்டுக்கோட்டை.

தகவல்:-
போதகர், ஊழியர்கள், விசுவாசிகள்

(68028)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் உதயராசா

(பாரதிபதிப்பகம் யாழ்ப்பாணம்)

அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட உதயன் என அன்பாக அழைக்கப்படும் உதயராசா காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இராசம்மாவின் அன்பு மகனும் கலாமாலினியின் அன்புக் கணவரும் ஐயாத்துரை - பரமேஸ்வரியின் மருமகனும் தர்மேந்திரன், சர்மிலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமார், வசந்தகுமாரி, பாலச்சந்திரன், தருமராசா, சாந்தகுமாரி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வி.கதிர்காமநாதன், உ.சந்திரபவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 64,குகன் வீதியிலிருக்கும் இல்லத்தில் இன்று (07-08-99) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

64,குகன் வீதி,
அரியாலை.

தகவல்:
உ.தர்மேந்திரன்,
(மகன்)

(68032)

### நாகலிங்கம் பொன்னுச்சாமி

(பிரபல வர்த்தகர்)

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் பொன்னுச்சாமி 06-08-99 வெள்ளியன்று மன்னாரில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08-08-99) ஞாயிறன்று மன்னாரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கணேசவாசா'
பத்திரகாளிகோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:-
அ.மோகன்,
(பேரன்)

(சி-8456)

### நடேசன் பரமேஸ்வரன்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கருகம்பனை காங்கேசன் துறையை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது ஸ்கந்தபுரத்தல் வசித்தவருமான நடேசன் பரமேஸ்வரன் (விதானையார்) 03-08-99 செவ்வாய்க்கிழமை ஸ்கந்தபுரத்தில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அமுதவல்லி(ஸ்கந்தபுரம்), சுந்தரவல்லி, ஞானவல்லி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் த.கந்தசாமி(ஸ்கந்தபுரம்), இ.கருணாகரன், ச.யோகராஜா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜித்தா, பகீரதன், சுரேகா, மதி, சசிகலா, பிரதீபன், சஜீவன், மேகலா, சங்கீதா, சபீனா, யோர்க், தயந்த் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-08-99 அன்று ஸ்கந்தபுரம் மயானத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
இ. கருணாகரன்
மருமகன்.

(சி-8457)

## விடுதலையானவர் தற்கொலை

வவுனியா,ஓக.7

இரண்டு வருடங்களாக களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு அண்மையில் விடுதலையான- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த - குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா பண்டாரிக்குளத்தில் நேற்றுமுன்தினம் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுப்பையா பாலகுமார் (வயது35) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இரண்டு வருடங்களுக்கு முன் பண்டாரிக்குளத்தில் வைத்து கைது செய்யப்பட்ட மேற்படி நபர், களுத்துறைச் சிறைக்கைதிகள் சிறைச்சாலையின் கூரை மீது ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களுடன் இணைந்து உண்ணாவிரதம் இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## பயணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது. ஆரம்பத்தில் இந்த ஏற்பாட்டுக்கு படைத்தரப்பினர் இணங்கவில்லை.

இந்த விடயம் தொடர்பான நிலைமைகள் குறித்து அரசஅதிபர் வன்னிப் படைத் தளபதிக்கு அவ்வப்போது விளக்கி வந்தபோது இது தொடர்பாக உடன் தீர்வு காணும்படி பொதுமக்கள் விடுத்த முறையீடுகளையும் அவர் தெரிவித்து வந்தார்.

தங்களின் சொந்தப் பாதுகாப்புக்கு தாங்களே பொறுப்பு (At their Own Risk) என்ற இந்த சிவிலியன்களின் கருத்தின் அடிப்படையிலும், அவர்களுடைய நிலைப்பாட்டின் அடிப்படையிலும் முன்னணிக் காவலரண் பகுதி ஊடாக அவர்கள கடந்து செல்வதற்காக ஜூலை 28ஆம் திகதி அவற்றைத் திறப்பதற்கு வன்னிப் படைத் தளபதி இணங்கினார்.

வெளியேறும் பாதை மூன்று முறிப்புக்கும் துணுக்காய்க்கும் இடையிலிருக்கும் எனக் குறிப்பிட்டு, புலிகளுக்கு 28ஆம் திகதி காலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

சிவிலியன்கள் புறப்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு இரண்டு வாரங்களுக்குரிய உலர்உணவு வழங்கப்பட்டது.

எல்லையைக் கடக்கும் பிரதேசத்திற்குக் கிட்டவாக இருந்து இந்த விடயம் குறித்து இரண்டு மணி நேரத்துக்கு முன்னதாக வானொலி மற்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தோம்.

முதலில் மாலை 4.00மணிக்கு வெள்ளைக்கொடி தாங்கிய 25சிவிலியன்கள் – வெளியேறும் வாசல் ஊடாக – அனுப்பிவைக்கப்பட்டனர். 75பேரைக் கொண்ட அடுத்த குழு 4.15மணிக்கு புறப்பட்டது.

சுமார் 4.30 மணியளவில் சிவிலியன்களை நோக்கி புலிகள் சிறிய ஆயுதங்களால் வேட்டுக்களை தீர்த்து மோட்டார்களை ஏவினர். முதியவர்கள், சிறுவர்கள் உட்பட அச் சிவிலியன் குழுவினர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதோடு கத்திக் குழறி அழுதனர்.

வானொலி மூலம் புலிகளின் தலைவர்களுடன் அவர்கள் பேசி தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த இராணுவத்தினர் வசதி செய்தனர். ஆனால் அவர்களின் கோரிக்கையை புறந்தள்ளுவதில் புலிகள் பிடிவாதமாக இருந்தனர்.

தொடர்ந்து செல்லமுடியாத சிவிலியன்கள் தாம் சென்ற லொறிகள் மற்றும் பஸ்களிலேயே இரவு 9.00 மணியளவில் வவுனியா திரும்பினர். அவர்களுக்கான உணவை அரச அதிபர் [illegible] விளக்கமளிக்கப்பட்டது. (உ-7)

ராணி காமிக்ஸ்
ஜூலை மாதத்தின் புத்தகங்கள்
தற்போது விற்பனையில்
பாலன் புத்தக நிலையம்
87, சிவன்வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) (68024)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாதம் அன்னபூரணம்

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி சிவபாதம் அன்னபூரணம் 5.8.99 இல் காலமானார்.

இவர் ஐயாத்துரை சிவபாதம் (Retired Officer, Commercial Bank, Jaffna) அவர்களின் அன்பு மனைவியும் சத்தியா, Dr. ஆனந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் P.ராதாகிருஷ்ணனின் மாமியாரும் அஸ்ரகனின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.08.99) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மலாயா கொட்டேஜ்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:-
ஐ. சிவபாதம்
(கணவர்)

(68004)

### பத்மநாதன் தானியலெட்சுமி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், சரவணை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பத்மநாதனின் அன்பு மனைவி பத்மநாதன் தானியலெட்சுமி 4.8.99 இல் வவுனியாவில் அகாலமரணம் எய்தியுள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா. லோகநாதன் (துரைராசா)
(மைத்துனர்)
"நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ்,"
புளியங்கூடல்சந்தி.

சரவணை மேற்கு,
வேலணை

(68031)

### திருமதி கந்தசாமி நாகரத்தினம்

கொன்வென்ற் வியூ, வெள்ளைமாளிகை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்போது 604-9, கிறசென்ட் பிளேஸ், ரொறன்ரோ, கனடாவில் வசித்தவருமாகிய திருமதி கந்தசாமி நாகரத்தினம் 02.08.99 இல் காலமாகிவிட்டார்.

இவர் முருகுப்பிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி(ஆஸ்திரேலியா), திலகேஸ்வரி(கனடா), சாந்தினிமலர்(ஜேர்மனி), தவராஜா(லண்டன்), பிறேமா(கனடா), பிரதீபன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திகா(ஆஸ்திரேலியா), கோபாலராஜா(கனடா), சிவபாதம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். இவரது இறுதிக் கிரியைகள் ரொறன்ரோவில் (08.08.99) நாளை இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி இ. சிவலிங்கராஜா.

பத்தைமேனி,
அச்சுவேலி.

(68015)

### சுப்பையா பொன்னம்பலம்

சாவகச்சேரி பெரிய அரசடி சங்கத்தானையைச் சேர்ந்த சுப்பையா பொன்னம்பலம் 04.08.99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சரவணமுத்து (ஆசிரியர்), கௌரிப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிர்மலாதேவி, இன்பநாதன் (கனடா), காலஞ்சென்ற சீதாராணி, கனகரட்ணம் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), கனகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருணாசலம், புஸ்பராணி (கனடா), சதாலிங்கம் (ஜேர்மன்), செங்கமலச்செல்வி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும். அனுஷியா, பத்மாஜினி, பிரதீபன், பிருந்தனன், துளசிலா, சசிகரன், மிதிலா, வித்திஆரணி, அரண் செழியன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-08-99 நேற்று 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
க. அருணாசலம
(மருமகன்)

(68008)

### திருமதி கந்தையா பார்வதிப்பிள்ளை

**(சின்னத்தங்கம்)**

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் இல249, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பார்வதிப்பிள்ளை 5.8.99 வியாழன் அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் சின்னாச்சி அவர்களின் மகளும் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் பரராஜசிங்கம்(இந்தியா), மீனாட்சி(கனடா), செல்லம்மா(கனடா), மங்கையர்கரசி (கனடா), விவேகானந்தன்(கொழும்பு), புனிதவதி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயும் திருமேனி, பரநிருபசிங்கம், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, காலஞ்சென்ற நமசிவாயம் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், தம்பிப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லம்மா, செங்கமலம், காலஞ்சென்ற முத்துவேலு ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிருபநாதன், கலையரசி, மதி, சுதா, நடேஸ், சத்தியா பத்மகுமார், நந்தகுமார், தேவிகா, இந்திரா, குணபாலேஸ்வரி, சுந்தரமூர்த்தி, திருஞானசம்பந்தன், பாமாவதி, கலாவதி, மஞ்சுளாவதி, காலஞ்சென்ற, கமலாவதி, ஜனகன், சிவராஜ், சிவகுமாரன், ஸ்ரீக்குமார்(விவசாயத் திணைக்களம், நல்லூர்), கிரிஜா(ஆசிரியர், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.08.99) சனி காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

249,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
க. விவேகானந்தன் (மகன்)
ந. புனிதவதி (மகள்)

(68029)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர், வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-08-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சஞ்சிகை

சஞ்சீவி 07-08-1999


# றெனி மூக்குக்கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்துக் கண்ணுக்கு அழகு சேர்க்கும் கண்ணாடிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம் முன்பாக
கண்டிவீதி,
சாவகச்சேரி


## கருத்துக் கலசம் - மயூரா

### நேர்மையே மேன்மை

*நேர்மையைப் பறிகொடுத்துப் பெறும் லாபம் உண்மையில் நஷ்டமே.*

\- சீனப்பழமொழி -

ஒருவன் நல்லவனாக, மதிப்புள்ளவனாக வாழ்வதற்கு இன்றியமையாத நெறிகளில், ஒழுக்கங்களில் நேர்மை முக்கியமானது.

நேர்மை வாழ்க்கையில் எப்போதும் வெற்றிதரும். சில சந்தர்ப்பங்களில் அது தோல்வியைத் தருவதாகத் தோற்றினாலும்கூட ஈற்றில் வெற்றியையும் சிறப்பையுமே தரும். நேர்மை மனதில் வேண்டும்; செயலிலும் வேண்டும். கள்ளம், கபடத்தனம், நடிப்பு அல்லது போலித்தனம் எல்லாம் நேர்மையின் எதிரிகள். அவை மனதில் குடிகொள்ளாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நேர்மை வாழ்க்கையின் நல்லியல்புகளில் ஒன்று. நல்லியல்புகளோடு வாழ்வது மலைமேல் ஏறுவது போன்றதாகும். ஆனால் தீய இயல்புகள், தீய குணங்கள் மலையின் உச்சியிலிருந்து வீழ்ந்து காயமடைவது போலாகும். அந்த வகையில், மேலே குறிப்பிட்ட சீனப்பழமொழி நேர்மை இன்றி வாழ்வது நஷ்டத்தை நாமாகத் தேடிக் கொள்வதாகவே முடியும் என்பதனை இடித்துரைக்கிறது.

நேர்மை என்ற நல்லியல்பு வளர்வதற்கு நெஞ்சம் தூய்மையாக இருக்க வேண்டும். தீய குணங்கள் இதயத்தை மாசுபடுத்திவிடும். நெஞ்சம் சுத்தமானதாக இருந்தால் தன்னம்பிக்கையும் துணிவும் இயல்பாகவே பிறக்கும். தன்னம்பிக்கையே ஒருவனின் வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் அடி ஆதாரம். தன்னம்பிக்கை உள்ளவன் நேர்மையற்ற வழியில் நடக்கத் துணிய மாட்டான். எதனையும் நேருக்கு நேர் மனந்திறந்து பேசித்தீர்க்குமாறு உந்துவது நேர்மை.

செல்வத்தில் புரள்பவனாயினும் கல்வியில் சிறந்தவனாயினும் வீரத்தில் திறனுடையவனாயினும் தொழிலில் வல்லவனாயினும் நேர்மை இல்லையேல் எல்லாம் அழிந்து போய்விடும். கடமை செய்யும் போதும் தொண்டு செய்யும் போதும் நேர்மை அவசியம். நேர்மையில்லாமல் சேர்க்கும் சொத்தும் செல்வமும் சம்பந்தப்பட்டவனுக்கு பாவத்தை மட்டுமன்றி தொல்லையையும் அவமானத்தையும் தேடித்தரும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது, பிறர் பொருளில் ஆசைவைத்து ஊழல் மோசடி செய்வது நேர்மை இல்லாதவர்களாலேயே செய்யப்படுவன. உள்ளே வஞ்சகத்தை வைத்துக்கொண்டு வெளியே இனிமையாகப் பேசுவோரே இப்போது அனேகர்.

நேர்மை ஒரு வகை நீதியுமாகும். சமன் செய்து சீர்தூக்குவது நீதி. அதே போன்று நேர்மையும் நீதிக்கான அளவுகோலாகவே கருதப்பட வேண்டும். நேர்மையுள்ளவனே நீதிக்கும் நியாயத்துக்கும் அஞ்சுவான்.

தனி மனிதர்களிடம் நேர்மை குடிகொண்டால் மட்டுமே நேர்மையான, நீதியான சமுதாயம் உருவாகும். நேர்மை குன்றிய சமூகம் மேல் நோக்கி எழுவது மிகவும் கடினம். அதனிடம் எழுச்சி இருக்காது. எழுச்சி இல்லாவிடில் உயர்ச்சி வராது. எங்களது இன்றைய துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஒட்டு மொத்த வினையாக, ஊழாகச் சேர்ந்து திரண்டு நிற்பது ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு சாராரிடமும் காணப்பட்ட நேர்மையின்மையே.

நேர்மை மேன்மை தரும். ஆகையால் நேர்மையை ஒவ்வொருவரும் தமது ஒழுக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். ஒழுக்கம் விழுப்பம் தருவதாலேயே அது உயிரினும் மேலாக ஓம்பப்படுகிறது. ஆகையால் நெஞ்சினில் நேர்மையை வளருங்கள்.

# ஆளுமை என்றால் என்ன?

ஆளுமை என்பது PERSONALITY என ஆங்கிலத்தில் கையாளப்படுகிறது. நமது அன்றாட வாழ்வில் அதிகளவில் PERSONALITY என்பதை நாம் பிரயோகித்து வருவதை அவதானிக்கலாம். அவ்வாறு நடைமுறையில் நாம் 'பெர்சனாலிற்றி'யை பல சந்தர்ப்பங்களில் கையாளுகின்றோம்.

நீங்கள் திருமண வீடொன்றிற்கு சென்று வருகிறீர்கள். உங்களை வீட்டில் யாராவது "மாப்பிள்ளை எப்படி?" என்று கேட்டால் நீங்கள் சொல்லும் பதில் 'நல்ல பெர்சனாலிற்றியான ஆள்' அல்லது 'பெர்சனாலிற்றியில்லாத ஆள்' என்பதாகவே இருக்கும்.

வங்கியொன்றிற்கு முதன்முதலாக முகாமையாளரைச் சந்திக்கச் செல்கிறீர்கள். முகாமையாளரைக் கண்டதும் உங்கள் மனம் 'இவர் நல்ல பெர்சனாலிற்றியான ஆள்' என்றோ அல்லது 'இவர் பெர்சனாலிற்றியில்லாத ஆள்' என்றோ முடிவு செய்யும்.

சினிமா பிரியர்கள் அடிக்கடி 'அஜீத்குமார் விஜயைவிட, பெர்சனாலிற்றி' என்றோ 'அரவிந்சுவாமி எல்லா நடிகரிலும் பெர்சனாலிற்றியான நடிகர்' என்றோ பேசிக்கொள்வதை அவதானிக்கலாம்.

இங்கே PERSONALITY என்பது ஒருவரின் தோற்றத்தை விவரிக்கப் பயன்படுத்துகின்ற பதமாகவே காணப்படுகிறது. அதாவது நடைமுறையில் நாம் சந்திக்கும் எந்த நபரும் சிவந்த நிறத்துடன் எடுப்பாகவும் அழகாகவும் திகழ்ந்தால் உடனே அந்நபர் PERSONALITYயான ஆள் என முடிவு செய்கிறோம். உண்மையில் இத்தகைய சந்தர்ப்பத்தில் 'பெர்சனாலிற்றி' என்ற பதம் பாவிப்பது தவறானதகும். ஒருவருடைய தோற்றத்தை விவரிப்பதாயின் HANDSOMENESS என்ற பதமே சரியானதாகும். எனவே ஆளுமை என்ற பதம் (PERSONALITY) ஒருவரின் தோற்றத்தை விவரிக்க பயன்படுத்தப்படும் அல்லது கையாளப்படும் பதம் அல்ல என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

ஒரு நபரின் குணாதிசயங்கள் அல்லது பண்புகளும், அப்பண்புகளை தனது சூழலுக்கு ஏற்றவாறு அவர் மாற்றி நடந்து கொள்ளும் விதமே ஆளுமை எனப்படுகிறது. ஒருவரை நாம் கோபக்காரர் என்றோ, சோம்பேறி என்றோ, துணிந்தவர் என்றோ கூறுகிறோம். இவையெல்லாம் அந்நபரின் ஆளுமைப் பண்புகளாகும்.

## ஆளுமையின் பொதுவான இயல்புகள்

ஆளுமைக்கென சில பொதுவான இயல்புகள் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்வருமாறு நிரற்படுத்தலாம்.

* ஆளுமை ஒரு நபரின் உளவியல் ரீதியான பண்புகளை விவரிக்கின்றது.

* ஆளுமை ஒருநபரின் நடத்தையைத் தீர்மானிக்கின்றது.

* இருநபர்களின் ஆளுமைப் பண்புகள் ஒத்திருப்பதில்லை.

* ஆளுமை நிலையான தொன்றல்ல; அது நெகிழக்கூடியது.

ஆளுமைப்பண்புகளை அடிப்படையில் மாற்றம் செய்யலாம் எனக் குறிப்பிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக சோம்பலான ஒருவரை சுறுசுறுப்பானவராக மாற்றமுடியும் என்பதைக் கூறலாம். மேலும் சூழலின் தன்மைக்கேற்ப ஒருவரின் ஆளுமைப் பண்பு மாற்றமடைகிறது. உதாரணமாக வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் ஒருவர் இராணுவக் காவலரணைக் கண்டதும் சைக்கிளை விட்டு இறங்கி நடக்கிறார்.

## ஆளுமையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள்

ஆளுமையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக ஆய்வாளர்கள் பின்வருவனவற்றை இனங்கண்டுள்ளனர்.

* உயிரியற்காரணிகள்:- ஆய்வுகளின்படி ஒருவரின் பரம்பரை, மூளையமைப்பு, பௌதிகத்தோற்றம் போன்ற உயிரியற்காரணிகளால் ஆளுமையானது தீர்மானிக்கப்படுகிறது எனக் கூறப்படினும் அதற்குப் போதிய ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை.

* குடும்பமும் சமூகமும்:- ஒரு மனிதனின் பிள்ளைப்பருவத்திலிருந்தே படிமுறை ரீதியாக சமூகமயமாக்கும் செய்முறை ஆரம்பிக்கிறது. பாடசாலைக்கு செல்ல ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு குழந்தையின் நடத்தை தாய், தந்தையரை அடிப்படையாகக்கொண்டிருக்கும். பாடசாலை வாழ்க்கை ஆரம்பமான பின்னர் பாடசாலை நண்பர், ஆசிரியர்கள் ஆகியோரை அடிப்படையாகக் கொண்டு குழந்தையின் ஆளுமை மாற்றமடைகிறது. ஒரு நபர் குழந்தைப் பருவத்திலிருந்து வயதடைந்து நிறுவனமொன்றில் பணியாற்றுவதற்காக அல்லது வேலை செய்வதற்காக செல்கின்றபோது அங்கு சகபணியாளர், மேலதிகாரிகள் ஆகியோருடன் இணங்கி செல்கையில் ஆளுமை விருத்தியடைகிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

* கலாசாரக் காரணிகள்:- ஆளுமைக்கும், கலாசாரத்திற்கும் இடையே ஒரு சீரான, நேரான தொடர்பினை எடுத்துக்காட்டமுடியாது. ஆனாலும் கலாசாரமானது ஒரு நபரின் சுயாதீன சுதந்திர உணர்வு, முரணுணர்வு அல்லது எதிர்ப்புணர்வு, போட்டியுணர்வு, ஒத்துழைப்பு போன்ற மனப்பாங்குகளை தீர்மானிக்கின்றது. இந்தவகையில் ஒரு நபர் கலாசாரத்துடன் இணங்கிச் செல்கையில் அவரது ஆளுமை விருத்தியடைகிறது; அல்லது மாறுகின்றது.

* நிலைமைக்காரணிகள் அல்லது சூழ்நிலைக் காரணிகள்:- சில சந்தர்ப்பங்களில் ஒருநபர் எத்தகைய சூழ்நிலைக்குள் இருக்கிறார் என்பதைப் பொறுத்து அவரது ஆளுமை தீர்மானிக்கப்படும். உதாரணமாக அடையாளஅட்டையை எடுத்துவர மறந்த ஒருவர் சோதனைச் சாவடியை அண்மிக்கும் போது பதற்றமடைந்தவராகவும் பயமடைந்தவராகவும் காணப்படலாம்.

## மக்களின் அன்றாட வாழ்வில் செல்வாக்கு செலுத்தும் ஆளுமைபபண்புகள்

* மக்களின் மனநிலை அல்லது கட்டுப்பாட்டின் நிலை:- மக்கள் எவரும் பொதுவில் இருவகையான மனநிலையினைக் கொண்டிருக்கின்றர். அம்மன நிலையானது உள்ளகநிலை, வெளியகநிலை என பகுத்து நோக்கப்படுகிறது. உள்ளகநிலை கொண்ட



மக்கள் 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற முதுமொழியைப் பின்பற்றுபவர்களாக இருப்பர். இவர்கள் தமது தலைவிதியைத்தாமே கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடையவர்களாவர். இவர்கள் எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யக் கூடியவர்களாகவும், ஆபத்துக்களை துணிச்சலுடன் எதிர்கொள்பவர்களாவும், தாம்ஆற்றும் பணிகளில் அதிகம் திருப்தியடைபவர்களாகவும் காணப்படுவர்.

**ச.இராகவன்**
(முகாமைத்துவ மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்)

முகாமைத்துவ ஆய்வாளர்கள் உள்ளக மனநிலையினரைப் பற்றிக் கூறும்போது "சிக்கலான கடமைகளை ஆற்றுவதில் அதாவது முகாமைத்துவ தொழில்சார் கடமைகளையாற்றுவதில் நன்றாகச் செயற்படுவர். மேலும் இவர்கள் முன்னெடுத்துச் செல்லும் திறன், செயற்பாட்டுச் சுதந்திரம என்பவற்றை வேண்டிநிற்கும் வேலைகளுக்கு அதிக பொருத்தமுடையவர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

உள்ளக நிலையினரில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக வெளியக நிலையினர் காணப்படுகின்றனர். இன்றைய யாழ்ப்பாணத்தில் முற்றிலும் வெளியகநிலையினரைத்தான் காணமுடிகிறது. இத்தகைய மனநிலையினைக் கொண்டிருப்போர் தம் வாழ்வில் என்ன நிகழ்ந்தாலும் அது தலைவிதியெனக் கூறி வேதனைப்படுபவர்களாக இருப்பர். "எல்லாம் இறைவன் செயல், நம்கையில் எதுவும் இல்லை" என்று கூறிக்கொள்வர். இவர்கள் எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யமுன்வருவதில்லை. மேலும் ஆபத்துக்களை எதிர்கொள்ளத் தயக்கம் காட்டுவர். சிக்கலான, ஆபத்தான வேலைகளைத் தவிர்த்துக்கொள்ளவே இவர்கள் பெரிதும் விரும்புவர். இவர்களைப்பற்றி முகாமைத்துவ ஆய்வாளர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:- "முன்னெடுத்துச் செல்லும் திறன், செயற்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றை வேண்டி நிற்கும் வேலைகளுக்கு அதிக பொருத்தமற்றவர்களாவும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட, திரும்பத் திரும்ப ஆற்றப்படுகின்ற வேலைகளில் சிறப்பாக செயற்படுபவர்களாகவும் இருப்பர்"

* சுயமதிப்பு:- சுயமதிப்பென்பது ஒருவர் தன்னைப் பற்றித்தான் கொண்டுள்ள மதிப்பீடாகும். ஒருவர் தன்னை [illegible] உயர்வாகக் கருதலாம் அல்லது தாழ்வாகக் கருதலாம். தன்னைப்பற்றி உயர்ந்ததொரு சுயமதிப்பைக் கொண்டிருப்பவர் வெற்றிக்கான எதிர்பார்ப்பினையே அதிகம் கொண்டிருப்பார். தாம் செய்யும் வேலையில் வெற்றிபெறக் கூடியவகையில் அதிக திறமையைக் கொண்டிருப்பதாக நம்புவார். இவர் மற்றவர் கருத்துக்கு அதிகம் மதிப்பளிப்பதில்லை. மாறாக ஒருவர் தன்னைப்பற்றி தாழ்வான கருத்தினைக் கொண்டிருப்பின் மற்றவர் கருத்துக்கு அதிகம் மதிப்பளிப்பவராய் மற்றவர்களிடம் இருந்து சாதகமான மதிப்பீடுகளைப பெற விரும்புவராய் இருப்பர். மேலும் தாம் மேற்கொள்ளும் தொழிலில் அதிக வெற்றியீட்டக்கூடிய திறனைக் கொண்டிருப்பதாய் இவர் கருதுவதில்லை.

* சுயமுகாமை அல்லது சுயவழி நடத்தல்:- சுயவழிநடத்தல் என்பது ஒரு நபர் வெளிச்சூழற் காரணிக்களுக்கிசைவாக தனது நடத்தையை மாற்றிக்கொள்ளும் அல்லது சீர்செய்து கொள்ளும் ஆற்றலைக் குறிக்கின்றது. இந்தச் சுயவழி நடத்தற் பண்பானது சிலருக்கு உயர்வாகவும் சிலருக்கு குறைவாகவும் காணப்படும். ஆகவே உயர்ந்த சுயவழி நடத்தல் பண்பினைக் கொண்டிருப்போர் வெளிச் சூழற் காரணிகளுக்கேற்ப தமது நடத்தையைச் சீர்செய்வதில் அதிக இணக்கம் காட்டுவதுடன் வேறுபட்ட சூழ்நிலைகளில் வேறுபட்ட விதமாக நடந்து கொள்வர். இவர்களை ஒரே வார்த்தையில் பச்சோந்திகள் என்று குறிப்பிடலாம். மாறாக குறைந்த சுயவழிநடத்தற் பண்பினைக் கொண்டவர்கள் தங்களை வெளிச்சூழற்காரணிகளுக் கேற்ப மாற்ற முடியாதவர்களாக இருப்பர். இவர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தமது உண்மையான நடத்தையினையும் மனப்பாங்கினையும் வெளிப்படுத்துபவர்களாக இருப்பர். இவர்களை ஒரே சொல்லில் 'கவரிமான்கள்' என்று குறிப்பிடலாம். இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரும் உயர்ந்த சுயவழி நடத்தல் பண்புடன் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

* ஆபத்தினை எதிர்கொள்ளல்:- ஆபத்தினை எதிர்கொள்ளும் விதத்திலும் தனிநபர்கள் வேறுபட்டிருக்கின்றனர். சிலர் ஆபத்தை எதிர்கொள்ளும் பண்பினை அதிகளவில் கொண்டிருப்பர். சிலர் ஆபத்தை எதிர்கொள்ளாமல் தவிர்த்துக் கொள்வர். இன்றைக்கு நாம் எல்லோரும் ஆபத்தை எதிர்கொள்ளாமல் தவிர்த்துக் கொள்ளவே விரும்புகிறோம். மேலும் உயர்ந்த ஆபத்தினை ஏற்கும் பண்பானது விரைவாகத் தீர்மானம் எடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கும்.

## ஆளுமையின் இரு வகைகள்

ஆளுமை பொதுவாக இரு வகைப்படும். அவை 'அ' வகை ஆளுமை (TYPE A PERSONALITY), 'ஆ' வகை ஆளுமை (TYPE B PERSONALITY) என்பன அவ்விருவகைகளுமாகும். முதலில் 'அ' வகை ஆளுமை பற்றி நோக்குவோம்.

### வகை 'அ' ஆளுமை
### (Type 'A' Personality)

இத்தகைய ஆளுமை வகுதியினர் எப்போதும் கால அவ்சரம் பற்றிய ஒரு தீவிர உணர்வைக் கொண்டிருப்பர். இவர்கள் மிகக் குறைந்த நேரத்தில் அதிக சாதனைகளை செய்வதற்கு தீவிரமாக அல்லது தொடர்ச்சியாகப் போராடுவதுடன் இவர்கள் பின்வரும் நடத்தைகளை வெளிக்காட்டுவர்.

* எப்போதும் அசைந்து கொண்டிருத்தல் அல்லது நகர்ந்து கொண்டிருத்தல், விரைவாக சாப்பிடுதல்.

* பொறுமையின்மை காணப்படுவதுடன் ஒரே நேரத்தில் இரண்டு அல்லது இரண்டுக்குமேற்பட்ட கருமங்களைச் செய்தல்.

* ஓய்வு நேரத்துடன் இணங்கிப் போக முடியாதிருத்தல்.

* இலக்கங்கள், தொகைகள் பற்றிய எண்ணத்துடன் காணப்படுவதோடு தாங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்ற வகையில் தமது வெற்றியை அளவிடுவர்.

### வகை 'ஆ' ஆளுமை
### (Type 'B' Personality)

இத்தகைய ஆளுமை வகுதியினர் வகை 'அ' ஆளுமைக்கு முற்றிலும் வேறுபட்டவர்களாக இருப்பர். இவர்கள் கால அவசரம் பற்றிய தீவிர உணர்வைக் கொண்டிருப்பதில்லை. இவர்கள் தாம் செய்கின்ற வேலையின் அளவைக்காட்டிலும் வேலையின் தரத்திற்கே அதிகமுக்கியத்துவம் வழங்குவர். 'செய்வன திருந்தச் செய்' என்பது இவ்வகுதியினரின் தாரகமந்திரமாக இருக்கும். இவர்களின் பண்புகள் பின்வருமாறு அமைந்திருக்கும்.

* இவர்கள் அவசரமின்றி நிதானத்துடன் வேலை செய்பவர்களாக இருப்பர்.

* வேலையின் அளவைவிட வேலையின் தரத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்குவர்.

* புதியபிரச்சினைகளுக்கு தனித்துவமான தீர

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கட்சிகளை உலுப்பும் இந்திய தேர்தல் சூறாவளி!

இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. மக்களவைத் தேர்தல் நடைபெறும் திகதிகளில் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறிய மாற்றம் செய்துள்ளது. அதன்படி செப்ரெம்பர் 5ஆம் திகதி தமிழ்நாட்டில முதலாவது கட்ட வாக்களிப்பு நடைபெறும்.

## தமிழ் நாட்டில் 3 அணிகள்

தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கி விட்ட நிலையிலும் கூட்டணி கட்சிகளின் தொகுதி உடன்பாடு இன்னும் பூர்த்தியாகவில்லை. தமிழ் நாட்டில் இம்முறை 3 அணிகள் களத்தில் நிற்கின்றன.

ஒன்று தி.மு.க - பாரதீயஜனதா தலைமையிலான அணி மற்றது அ.தி.மு.க - காங்கிரஸ் தலைமையிலான



தேவகௌடா

அணி மூன்றாவது தமிழ்மாநில காங்கிரஸ்தலைமையிலான அணி.

தி.மு.க - பாரதீய ஜனதா அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கும் பேச்சுக்கள தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அ.தி.மு.க - காங்கிரஸ அணி தொகுதி உடன்பாடு குறித்த பேச்சுக்களை நடத்தி முடித்து விட்டது. மூன்றாவது அணியான தமிழ் மாநில காங்கிரஸ் தனது அணிக்கு புதிய கட்சிகளை சேர்க்கும் நடவடிக்கையைக் கூட இன்னும் பூர்த்தி செய்யவில்லை.

ஆரம்பத்தில் புதிய தமிழகம் கட்சி மட்டும் மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸ் அணியில் இருந்தது. தற்பொழுது இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழ்நாடு ஜனதாதள், சமாஜவாத ஜனதாக்கட்சி ஆகியவையும் தமிழ் மாநில காங்கிரஸ் அணியில் இணைய முன்வந்துள்ளன.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் தமிழ்நாடு ஜனதா தள்ளும் அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியில் சேருவதற்கே முதலில் விரும்பின. அ.தி.மு.க. தலைமையில் தமிழகத்தில் மதசார்பற்ற கட்சிகளின் கூட்டணி அமைய வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முன்னர் அறிக்கை விட்டிருந்தது. ஆனால் அ.தி.மு.க - காங்கிரஸ்அணி இந்திய யூனியன் முஸ்லிம் லீக்குக்கு எந்தவொரு தொகுதியையாவது ஒதுக்கத் தவறியதை அடுத்து இந்தக்கட்சி தற்பொழுது தமிழ் மாநில காங்கிரஸ் அணியில் இணைய முன்வந்துள்ளது. தமிழ்நாடு ஜனதா தள் கட்சியின் நிலைமையும் இதே போன்றதே. அ.தி.மு.க - காங்கிரஸ் அணியில் தொகுதி கிடைக்காத நிலையிலேயே தமிழ்நாடு ஜனதா தள் கட்சியும் தமிழ் மாநில காங்கிரஸ் அணியில் சேர முன்வந்துள்ளது.

## ஜனதா தள் கட்சியில் பிளவு

தற்பொழுது இந்திய அரசியல் களத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் ஜனதா தள் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதமர் தேவகௌடா தலைமையில்ஓா அணியும் சரத்யாதவ் தலைமையில் மற்றும் ஓர் அணியும் உருவாகி சக்கரச்சின்னம் யாருக்கு என்ற போட்டி ஏற்பட்டுள்ளது.

ஜனதா தள் தலைவர் சரத்யாதவ், கர்நாடக முதலமைச்சர் ஜே.எச்.பட்டேல், முன்னாள் ரயில்வே அமைச்சர் ராம்விலாஸ்பஸ்வான் ஆகியோர் ஓர் அணியில் நிற்கிறார்கள். தமது கட்சியே உண்மையான ஜனதா தள் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த அணி பாரதீயஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஜனதா தள்ளில் இருந்து பிரிந்து சென்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தலைமையிலான சமதாக்கட்சி, இராமகிருஷ்ண ஹெக்டே தலையிலான லோக்சக்தி ஆகியவை தேசிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

தற்பொழுது சரத்யாதவ் தலைமையிலான அணியும் இந்த முன்னணியில் சேர விரும்புவதும் –

சமதாக்கட்சி, லோக்சக்தி ஆகிய கட்சிகளையும் இணைத்து ஜனதாதள் என்ற பெயரில் தேசிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் – பாரதீய ஜனதாகட்சிக்குள் புதிய சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளது.

இந்த மூன்று கட்சிகளும் மீண்டும் இணைந்து ஜனதா தள் என்ற பெயரில் தேசிய ஜனநாயக முன்னணியில் இடம்பெறும் பட்சத்தில் தேசிய ஜனநாயக முன்னணியில் இவற்றின் கை ஓங்கலாம் என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

தமது புதிய அணி குறித்து பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என்று கூறுகிறார் இராமகிருஷ்ண ஹெட்டே. கூடுதல் தொகுதிகளைப் பெறுவதற்காக பேரம்பேசும் நோக்கம் தமது அணிக்கு கிடையாது என்றும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

எனினும் பாரதீய ஜனதாக்கட்சி சரத்யாதவ் தலைமையிலான ஜனதா தள் கட்சியை தேசிய ஜனநாயக முன்னணியில் இணைப்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. சரத்யாதவ் தலைமையிலான ஜனதா தள் கட்சியை தேசிய ஜனநாயக முன்னணியில் இணைப்பதற்கு கர்நாடக மாநில பாரதீய ஜனதா கட்சித் தலைவர் யெதியுரப்பாவும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

எதிர் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் முதலமைச்சர் பதவியில் கண் வைத்துள்ளார் யெதியுரப்பா. ஜனதா தள் கட்சியும் தேசிய ஜனநாயக முன்னணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் கர்நாடகத்தில் மீண்டும் ஜே.எச். பட்டேலுக்கே முதலமைச்சர் பதவி கிடைக்கலாம் என்று அவர் அஞ்சுகிறார்.

தற்பொழுது கலைக்கப்பட்டுள்ள கர்நாடக சட்டப்பேரவையில் தேவ கௌடா தலைமையிலான உறுப்பினர்களே பெரும்பான்மையினர். இதனால்தான் கட்சியில் பிளவு ஏற்பட்ட கையோடு சட்டப்பேரவையைக் கலைக்குமாறு பட்டேல் ஆளுநருக்கு சிபார்சு செய்தார். ஜனதா தள் கட்சி ஆட்சி செய்த ஒரே ஒரு மாநிலம் கர்நாடகம்தான். அதுவும் கலைக்கப்பட்டு விட்டது.

ஜனதா தள் கட்சி 1988ஆம ஆண்டு தான் ஸ்தாபிக்கப்பட்டது. வி.பி.சிங்

**உலக உலா**
**என்.பி.சீலன்**

தலைமையிலான அரசில் 44 உறுப்பினர்களைக் கொண்ட பெரியகட்சியாக விளங்கிய இந்தக்கட்சி பின்னர் ஏற்பட்ட பிளவுகள் காரணமாக தற்பொழுது குட்டிச்சுவராகிவிட்டது.

கலைக்கப்பட்ட மக்களவையில் இந்தக்கட்சிக்கு ஆறு உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர்.

தேவகௌடாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் இவர்கள் எதிராக வாக்களித்தனர் என்று தற்பொழுது தெரிவிக்கப்படுகிறது. பிஜு ஜனதா, ராஷ்ட்ரிய ஜனதாதள் ஆகியவையும் ஜனதாதள்ளில் இருந்து பிரிந்து சென்றவர்களால் உருவாக்கப்

பட்ட கட்சிகளே. அதுமட்டுமல்ல பிஹார் மாநில ஜனதா தள் கட்சி சரத் பவாரின் தேசியவாத காங் கிரஸுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. ஆந்திரமாநில ஜனதா தள் தலைவர் நரசிம்ம ரெட்டி கட்சியைக் கலைத்து விட்டு தெலுங்கு தேசம் கட்சியுடன் இணைந்துவிட்டார்.

எந்தக் கட்சியுடனும் கூட்டு வைப்பதில்லை என்று சொல்லி வந்த தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் சந்திரபாபு நாயுடு தற்பொழுது பாரதீயஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதாதள் குடும்பம் மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்று விரும்புபவர்கள் ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சியைச் சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். பலகோடி ரூபா கால் நடைத் தீவன ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள லாலுபிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதா தள் இம்முறை காங்கிரஸுக்கு ஆதரவாக உள்ளது.

ஊழல்வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள லாலு பிரசாத் யாதவ், ஜெயலலிதா ஆகியோருடன் காங்கிரஸ் சேர்ந்திருப்பது தேசியரீதியில் காங்கிரஸுக்கு இருந்த "இமேஜ்"யை பாதிக்கும் என்றே நம்பப்படுகிறது.

## முக்கிய தலைவர்களை வீழ்த்த அ.தி.மு.க முயற்சி

1998 மக்களவைத் தேர்தலில் 22 தொகுதிகளில் போட்டியிட்டு 18 தொகுதிகளில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. இம்முறை 23 தொகுதிகளில்

## ஜனதாதள் மீண்டும் பிளவுபட்டுவிட்டது!!

போட்டியிடுகிறது. காங்கிரஸ் 12தொகுதிகளில் போட்டியிடுகிறது. தற்போதைய நிலையில் எந்தவொரு திராவிடக் கட்சியுடனாவது கூட்டுச் சேராமல் தமிழ்நாட்டில் காங்கிரஸினால் ஒரு தொகுதியில் ஆவது வெல்லமுடியாது. இதனால்தான் அ.தி.மு.க.வுடன் அது வலிந்து கூட்டுச்சேர்ந்தது.

வைகோ, வாழப்பாடி இராமமூர்த்தி, ரங்கராஜன் குமாரமங்கலம், சுப்பிரமணியசுவாமி ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளில் அ.தி.மு.க இம்முறை பலம்வாய்ந்த வேட்பாளர்களை நிறுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது.

சிவகாசித் தொகுதியில் வைகோ போட்டியிடுகிறார். அ.தி.மு.க அந்த தொகுதியில் முன்னாள் அமைச்சர் காளிமுத்துவை நிறுத்த உள்ளது. அதே போன்று சேலம் தொகுதியில் மத்திய அமைச்சர் வாழப்பாடி இராமமூர்த்திக்கு எதிராக முன்னாள் அமைச்சர் செல்வகணபதியையும் திருச்சியில் பாரதீய ஜனதா கட்சி சார்பில் போட்டியிடும் மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமார மங்கலத்துக்கு எதிராக முன்னாள் அமைச்சர் கரூர் சின்னச்சாமியையும் அ.தி.மு.க நிறுத்தவுள்ளது.

தேர்தல் தொகுதி ஒதுக்கீட்டில் ஜெயலலிதாவினால் வஞ்சிக்கப்பட்ட சுப்பிரமணியசுவாமி இம்முறை மீண்டும் மதுரை தொகுதியில் போட்டியிடுகிறார். அவருக்கு எதிராக அ.தி.மு.க கூட்டணியில் அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சங்கரய்யா போட்டியிடுகிறார்.

சுப்பிரமணியசுவாமியை எந்தக் கட்சியும் நம்புவது இல்லை. பாரதீய ஜனதா ஆட்சிக் கவிழ்ப்புக்கு அவரைப் பயன்படுத்தி விட்டு கைவிட்டுவிட்டார் ஜெயலலிதா. சுவாமியின் வெற்றி இனி அவரது தனிப்பட்ட செல்வாக்கிலேயே தங்கிஇருக்கிறது.

## ரஜினிகாந்த் ஆதரவு யாருக்கு?

ரஜினிகாந்தின் ஆதரவு இம்முறை எந்தக்கட்சிக்கும் கிடையாது.

1996 மக்களவைத் தேர்தலில் ரஜனிக்காந்த் தி.மு.க. - த.ம.க.

> 1975 ஆம் ஆண்டு சஞ்சேய்காந்தி அரசியலுக்கு வந்த பின்பு தான் இந்தியாவில் அரசியல் சீர்கெட ஆரம்பித்தது என்று கூறலாம். இந்த மனிதரின் அரசியல் பிரவேசத்தின் பின்னரே மூன்று சக்திகளின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கிறது. ஒன்று ஊழல் வாதிகள் (The Corrupt) மற்றது குற்றவாளிகள்; (The Criminal) மூன்றாவது வகுப்புவாதிகள் (The Communal) ராஜீவ்காந்தியின் காலத்திலும் இவை தொடர்ந்தன. எதிர்வரும் மக்களவைத் தேர்தலிலும் இந்தச் சக்திகளே ஆதிக்கம் செலுத்தப்போகின்றன என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

அணிக்கு ஆதரவு வழங்கினார். அப்பொழுது இருந்த ஜெயலலிதா எதிர்ப்பு அலையும் சேர்ந்து தி.மு.க - த.ம.க கூட்டணிக்கு பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்தது.

ஆனால் 1998 தேர்தலில் அவர் எந்தக் கட்சியையும் ஆதரித்து பகிரங்கமாக அறிக்கை விடவில்லை. மனச்சாட்சிப்படி வாக்களிக்குமாறு கூறிவிட்டார். தற்போதைய மக்களவைத் தேர்தலிலும் தாம் எந்தக்கட்சிக்கும் ஆதரவு இல்லை என்றே ரஜினிகாந்த் தெரிவிக்கிறார்.

ஆனால் நாடாளுமன்றம் கலைக்கப்படவும் மீண்டும் தேர்தல் நடத்தப்படவும் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று ரஜினிகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார். அ.தி.மு.க - காங்கிரஸ் அணிக்கு எதிரானது இந்தக் கருத்து.

## சோனியாவும் போட்டி

தமிழ்நாட்டுக்கு சோனியாகாந்தியையும் அழைத்து வந்து ஒரே மேடையில் தோன்றுவதன் மூலம் ஆதரவைப் பெற முடியும் என்று ஜெயலலிதா கருதுகிறார். ஆனால் ஜெயலலிதாவுக்கு எதிராக மட்டுமல்ல சோனியா காந்திக்கு எதிராகவும் தற்பொழுது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

மக்களவைத் தேர்தலில் வெற்றியடையும் பட்சத்தில் புதிய பிரதமர் யார் என்று அறிவிக்காது காங்கிரஸ் இம்முறை போட்டியிடுகிறது. சோனியாகாந்தி தேர்தலில் போட்டியிடுவாரா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டு வந்தது. தாம் தேர்தலில் போட்டியிடப் போவதாக தற்பொழுது சோனியா காந்தி உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டார்.

ஆனால் எந்தத் தொகுதி என்று அவர் அறிவிக்கவில்லை. உத்திரப் பிரதேசத்தில் உள்ள அமேதி தொகுதியிலேயே சோனியாகாந்தி போட்டியிடுவார் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

உத்திரப்பிரதேசத்தில் காஞ்சிராம் தலைமையிலான பகுஜன் சமாஜ்கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட காங்கிரஸ் விரும்பியது. ஆனால் அமேதி தொகுதியை சோனியாகாந்திக்கு விட்டுக்கொடுக்க பகுஜன் சமாஜ்கட்சியின் மற்றொரு தலைவரான மயாவதி மறுத்ததால் இந்த கூட்டணி முயற்சி தோல்வியடைந்து விட்டது.

உத்திரப்பிரதேசத்தில் உள்ள 85 தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாகவும் எந்தக்கட்சியுடனும் தேர்தல் கூட்டு வைப்பதில்லை என்றும் காஞ்சிராம் அறிவித்துள்ளார். உத்திரப் பிரதேசத்தில் தனித்து போட்டியிட்டு காங்கிரஸினால் வெற்றிபெறமுடியாது.

## ஹரியானாவில் சௌதாலா

ஹரியானா மாநிலத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் மாற்றங்கள் காங்கிரஸுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன.

ஹரியானாவில் முதலமைச்சராக இருந்தவர் பன்சிலால். அவர் இராஜினாமா செய்ததை அடுத்து ஓம்பிரகாஷ் சௌதாலா தற்போது புதிய முதலமைச்சராகி உள்ளார்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஹரியானாவில் பன்சிலாலின் ஹரியானா விகாஷ் கட்சியும் பாரதீயஜனதா கட்சியும் கூட்டாகப் போட்டியிட்டு ஆட்சியை அமைத்தன. ஓம்பிரகாஷ் சௌதாலாவின் இந்திய தேசிய லோக் தள் எதிர்க்கட்சியாக இருந்தது.

சௌதாலாவுக்கு உத்தரப்பிரதேசத்திலும் கணிசமான செல்வாக்கு இருந்ததால் பாரதீயஜனதா கட்சி சௌதாலாவுடன் உறவை வளர்த்தது. இதன் தொடர் முயற்சியாக இந்திய தேசிய லோக்தள் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியிலும் சேர்ந்து கொண்டது.

ஹரியானா விகாஷ் கட்சியுடனான உறவை பாரதீய ஜனதா துண்டிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே சௌதாலா தேசிய ஜனநாயக முன்னணியில் தனது கட்சியை இணைத்தார்.

இந்த நிபந்தனையை ஏற்று பன்சிலால் அரசுக்கு வழங்கிய ஆதரவை பாரதீய ஜனதாக் கட்சி விலக்கிக் கொண்டது. சௌதாலாவை புதிய முதலமைச்சராக்க முயன்றது.

இந்த முயற்சியை முறியடிக்கும் நோக்கத்துடன் இதுவரை பன்சிலால் அரசை எதிர்த்து வந்த காங்கிரஸ் நம்பிக்கை வாக்கெடுப்பில் பன்சிலாலுக்கு ஆதரவாக வாக்களித்தது. இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பு வெற்றி பெற்றது.

ஆனால் காங்கிரஸ் கட்சி ஒரு நிபந்தனையுடனேயே பன்சிலால் அரசுக்கு அப்பொழுது ஆதரவு அளித்து நம்பிக்கை வாக்கெடுப்பு வெற்றி பெற உதவியது. சட்டப் பேரவைக் கலைப்புக்கு பன்சிலால் சிபார்சு செய்யவேண்டும் என்பதே அந்த நிபந்தனை. ஆனால் பன்சிலால் அந்த வாக்குறுதியை காப்பாற்றவில்லை.

இதனால் பன்சிலால் ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ விலக்கிக்கொண்டது. ஆதரவைக் விலக்கிக் கொண்டபோது தனக்கு எதிரான மாற்று அரசு ஒன்று ஏற்படும் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் சௌதாலா மாற்று அரசு அமைத்து விட்டார். பன்சிலாலின் ஹரியான விகாஷ்கட்சி உறுப்பினர்களில் சிலரினதும் பாரதீய ஜனதாக் கட்சியினதும் ஆதரவுடன் சௌதாலாவினால் ஆட்சி அமைக்க முடிந்தது.

ஹரியானா விகாஷ் கட்சியை பிளவுபடுத்தியதுடன் ஹரியானா விகாஷ் கட்சி எதிர்காலத்தில் காங்கிரஸின் ஆதரவையோ அல்லது பாரதீய ஜனதாவின் ஆதரவையோ பெறமுடியாத நிலைக்கு தள்ளிவிட்டார் சௌதாலா.

*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் 'போர்க்கோஷம்' என்ற படை நடவடிக்கை மூலம் புலிகளின் பிரதேசங்களை கட்டங் கட்டமாக - சதுரகிலோ மீற்றர்களாக - கைப்பற்றுவதில் படையினர் முனைப்புக்காட்டி வரும் அதே வேளை வவுனியா உட்பட கைப்பற்றப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு நிலைமையை வேப்பங்குளம் தாக்குதல் கேள்விக்குரியதாக்கி உள்ளது.

# வேப்பங்குளம் தாக்குதல் தற்கொலைத் தாக்குதலா?

தலைநகர் கொழும்பில் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களைத் தடுப்பது எவ்வாறு என்று தெரியாமல் கொழும்பு பாதுகாப்புக் கட்டளைப்பீடம் தடுமாறி கொண்டிருக்கையில் -

கொழும்புக்கு வெளியே போர்முனையை அண்டிய வவுனியா வேப்பங்குளம் பகுதியில் கடந்த புதனன்று மற்றொரு குண்டுத்தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

'போர்க்கோஷம்' இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் விசேட அதிரடிப்படையினரை இலக்குவைத்து இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

விடுமுறையில் சென்று திரும்பிய சுமார் 34 விசேட அதிரடிப்படையினரை ஒன்றாக ஏற்றிச்சென்ற இராணுவ டிரக் வண்டி ஒன்றே வவுனியா - மன்னார் வீதியில் வவுனியா நகரில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் வேப்பங்குளம் பகுதியில் வைத்து குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

வீதியில் சைக்கிளில் வந்ததாகக் கூறப்படும் பெண் தற்கொலையாளியே அதிரடிப் படையினர் பயணம் செய்த டிரக் மீது பாய்ந்து குண்டை வெடிக்கச் செய்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலினால் டிரக்கில் பயணம் செய்த விசேட அதிரடிப் படையினர் 12 பேர் பலியாகினர். 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வவுனியா, அனுராதபுரம் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் பாதுகாப்புத் தரப்பினருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதுடன் இத் தாக்குதலின் நோக்கம் குறித்தும் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

வேப்பங்குளம் படையினரால் முற்றாக விடுவிக்கப்பட்ட - பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட - ஒரு பிரதேசம். வவுனியாவுக்கும் மன்னாருக்கும் இடையிலான போக்குவரத்து மார்க்கத்தில் முக்கிய இடமாகவும் அது உள்ளது.

இந்தப் பகுதிக்குள் விசேட அதிரடிப் படையினரை தற்கொலையாளி மூலம் தாக்க புலிகள் முடிவுசெய்தது ஏன் என்ற கேள்வியை பாதுகாப்பு வட்டாரங்கள் எழுப்பியுள்ளன.

சுமார் 25 பேர் ஒன்றாகப் பயணம் செய்த வாகனத்தைத் தாக்குவதன் மூலம் பெரும் எண்ணிக்கையான படையினரை கொல்வது நோக்கமாக இருந்ததா? அல்லது அந்தப் பாதையூடாகப் பயணம் செய்யும் படை உயரதிகாரிகள் எவரையாவது இலக்குவைத்து இத்தாக்குதல் திட்டமிடப்பட்டதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அரசியல் பிரமுகர் ஒருவர் இத்தாக்குதலில் சிக்கியதாக தாக்குதல் நடந்த கையோடு வவுனியா நகரில் வதந்திகள் கூடப் பரவியிருந்தன.

கடந்த சில நாள்களாக விடுமுறையில் சென்று திரும்பும் படையினர் இந்த வீதியில் வாகனங்களில் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்து பயணம் செய்வதை சாதாரணமாகக் காணக்கூடியதாக இருந்ததாக அப்பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

இதனை அவதானித்தே புலிகள் இந்தத் தாக்குதலை திட்டமிட்டிருக்கலாம்.

வன்னியில் - குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் - இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் விசேட அதிரடிப் படையினரே பாதுகாப்புக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இராணுவத்தினர் அப்பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்பட்டு போர் முன்னரங்கப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். எனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விசேட அதிரடிப்படையினரை இலக்குவைத்துத் தாக்குவதை புலிகள் அதிகரித்துள்ளனர். அந்த வகையில் வேப்பங்குளம் குண்டுத் தாக்குதல் விசேட அதிரடிப்படையினருக்கு எதிரான புலிகளின் பெரும் தாக்குதலாக அமைகிறது. வன்னியில் விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக நடத்தப்பட்ட முதலாவது தற்கொலைப் பாணியிலான தாக்குதலும் இதுவே ஆகும்.

பொதுவாகப் படை உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்களைக் கொல்வதற்கே புலிகள் தற்கொலைத்தாக்குதல்களை நடத்துகின்றனர். ஆனால் இராணுவ இலக்கு ஒன்றை அந்தப் பாணியில் தாக்க புலிகள் முடிவு எடுத்திருப்பது விடுவிக்கப்பட்ட

மறுபக்கம்
ஏகப்பார்வை
வார விமர்சனம்
நல்லூர் தாஸ்

பிரதேசங்களின் பாதுகாப்பை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாக படை வட்டாரங்கள் கருதுகின்றனர்.

வேப்பங்குளம் சம்பவத்தை அடுத்து வவுனியா - மன்னார் வீதியில் வாகனப் போக்குவரத்துக் குறித்து படையினர் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீதியில் வீதிச் சோதனை நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு படை அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாக அறியமுடிகிறது.

## தற்கொலைத் தாக்குதலா?

வேப்பங்குளம் தாக்குதல் ஒரு தற்கொலைத் தாக்குதல் என்றே பாதுகாப்புத் தரப்பினர் அறிவித்திருந்தனர். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் படையினரின் தகவலையே செய்தியாக வெளியிட்டும் இருந்தன.

ஆனால் தாக்குதல் நடைபெற்றவிதம், ஏற்பட்ட சேதங்கள் மற்றும் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும் போது அதில் சந்தேகம் எழுகிறது.

இத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் உடனடியாக உரிமை கோரவில்லை. தாக்குதல் குறித்து செய்தி வெளியிட்ட 'புலிகளின் குரல்' வானொலி அதை ஒரு'குண்டுத் தாக்குதல்' என்று மட்டுமே குறிப்பிட்டது.

வாகன அணியில் கடைசியில் சென்ற வாகனத்துக்குக் குறுக்கே சைக்கிளில் வந்த பெண் ஒருவர் சென்ற சமயம் குண்டு வெடிப்பு இடம் பெற்றதாக பொலீஸார் கூறியுள்ளனர். தற்கொலையாளி எனத் தெரிவித்து வவுனியா ஆஸ்பத்திரியில் இனந்தெரியாத பெண் ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அச்சடலத்தின் வயிற்றுப்பகுதி மட்டுமே பிளந்து காணப்படுகிறது. மற்றபடி அவரது உடல் முற்றாகச் சிதைவடையவில்லை. தலைமயிர் நரைத்துக் காணப்படுகிறது. சுமார் 40 வயது மதிக்கத்தக்க தோற்றம்.

இந்தப் பெண்ணே தற்கொலையாளி எனக் கூறப்படுவதை சடலத்தைப் பார்வையிட்ட செய்தியாளர்களும், ஏனையோரும் நம்ப மறுக்கின்றனர்.

இப் பத்தியை எழுதும்வரை அச்சடலம் அடையாளம் காணப்படவில்லை.

தேங்காய் எண்ணெய் வாங்குவதற்காக சைக்கிளில் சென்ற தனது மனைவி வீடு திரும்பவில்லை என அப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படையினரிடம் முறையிட்டுள்ளார். அதனையடுத்து படையினர் அவரைக் கைது செய்து விசாரித்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

வவுனியா ஆஸ்பத்தரியில் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் பிரஸ்தாப குடும்பஸ்தரின் மனைவியினுடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

உடலில் குண்டை எடுத்துச் சென்ற தற்கொலையாளி இவராக இருப்பின் உடல் முற்றாகச் சிதறிச் சேதமடைந்திருக்கும்.

சுமார் 34 பேர் பயணம்செய்த டிரக் வண்டியைத் தாக்க சாதாரணமாக நபர் ஒருவரைக் கொல்லப் பயன்படுத்தும் வெடிமருந்து சக்தியை விடப் பலமடங்கு கூடிய சக்தியுள்ள வெடிகுண்டுகளை தனது உடலில் பொருத்தி இருக்க வேண்டும். படையினர் பயணம் செய்த டிரக் வண்டி பலத்த சேதமடைந்துள்ளது. இதனை வைத்துப் பார்க்கும் போது பிரஸ்தாப பெண்ணே தற்கொலையாளி எனப் படையினர் கூறுவதை ஏற்கமுடியாதுள்ளது.

அதேவேளை கிளைமோர் கண்ணிமூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டதற்கான தடயங்கள் எதுவும் அப்பகுதியில் காணப்படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா - மன்னார் வீதியில் முன்பு பல தடவைகள் புலிகளின் கிளைமோர் கண்ணித் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இந் தச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் கிளைமோர் கண்ணியை தரைக்கு வெளியே மறைத்து வைத்து இயக்கக் கூடிய வாய்ப்பான நிலைமைகள் காணப்படவில்லை.

நிலக்கண்ணி மூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பின் வீதியில் ஆழமான குழி ஏற்பட்டிருக்கும். ஆனால் வீதியில் அத்தகைய தடயங்கள் எதுவும் இல்லை.

படையினர் பயணம் செய்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒரு குண்டு வெடித்திருப்பின் இத்தகைய சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதற்கான சாத்தியங்களையும் நிராகரிக்க முடியாது.

எனினும் படையினர் அவசரப்பட்டு இதனை ஒரு தற்கொலைத் தாக்குதல் என அறிவித்திருப்பது இராணுவ நோக்கர்களிடையே வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

தற்கொலையாளி எனக் கூறப்படும் பெண் அடையாளம் காணப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டால்தான் உண்மை தெரியவரலாம்.

இப்பத்தியை எழுதும்வரை இத்தாக்குதல் எத்தகைய பாணியில் நடத்தப்பட்டது என்பதில் சந்தேகமும் குழப்பமுமே நீடித்தது.

இது ஒரு பெண் தற்கொலையாளியாலேயே நடத்தப்பட்ட தாக்குதல் எனக் கூறும் பாதுகாப்புத் தரப்பினர் சம்பவம் தொடர்பாக பல தகவல்களைத் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடைபெறுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்னர் அந்த வீதிப்பகுதிக்கு வந்த இரு இளைஞர்கள் அப்பகுதியில் காணப்பட்ட பொதுமக்களை அங்கிருந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டதாகவும் -

அவர்கள் யார் என்பதை கண்டறிய விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

சம்பந்தப்பட்ட தற்கொலையாளியான வயோதிபப் பெண் வீதியில் சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்தே டிரக் மீது மோதியதை தான் கண்டதாக காயமடைந்த அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் உணர்விழக்கும் தறுவாயில் தெரிவித்துள்ளார் என்றும் -

அந்தப் பெண் பெருமளவு வெடிகுண்டுகளை தனது உடலில் பொருத்தி இருந்தாரா அல்லது சைக்கிளில் குண்டுகளைப் பொருத்தி வந்தாரா என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்தி உள்ளதாகவும் வன்னி படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. *

## சர்வதேச கவனத்தை ஈர்த்த தாக்குதல்

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் படுகொலைச் சம்பவத்தை அடுத்து வெளியான சர்வதேச உணர்வலைகள் வழமைக்கு மாறனவையாகவும் கவனத்தை ஈர்ப்பனவாகவும் அமைந்திருக்கின்றன. உலகில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெறும் தலைநகரமாக விளங்கும் கொழும்பில் கடைசியாக நடைபெற்ற தாக்குதலில் நீலன் திருச்செல்வம் பலியாகியுள்ளார்.

கொழும்பில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இவரே. கலாநிதி நீலன் ஒரு அரசமைப்பு விவகார சட்ட நிபுணர், மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி என்ற வகையில் நாட்டுக்கு வெளியிலும் அவர் பிரபல்யமானவராக இருந்தார். அதனாலேயே அவரது மரணத்துக்குக் காரணமான தாக்குதல் சர்வதேச ரீதியில் கண்டிக்கப்பட்டிருக்கிறது எனக் கொண்டாலும் அமெரிக்க அதிபரும் அவரது துணைவியும் அனுதாபமும் அதிர்ச்சியும் தெரிவிக்கும் அளவுக்கு இந்தச்சம்பவம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஐ.நா. செயலாளர் நாயகமும் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல மனித உரிமை அமைப்புக்களும், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட முக்கிய நாடுகளைச் சேர்ந்த பொதுசனத் தொடர்பு சாதனங்களும் இத்தாக்குதலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

இந்தச் செய்திகள் எல்லாமே நீலனின் கொலையைக் கண்டித்திருப்பதுடன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக்காணும் அவசியத்தையும் வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளன.

இந்த வகையில் இலங்கையில் இடம்பெறும் நிகழ்வுகள் சர்வதேச கவனத்தை மிகவும் ஈர்ப்பனவாக மாறிவருகின்றன. நீலனின் படுகொலையை அடுத்து வெளியான சர்வதேச உணர்வுகள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஆனால் இந்தச் சூழ்நிலை விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் அரசு மேற்கொள்ளும் பிரச்சார நடவடிக்கைகளுக்குச் சாதகமாக மாறியுள்ளது. அடுத்த சில வாரங்களில் வெளிநாடுகளில் - குறிப்பாக அமெரிக்காவில் - நீலனின் அஞ்சலிக் கூட்டங்களை புலிகளுக்கு எதிரான பிரச்சாரக் கூட்டங்களாக நடத்த அரசு திட்டமிட்டு வருவதாக தெரிகிறது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை வரைவதில் முக்கிய பங்கு வகித்தவரான நீலன், அரசின் திட்டத்துக்கு ஆதரவாக அடுத்த சில வாரங்களில் அமெரிக்காவில் பிரச்சார சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருந்தார் என்ற தகவல் அவரது மறைவுக்குப் பின்னர் வெளியாகியிருக்கிறது.

அவர் கொல்லப்படுவதற்கு இதுவும் காரணமாக இருந்திருக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. *

## மாணிக்கதாஸன் பற்றி 'திவயின' செய்தி

புளொட் அமைப்பின் இராணுவத் தளபதி என். மாணிக்கதாசனும் அவரது குழுவினரும் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டி 'த இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருகிறது.

சிங்கப்பூர் சென்றுள்ள மாணிக்கதாஸன் அங்கிருந்து தமிழ் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளதாகவும் இதுகுறித்து தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள 'திவயின' மாணிக்கதாஸனின் மெய்ப்பாதுகாவலர்கள் 17 பேர் கடந்த ஜூன் 17 ஆம் திகதி போலிக் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி தமிழ்நாட்டுக்குள் ஊடுருவியது குறித்து சகல பொலீஸ் நிலையங்களும் எச்சரிக்கை செய்யப்பட்டிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

புளொட் அமைப்பில் சக்திமிக்க தலைவராகக் கருதப்படும் மாணிக்கதாஸன் வெளிநாடு சென்றிருப்பதை உறுதிப்படுத்திய புளொட் வட்டாரங்கள் அவர் எங்கு தங்கியுள்ளார் என்பதை தெரிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 18 இழந்தசொர்க்கம்

செங்கை ஆழியான்

வானத்தில ஹெலிக்கொப்டர் ஒன்றின் இரைச்சல் எழுந்தது. நான் பயத்துடன் முற்றத்துக்கு வந்தேன். வீட்டிற்குள்ளிருந்த தையல்முத்தாச்சி, "உள்ளுக்கு வாருங்கோ... சுட்டுவிடப் போறான்" என்று குரல தந்தாள். நான் அவள் பேச்சினைச் சட்டைபண்ணாமல முற்றத்தில் நின்றபடி வானத்தை அண்ணார்ந்து பார்த்தேன். ஹெலியிலிருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் காற்றில் அசைந்து மிதந்தன. அவை நாலாபக்கங்களிலும் பரவிப் பறந்து கீழிறங்கின.

"ஏதோ நோட்டீஸ் போடுறான்கள்." என்றபடி கீழேவிழும் துண்டுக் காகிதம் ஒன்றினைப் பெறுவதற்காக ஒழுங்கையில இறங்கினேன். தையல் முத்தாச்சியும் முற்றத்திற்கு ஓடி வந்தாள். காற்றில் அள்ளுப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் விழுந்தவிடத்திலிருந்து விலகிச் சிதறியிருந்தன. வயலில் இறங்கி வரம்பில் நடந்து ஓரளவு வெள்ளத்தில் நனைந்த துண்டுப்பிரசுரத்தோடு நான் வீட்டிற்கு வந்தேன். என்னைப்போல வீடுகளுள் பதுங்கியிருந்தவர்கள், வளைகளை விட்டு வரும் எலிகளாக வெளியே தலையை நீட்டினர்.

"என்னவாம்?.."என்று ஆவலுடன் கேட்டாள் தையல்.

"ஆமி வருகுதாம்... எல்லாரையும் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு வரட்டாம். -ஒவ்வொரு ஊர்க்காரருக்கு ஒவ்வொரு பாடசாலை..."

"எங்களை எங்க வரட்டாம்?"

"யாழ்ப்பாணக்கல்லூரிக்கு... வட்டுக்கோட்டைக்கு.."

"என்ன செய்யப்போறான்களாம்.?"

"ஆருக்குத் தெரியும். சிலவேளைகளில யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிக் கொண்டுபோய் சென்பற்றிக்ஸ் காம்பில வைக்கப்போறான்களோ? அங்கதான் ஒரு காம்ப் இயங்குதாம். சாப்பாடு, மருந்து, பிஸ்கட் எல்லாம் கொடுக்கிறதாக ரேடியோவில சொன்னான்கள்.."

"எக்கணம் எல்லாரையும் பிடிச்சுக்கொண்டு போய்க் கப்பலில ஏற்றிக் கொழும்புக்கு அனுப்புறான்களோ தெரியாது... நான் அப்பவே சொல்லநினைச்சன். பிள்ளையளோடு அங்கால சாவகச்சேரிப் பக்கமாக ஓடித்தப்புவம் எண்டு. பயந்து சொல்லவில்லை. இப்ப ஆமி எல்லாரையும் கப்பலில ஏற்றிக் கொழும்புக்குக் கொண்டுபோய் சிறையில வைக்கப் போகுதோ என்னவோ..."

நான் தையலைக் கோபத்துடன் பார்த்தேன்.

"ஏனப்பா, விசர்கதை கதைக்கிறீர். அப்படியொண்டும் நடக்காது. கூடினா இப்ப வரச்சொல்கிற பாடசாலைகளில வைச்சு நிவாரணம் தந்து பராமரிப்பாங்கள். அவ்வளவுதான்.. வெளிக்கிடும் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்குப் போவம். அவங்கள் அறிவிச்சபிறகு இங்க இருக்கிறது சரியில்லை. ஆமிவரேக்க சும்மாவராது, குண்டு, ஷெல் அடிச்சுக் கொண்டுதான் வருவான்கள். குறிச்ச பள்ளிக் கூடங்களைத் தவிர்த்து அடிப்பாங்கள்... போவம்..."

"இவங்களை நம்ப முடியாது..."

நாங்கள் படலையைத் திறந்து கொண்டு புறப்பட மயில்வாகனத்தாரும் அவருடன் இருந்த மூவரும் வீதியில் ஏறினர். நாங்கள் அன்று பிற்பகல் பாடசாலையை வந்தடைந்தோம். நாங்கள் வருவதற்கு முன்னரே அங்கு முப்பது குடும்பங்கள் வரையில் வந்து குடியேறியிருந்தன. சிலர் மாட்டுவண்டில்களில் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு வந்திருந்தனர். பெரும்பாலானோர் கால்நடையாக வந்திருந்தனர். சைக்கிள்களும் நிரம்பிக்கிடந்தன.அக்கும்பலில் நடுத்தரவயதிற்கு மேற்பட்டோரே கூடுதலாகக் காணப்பட்டனர்.ஓரிரு குடும்பங்களில் பிள்ளைகள் இருந்தனர்.

யாழ்ப்பாணக கல்லூரியின் வகுப்புத் திண்ணையில மனைவியுடன் அமர்ந்தேன். எனக்குச் சற்று அப்பால் எனக்குத் தெரிந்த வயதான ஓர் ஆசிரியர் மனைவியுடன் இருப்பது தெரிந்தது. நினைவுபடுத்த முயன்றேன்.

நினைவு வரவில்லை.

நாங்கள் இராணுவத்திற்காக அங்கு காத்திருந்தோம். இயல்பான பயம் எல்லார் முகத்திலும் படர்ந்திருந்தது.

ஒரு நாள் கழிந்தது. கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்களை ஆக்கி உண்டனர். சிலர் பட்டினி கிடந்தனர்.

"இப்படி எத்தனை நாள்களுக்கு இங்க இருக்கிறது?. வீட்டிற்குத் திரும்பிப் போகலாம்." என்று சிலர் முடிவெடுத்தனர்.

"விசர் வேலை செய்யாதையுங்கோ.." என்று பலரும் எச்சரித்தால் நின்றுவிட்டனர்.

எனக்குப் பலரும் அறிமுகமாயினர். நான் வந்தபோது அவதானித்த ஆசிரியர் என்னிடம் வலிய வந்து பேச்சுக் கொடுத்தார்.

"நீங்க பழைய விதானையார் துரையப்பர் எல்லோ...? நான் சுந்தரம் பிள்யை மாஸ்ரர். பென்சன் எடுத்திட்டன்."

"நாடகங்கள் எழுதுற சுந்தரம் பிள்ளையோ?"

"சரியாகக் கண்டுபிடிச்சிட்டியள்.. எங்க இருக்கிறியள்..?"

"அராலியில...கரைப்பிட்டி விநாயகர் கோயிலுக்குக்கிட்ட..."

"நானும் அராலியிலதான். ஒருத்தரையொருத்தர் காணவில்லை. எல்லாரும் வெளியில் தலைகாட்டாமல் இருந்திருக்கிறம்.."

"ஓமோம்.. தம்பி, நீர் இங்க வந்த பிறகு யாழ்ப்பாணம் போயிருக்கிறீரோ?" என்று அவரைக் கேட்டேன்.


"ஓமோம்...ஒருக்காப் போனன்." சுந்தரம்பிள்ளையின் குரல் எப்பொழுதும் சபையில் சற்றுப்பல்மாக ஒலிக்கும். நாங்கள் இருவரும் உரையாடுவதைக் கேட்கவெனப் பலர் அங்கு குழுமிவிட்டனர். சுந்தரம்பிள்ளை அராலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தன் வீடு பார்க்கப்போன அனுபவத்தை விவரித்தார்.

"...நானும் நண்பர் ஒருவரும் யாழ்ப்பாணத்திற்கு இரண்டு சைக்கிள்களில் புறப்பட்டோம். என்ர சைக்கிளுக்கு அடிக்கடி காத்திறங்கும். நாம் வழியில் எவரையும் சந்திக்கவில்லை. ஓட்டுமடத்தடியில் சில போராளிகளைச் சந்தித்தம். எங்களைக் கண்டதும் 'ஏன் போகாமல் இருந்தனீங்கள்? அவன் நாவற்குழிப் பாலத்தை மூடிவிட்டான். இனிப போகமுடியாது. திரும்பிப் போங்கோ' என்றனர்.

"யாழ்ப்பாண ரவுணில எங்கட வீடுகள் இருக்கின்றன. அதுகளிலிலேயிருந்து அத்தியாவசியச் சாமான்கள் சிலவற்றை எடுத்து வரப்போறம் எண்டு நாங்கள் சொன்னம்.

"ஆமி இப்ப நல்லூரில நிக்குது. ரவுண் முழுக்க ஷெல் அடிக்கிறான்கள். உங்கால போறது ஆபத்து எண்டு அவர்கள் கூறினார்கள்.

"அதையும் மீறிப்போனம். வீதிகள், ஒழுங்கைகள் எல்லாம் குறுக்காக வெட்டப்பட்டிருந்தன. பெரும் அகழிப் பள்ளங்கள். இலகுவில் கடக்க முடியாதவை. விழுந்தால் தூக்கிவிட வேறொருவர் உதவி தேவை. ஒரு விதமாக வளவுகளுள்ளால விழுந்தெழும்பி நீராவியடிக்கு வந்தம். சன சந்தடியில்லை. அப்படியொரு மயான அமைதி. வீட்டிற்கு வந்தம். என வீடு அப்படி யேயிருந்தது. வீட்டு வாசலில் நான் வளர்த்த இரு நாய்களும் என்னைக் கண்டதும காலில் விழுந்து சந்தோச முணுகல் செய்தன. கொண்டுவந்த சோற்றை அவற்றிற்குப் போட்டன். வீட்டுக் கதவுகளெல்லாம் திறந்து கிடந்தன. புத்தகங்கள், உடுப்புகள், அரிசி சாமான்கள் இவை அங்கிருந்தன. இவற்றில எதைக்கொண்டு போவது? அரிசிதான் தேவை. சைக்கிள் கரியரில் அரிசி மூடையைத் தூக்கிக் கட்டியபோது வடக்கிலிருந்து ஷெல் மழையாகப் பொழியத் தொடங்கியது. ஓடிவந்து ஓட்டுமடத்தடிச் சந்தியில் ஏறியபோதுதான் நெஞ்சில நீர் சுரந்தது... யாழ்ப்பாணத்தில் வெறும் கொன்கிரீட் கட்டிடங்கள் காடாகக் கிடக்கின்றன. அழிந்த பேய் நகரம் போலக் காட்சிதருகின்றது; மக்கள் நடமாடிய பூமி வெறிச்சிட்டுக்கிடக்கிறது. எத்தனை ஆயிரமாயிரமாண்டுகளாக எங்கள் முன்னோர்கள் வாழ்ந்த பூமி இப்படி மயானமாக மாறிவிட்டது. வளவுகள் பற்றைக் காடாகிவிட்டன. வீதிகளில நாய்களும் மாடுகளும் செத்துக்கிடக்கின்றன. கோழிகள் எதுவுமில்லை... தனித்து நிற்பது மகாபயங்கரமாகத் தெரிந்தது."



சுந்தரம்பிள்ளை சிரித்தார்.

"என்ர வீட்டுப்பக்கம் போனியளோ?" என்று சமயசந்தர்ப்பம் அறியாமல் ஒருவர் கேட்டார். அவரை எல்லாரும் பரிதாபமாகப் பார்த்தனர்.

அன்றும் இராணுவம் அவ்விடத்திற்கு வரவில்லை. நான்காம் நாள் அதிகாலை சித்தன்கேணி வழியாக இராணுவம் வட்டுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தது. விடிந்தும் விடியாத காலைப்பொழுதில் பாடசாலையைச் சுற்றி ஏந்திய துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் நின்றிருந்தனர். பலர் முதன் முதல் இராணுவத்தைப் பத்தாண்டுகளின பின்னர் அன்றுதான் கண்டனர்.

உணவுப் பொருள்கள் லொறிகளில் கொண்டு வரப்பட்டிருந்தன.

"இவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காக உணவுப் பொருள்கள் கொண்டு வந்திருக்கிறம். பெயர் பதிந்து.."

"முதலில் உணவுப் பொருள்களைக் கொடுங்கள். அவர்கள் பலர் நன்றாக வயிறாரச் சாப்பிட்டுப் பல நாட்களாகின்றன. நோயாளிகள் உள்ளனர். டொக்டர் ஒருவரும் வரவில்லையா? மருந்துகள் இல்லையா?.." என்று ஒருவர் கேட்டார்.

அவர் கூறுவது இராணுவ அதிகாரிக்குச் சரியாகப்பட்டது. பெயர்கள் பதியப்படவில்லை. முதலில் எல்லாரையும் வரிசையாக நிற்க வைத்துவிட்டு உணவுப் பொருள்களை வழங்கத் தொடங்கினர்.

பொருட்கள் தனித்தனியாகப் பொதி செய்து கொண்டு வரப்பட்டிருந்தன. முதலில் அரிசி, மைசூர் பருப்பு, சீனி, தேயிலை என்பன வழங்கப்பட்டன. சிலர் இரண்டாம் முறையும் வரிசையில் நின்று பெற்றதை அவதானித்தேன். அதைத் தவறாகச் சொல்ல, எண்ண முடியவில்லை. ஒவ்வொருவருக்கும் நிவாரணம் கிடைத்தது.

ஒரு வகுப்பறையில் நோயாளிகள் டாக்டர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டனர். மருந்துகள் வழங்கப்பட்டன. அங்கும் கியூவரிசை காத்திருந்தது. ஒரு லொறியிலிருந்து சவர்க்காரம் வழங்கத் தொடங்கியபோது டாக்டரின் வரிசையில் நின்றவர்கள் வரிசையைக் குழப்பிக்கொண்டு ஓடி வந்தனர். சவர்க்காரம் பெறுவதற்காக அவர்கள் நெருக்கியடித்தனர். ஒருவர் மீதொருவர் விழுந்தனர். சவர்க்காரம் அவர்களுக்கு அவசியமான ஒரு பொருளாக மாறியிருந்தது. இருமாதங்களாக உடுப்புகளும் உடம்புகளும் சவர்க்காரத்தைக் காணவில்லை.

"இவை நாங்களாகத் தேடிக் கொண்டவை."

"வேறென்ன வேண்டும்..?"

"இங்க வராமல் பயந்து வீடுகளில பட்டினியோட கனசனம் இருக்குது. ஒருக்கா நாளைக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். கேள்விப்பட்டு வருவினம். மற்றது தீப்பெட்டி ஒவ்வொண்டு வழங்க வேண்டும்.."

அந்த அதிகாரி ஒப்புக் கொண்டான். நெருப்புப்பெட்டி கொண்டுவர எண்ணவில்லை என்று மன்னிப்புக் கோரும் வகையில் கூறினான். அடுத்த தடவை நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்றான். வீடுகளுக்குள் பதுங்கியிருந்த சனங்கள் மெல்லமெல்ல நிவாரணம் கொடுப்பதைக் கேள்விப்பட்டு ஓடிவந்தனர்.

மூன்றாம் நாள் இராணுவம் அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டது.

"நான் நினைச்சன். இவங்கள் இங்க காம்ப் போட்டு இருப்பான்கள் எண்டு..." என்றார் மயில்வாகனம்.

எல்லோரும் மீண்டும் தங்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது, 'அடுத்த நிவாரணம் எப்பொழுது?' என்ற எண்ணம்தான் மனதில் இருந்தது.

(தொடரும்)

## குறள் வெள்ளம்

வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம். இதை வாழும்போதே கற்கமுடியும். பிழைத்தால் பின்நோக்கிப்போய் மீண்டும் வரமுடியாது. பிசகியது பிசகியதுதான். மீதியை சரிக்கட்ட முயனையலாமே தவிர ஆதியை மாற்ற முடியாது.

இன்றெல்லாம் வசதிகள், வாய்ப்புக்கள் அதிகம். இதனால் மனம் அலைவது அதிகம். அதற்கும் இதற்கும் பறக்கும் வாழ்வில் அமைதி ஏது?

அந்தக்காலம் ஆண்டுக்கு ஒரு கறுப்பு - வெள்ளைத் திரைப்படத்தைப் பார்த்துக் கிடைத்த திருப்தி - இன்று தினசரி வீடியோ பார்த்துப் பார்த்தும் கிடைக்குதில்லை. நாளை மீண்டும் மனம் காத்திருக்கும் - காரணம் - மனதேதான்! போதும் என்ற மன அடக்கம் ஒன்றுக்குத்தான் தேவை என்றில்லை. யாருக்கு அது வாய்த்தாலும் அவர்கள் நிம்மதியாக வாழலாம்.

புலன்கள் அலைபாய - தேடித் தேடி அலைந்து - கிடைக்கக் கிடைக்க அடங்காத - விரிவுபட்டுச் செல்லும் - ஆசைகள் வில்லங்கத்தில் போய் முடிவது கண்கூடு.

ஒவ்வாதது கண்டு ஒதுங்கி - கண்களை மூடி - காதுகளைப் பொத்தி விலகிவிடும் அடக்கம் வாழ்வில் சோலிகளை விலைக்கு வாங்காது.

ஓர் ஓட்டினுள் ஐந்தும் இழுக்கும் ஆமை போல் மெய், வாய், கண், மூக்கு, செவியென ஐம்புலனையும் அடக்கிவிட்டால் - கட்டுப் படுத்தி விட்டால் - எழுமையும் - இனிவரும் காலமெல்லாம் - தொல்லைகள் விலகிக் கொள்ளும்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து** -0126.

- அம்பிகைபாகன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

ஆதிக்கவர்க்கமே!
அழித்துவிட்டேன் தமிழையென்று
ஏளனமாய் முழங்கி
எள்ளியா நகையாடுகின்றாய்?
மன்னித்துவிடு - நீ
மனப்பால்தான் குடிக்கின்றாய்
மாண்டாலும் நாங்கள்
மறவராய்த்தான் மாள்வோம்!
வீழ்ந்தாலும் இங்கே
விதையாய்த்தான் வீழ்வோம்,
சுவடுகளே தெரியாமல் நீ
சிதறுவாய் ஓர் நாள்,
சுதந்திரக் காற்றிங்கே
சுழன்றடிக்கும் அந்நாள!

-வண்ணை செ.பிரசாத்-

அன்று,
அமைதியின் உருவமாம்
வண்ணத்துப் பூச்சியாய்
அவனியில் சிறகடித்துப்
பறந்து திரிந்தாயே. இன்று...
கோரவடிவம்தானெடுத்து
தாண்டவமா ஆடுகின்றாய்?
கோரப்பல் முளைத்த
விரல் இடுக்குகளால் குதறப்படும்
ஒவ்வொரு துண்டமும், நாளை
சரித்திரத்தில் சங்கமம் ஆகிவிடும்.
கடலில் ஓர் நாள் அமைதி வரலாம்
இந்தப் புதைகுழிப் பூமியில்???...

-த.கவிதா-
துன்னாலை.

பேரினப் பூதத்தின்....
இனவாத வல்லாதிக்கத்தினுள்
இருண்ட எம் தேசம்! ~ அதன்
எக்காளப் பெருமூச்சு...
விடுதலை விளக்கில் நெய்வார்க்கும்!
வாயுதிர்க்கும் இனவாதத்தீ....
தியாகத் திரியில் தீபமேற்றும்! ~ நாளை
தர்மத்தின் கரங்கள்
தமிழ்த்தாயின் துயர் துடைக்கும்!

-மா.மணிகண்டன்-
நயினாதீவு.

உருளும் வாழ்க்கைப் பயணத்தில்
உடைந்து போன நினைவுகளாயும்
கலைந்து போன கனவுகளாயும்...
இருந்த காலம்... அது இறந்தகாலம்....
பாதி வாழ்க்கையோ வெறும் தூக்கத்தில் கழிய
மீதி வாழ்க்கையோ வெறும் ஏக்கத்தில் அழிய
துளை கொண்டு எழுந்த துன்பங்களால்
பிளவாகிப், பிரிவாகிப், பாழாகிப் போகும்
வாழ்க்கையின் கோலங்கள்.

மு.வே.அன்பழகன்-
மட்டுவில் தெற்கு.

| | | |
|---|---|---|
| டைனோ | சரசின் | பேரினை |
| டைன | மைற்றே | மீறினை |
| கிளைமோர் | கிழிக்க | மேனியை |
| மிதிவெடி | மழிக்க | காலினை |
| பஞ்ச | சீலமாம் | போதனை |
| படுகொலை | நாட்டின் | சாதனை |
| ஐ.நா. | சபைக்கோ | வேதனை |
| அனுப்பினர் | நாயுடன் | தூதனை |
| அடிக்கு | அடியாய் | சோதனை |
| முடிக்க | முடியுமோ | போரினை |

-மதுரை பண்ணாகம்-

அதிகார வர்க்கத்தின் அவதார
அகங்காரப் (பட்டினிப்) பேயே!....
எம் தேசத்தின் (இருதயப்) பரப்புகளை
சிதைத்து விட எண்ணமா?....
எங்கள் (சுவாச மூச்சுக்) காற்றுக்களே
உன்னைச் சுட்டெரிக்கும் தீ...
தலமுறையின் (இதயத்) துடிப்புக்குள்
சமாதியாகிவிடுவாய் பார்...

-முல்லை விக்கி-
(யாழ்.பல்கலைக்கழகம்)

இந்து சமுத்திரத்தின் நித்திலமே....!
இங்கிதமாய் வாழ்ந்த உன் ~ உறவுகள்
சிதறடிக்கப்பட்டது எதனால்......?
சீறி எழுந்து எம்மினம் ~ கைகோர்த்துச்
சிறகடித்துப் பறக்கும் நாள்,
இந்த நூற்றாண்டில் சரித்திரமாகிவிடும்!

-சா.இரஞ்சினி-
மட்டுவில் வடக்கு.

உன்னைப் பார்த்தபின்புதான்
நான் விழித்துக்கொண்டேன்...
அங்கே தகர்க்கப்படுவது;
'யுரோசிக்பார்க்கல்ல...'
மலிந்து கிடக்கும்
இம் மண்ணின் அடக்குமுறைகளை
தகர்த்து எறிவதற்கான
ஒரு செய்முறை விளக்கம்!!!

-ச.தியானேஸ்வர சர்மா-
நுணாவிலூர்.

செம்மணியில் புதைந்திட்ட
மானிடர்க்காய்
நீதி கேட்க
நீயுமா நிலத்திலிருந்து
புறப்பட்டாய்?
கோரப்பல் முளைத்த
உன் விரல்களினால்
கிழித்துவிடு பொய்மைதனை...
அடுத்த பிறப்பிலாவது...
அமைதிப் புறாவாய் உருவமெடு!

-சுநந்திதா-
யாழ்ப்பாணம்.

அனுதினமும் மனித உயிர்கள்
அழிந்து வரும் இலங்கைத் தீவில்
ஐந்தறிவுப் பிராணிகள் கூட
அரசாட்சி செலுத்த வந்துவிட்டன...
இது இருபத்தோராம் நூற்றாண்டின்
அழிவின் முடிவல்ல....
தொடக்கத்தின் சின்னமே!

-பா.குயிலி-
இணுவில் மேற்கு.

என் முகம்பார்க்க
மறுக்கும்
மனிதப்பிராணிகளே!
உங்களுக்குள்
உற்று நோக்குங்கள்!
அங்கு நானிருப்பேன்
ஆசையாய்...
அகங்காரமாய்....
கோபமாய்.....
குரோதமாய்....

-ச.சாரங்கா-
சங்கத்தானை.

இனவாத விலங்கின்
வெறியாட்டம்
அந்தோ!
துண்டுதுண்டாக்கப்படும்
நம் தேசம்!!

-இணுவை றொட்றிக்-

## உங்கள் கவிதைகள்

அம்மையின் ஆட்சியில்;
புறாவிற்குப் பதிலாய்;
புதுமிருகமொன்று;
சமாதானச் சின்னமாய்...
சித்திரிக்கப்பட்டுள்ளதா?

-எஸ்.வீ.ரூபன்-
அராலி.

யுத்த பூமியில்
சத்தம் போடாமல்
எரிமலை போல்
பாதிப்பை ஏற்படுத்தும்
தீங்கான மிருகங்கள்
எங்குமிருக்கும்

-த.செந்தூரன்-
சாவகச்சேரி.

அதிகார ஆசை
அதிகரிக்கும் போது
இப்படித்தான்
இதிகாசக் கதைகள்
இன்றும் நடக்கும்
கண்ணெதிரில்
'கடவுள்தான்
காப்பாற்ற வேண்டும்'
தந்தை சொன்னது
உலகைத்தான்.

-க.நாகராசா-
நுணாவில்.

நிலவும் இருட்டும் நிச்சயம் மாறும்...
இரவு இரவாயும் பகல் பகலாயும்
என்றும் நிலைத்தல் இயற்கை அல்லவே!
'எல்லா விசைக்கும் எதிர்விசை உண்டு
சமமாக' என்று தத்துவம் பேசும்
அடக்கு முறைக்கும் அளவு வேண்டும்.
"தீராக் கோபம் போராய் முடியும்"
தீர்ப்பவை தீரா திருந்தால்
புதிய தமிழ் 'டைனோசேஸ்' புறப்பட்டுறுமுமே!

-வ.சின்னப்பா-
தனங்களப்பு.

'அமெரிக்க டிராகன்'
நம்நாட்டில் மெல்ல
அடியெடுத்துவைத்தால்
அச்சமது மிகுந்து
மிச்சமாயிருந்த நிம்மதியும்
துச்சமாயத் தூள்தூளாய்
உடைவது திண்ணம்!

-த.பிரபாகரன் -
சுழிபுரம்.

சிதைக்கப்பட்ட
தேசத்தில்
சிறகிழந்தோம்!
உச்சரிக்க
உறவுமில்லை!
உணர்வுவர
உயிருமில்லை....!

ந.சிறிதரன்
கிளிநொச்சி



செம்மணியின் சுவடுகள் போல் - இனி
வன்னியிலும் தோன்றுமென
செட்டைகட்டி சொல்ல வந்த
விசித்திர ஐந்தே!

தலைகீழாய்ச் சிதையும்
இத்தேச இனத்தின்
அழிவுச் சின்னமே!!!

-த.ஈ.மோகன்-
உடுவில்.

இது ஒரு.....
விடியலின் சாயல்...!
ஆதிக்க ஆட்சியின்
அழுத்தங்களுக்குள்
அகப்பட்ட
ஐந்தறிவு ஜீவனின்
மரணப் போராட்டம்!!
ஆற்றாமையின்
ஆர்ப்பரிப்பால்....
முடங்கிப்போன
முள்வேலி வாழ்க்கையுந்
தகர்ந்து....
அடங்கிப்போன
புது அத்தியாயம்.

-க.நாகேஸ்வரா.

நாட்டின் சிதைவுகளின்
சின்னங்கள் இவை!
இம் மண்ணினத்தின்
ஒற்றுமையின் சின்னங்களின்
சிதறல்கள் இவை!

-அ.நிதர்சன்-

## மௌனமொழி - 46



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் [illegible] றேகலீஸ்).

ஆதிக்க அன்பரே!
எம் நூலகத்தில் இட்ட நெருப்பு
நூர்ந்துவிடவில்லை இன்னும்.
சாதிக்க எழுந்த
சத்திய வேள்வியில்
ஆதிக்க தேசம் அதிரும் - புது
நீதியிற் பொழுது புலரும்!

-இ.ஜெயக்குமார்-

வயிற்றிலிருந்து
வெடித்த
பறவை நாகம்
வடக்கையே தீண்டுது
வாலினால்!
நகங் கொண்டு வருகுது
நம் தமிழைக் கிழிக்கவே -
நயமாய்!
நீயும்
வாளேந்தி அறுத்திடு
அந்தப்
பேரினவாத வாலை!
இன்றேல்
நீ-
வெட்டப்பட்ட
வாழைபோல்
வீதியில் காண்பாய்
உன் வாழ்வை!

-ஆ.ஜென்சன் றொனால்ட்-
ஈச்சமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்



சின்னுவ அச்சிபே

## சில குறிப்புகள்

**சாந்தன்**

13

சின்னுவ அச்சிபே, ஆபிரிக்காவின் மிகவும் அறியப்பட்ட நாவலாசிரியர். ஆபிரிக்க நாவலின் முன்னோடி எனக் குறிப்பிடப்படுகிறார். ஆபிரிக்காவின் கதையை - ஐரோப்பாவைச் சந்தித்த பிறகு அது எதிர்கொண்ட சரித்திரத்தை - ஆபிரிக்கக் கண்களாற் கண்டு எழுதியவர்.

அச்சிபேயுடைய நாவல்களைச் சுருக்கிச் சொல்வது மட்டுமல்ல; அவருடைய நாவல்களின் தலைப்பை மொழிபெயர்ப்பதும் அதைவிடக் கடினம்; அவை கவிதை நடையும், கருத்தாழமும் மிக்கவை. 'இற்றுப் போகும் இழைகள்', 'அற்றுப்போன அமைதி', 'ஆண்டவனின் அம்பு', 'மக்களில் ஒருவன்' போன்ற நாவல்களையும் 'கழிப்பு முட்டை' முதலிய கதைத் தொகுதிகளையும், கவிதைத்தொகுதி ஒன்றினையும் எழுதினார் அச்சிபே. அவற்றில் முதல் நாவல் அவருக்குப் பெரும் புகழ் சேர்த்தது. உலகின் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்ட அது, அண்மையில், 'சிதைவுகள்' என்ற பெயரில் வெளியாயிற்று.

அந்நாவலின் நாயகன், உழைப்பாளி; வீரன். சமூகத்தால் மதிக்கப்படுபவன். பூமித்தேவதைக்கெதிராக அவன் தெரியாத்தனமாகச் செய்த பிழைக்குத் தண்டனையாக ஊரை விட்டுப்போக நேர்கிறது. திரும்பிவருகிறபோது, வெள்ளையர்களின் மதமும் அதிகாரமும் வேரூன்ற முயல்வதைப் புரிந்து கொண்டு, அதற்கெதிராகப் போராடத் தன் இனத்தாரைத் தூண்டுகிறான். அதில் தோல்வியுறுகிற அவன் தன்னை மாய்த்துக் கொள்கிறான்.

அந்த நாயகனின் பேரன் இரண்டாவது நாவலின் நாயகன். பாட்டன் தடுக்க முயன்று தோற்றுப்போன அந்த மாற்றங்களின் தாக்கங்களுக்குட்பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கம். புதிய நிலமைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கிற நிர்ப்பந்தத்தில் அவனும் தோற்றுப் போகிறான். 'ஆண்டவனின் அம்பு' கூட, தவிர்க்கவியலாத துன்பியலையே பேசுகிறது. மாற்றங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாதுபோன ஆபிரிக்கர்களின் துன்பங்கள் இம்மூன்று நாவல்களிலுமே பேசப்படுகின்றன. இது அந்தந்தப் பாத்திரங்களின் தனிப்பட்ட பலவீனம் என்பதிலும்பார்க்க சரித்திரத்தின் போக்கில், நிர்ப்பந்தத்தில் அகப்பட்ட - அதனைத் தடுக்கச் சக்தியற்றுப்போன - மனிதர்களின் கதி என்பதே சரி.

இறந்த காலத்திலிருந்து விலகி சமகாலப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவராக அச்சிபே தம்மை ஆக்கிக்கொண்ட பிறகு எழுதப்பட்டதே, 'மக்களில் ஒருவன்'. சுதந்திர நைஜீரியாவின் ஊழல்களும் குளறுபடிகளும் நிரம்பிய அரசியல் நிலையை அது எடுத்துக் காட்டிற்று. எப்படியிருப்பினும், அச்சிபேயின் நாவல்களிலெல்லாம்-கதையோட்டங்களின் அடிநாதமாக-மனித ஆத்மாவும், வெற்றி பற்றிய நம்பிக்கையும் அழியாமல் ஒலிக்கின்றன.

'எழுத்தாளனின் உண்மைப்பணி' வெறுமனே நிகழ்காலப் படப்பிடிப்போ, சித்திரிப்போ அல்ல; மாறாக, எதிர்காலத்துக்குள் ஊடுருவி நோக்கி அதற்காக மக்களைத் தயார் பண்ணுவது' என்றார் அச்சிபே.


நைஜீரியாவின் முக்கிய இனங்கள் மூன்று; ஹௌஸா, இபோ, யொருபா. அச்சிபே, இபோ இனத்தைச் சேர்ந்தவர். பெரும்பான்மையினரான ஹௌஸாக்களின் எதேச்சாதிகாரத்துக்கும், லாகோஸிலிருந்த அவர்களுடைய இராணுவ அரசாங்கத்துக்கும் எதிராக, 1967இல் இபோ இன மக்கள் கிளர்ந்தெழுந்து, 'பயா.ஃ.ப்ரா' என்னுந் தங்கள் சொந்த மண்ணின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார்கள். நைஜீரிய அரசு, போர் தொடுத்தது. பயா.ஃ.ப்ரா மக்கள் எதிர்த்துப் போராடினர். எனினும் சரியான போராட்ட வழிமுறைகளோ, ஆளுமைமிக்க போராட்டத் தலைமையோ இல்லாததாலும், அந்நிய வல்லரசுகள் நைஜீரியா சார்பாக போரில் தலையிட்டதாலும், அந்த விடுதலைப் போராட்டம் பரிதாபகரமாக நசுக்கப்பட்டது.

பயா.ஃ.ப்ரா பிரச்சினையின்போது, நீதிக்கும், தம்விதியைத் தாமே தீர்மானிக்கிற உண்மையான சுதந்திரத்திற்குமான தம்மக்களின் புரட்சிப் போராட்டத்தில் அச்சிபேயும் இணைந்து நின்றார். 'நான் ஒரு நைஜீரியனாயும், நைஜீரிய ஐக்கியத்தில பெருநம்பிக்கை கொண்டவனாயும் இருந்தேன்; நைஜீரியாவை உணர்ந்து நேசித்தவன் நான். ஆனால் இப்போது அப்படியல்ல', என 68இல் பத்திரிகைக் கடிதமொன்றில் பிரகடனஞ்செய்த அதே அச்சிபே, பயா.ஃ.ப்ரா தலைதூக்க முடியாமல நசுக்கப்பட்ட சோகத்தின் பிறகு, 'மீண்டும் நைஜீரியனாயிருப்பதில் திருப்தியே' என கூறவேண்டி வந்த நிர்ப்பந்தம், அவருடைய முதல் மூன்று நாவல்களின் பாத்திரங்களின் துன்பியலிலும் எவ்விதத்திலும் குறைந்ததன்று. எதுஎப்படியிருப்பினும், இந்த நூற்றாண்டில் ஆபிரிக்கா உலகுக்களித்த மகத்தான இலக்கியவாதிகளில் அச்சிபே முதன்மையானவர் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது.

பயா.ஃ.ப்ரா போரைப் பற்றி எழுந்த இலக்கியங்களாக இரண்டைக் குறிப்பிடவேண்டும். முதலாவது பிரபல பிரிட்டிஷ்நாவலாசிரியரான.ஃ.பிரெட்ரிக்.ஃ.போஸைத் எழுதிய 'பயா.ஃ.ப்ராவின் கதை'. இது புனைகதையன்று; ஆனால் உயிர்த்துடிப்புமிக்க விவரணங்களடங்கிய செம்மை இலக்கியம். .ஃ.போஸைத், பயா.ஃ.ப்ரா போர்க்காலத்தில் தாம் நேர்நின்று கண்டவற்றை எழுதினார். முதலில் பி.பி.ஸி. நிருபராகவும் சொந்தவிருப்பிலும் அங்கு சென்று விவரங்களைத் திரட்டியவா அவர். அந்நூலின் முகவுரையில், 'இந்த நூல், பயா.ஃ.ப்ரா மக்கள் ஏன் நைஜீரியாவிலிருந்து தம்மைப் பிரித்துக்கொள்ள விரும்பினார்கள் என்பதையும், தம்மேல் திணிக்கப்பட்டவற்றை அவர்கள் எவ்வாறு எதிர்கொண்டார்களென்பதையும் கூறுகிறது. நான் பயா.ஃ.ப்ராவின் பக்கஞ் சார்ந்து நிற்பதாக என்மேல் குற்றஞ் சுமத்தப்படலாம்.' என .ஃ.போஸைத் குறிப்பிட்டார்.

அடுத்தது இந்தப் போர்ப் பின்னணியை வைத்து எழுந்த ஆக்க இலக்கியங்களிலொன்று. 'சமாதானத்துக்குத் தப்பிப்பிழைத்தல்' என்ற இந்த நாவலின் ஆசிரியரான சைப்பிரியன் எக்வென்ஸி, நைஜீரியாவின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர். இபோ இனத்தவர். 1976இல் வெளியான இந் நாவல், ஹௌஸா - இபோ உறவுகளிலேற்பட்ட முறுகல் நிலை, அது விடுதலைப் போராட்டமாக வெடித்த விதம், அதன்பின் எற்பட்ட விளைவுகள் - எல்லாவற்றிற்கும் இலக்கிய வடிவு கொடுத்தது. 'போருக்குத் தப்புதல் பெரும் கஷ்டம்; ஆனால் சமாதானத்திற்குத் தப்புதல் அதனிலும் கஷ்டம்!' - என இந்நாவல் கூறுகிறது. பயா.ஃ.ப்ரா போரின் காரணிகளையும், விளைவுகளையும் கூறும் ஒரு செம்மை இலக்கியமாக இது கொள்ளப்படுகிறது. 'எரியும் புற்கள்', 'நகரின் மாந்தர்' ஆகிய நாவல்களையும் எக்வென்ஸி எழுதினார். (தொடரும்)

# அதிர்ஷ்டம் கைகளில்!




**ச.சாரங்கா**

மனம் முழுவதும் வெறுமையாய்க் கிடந்தது அவனுக்கு. அவன் நடுத்தரவர்க்கத்து சாதாரண எழுதுவினைஞன். மாதக்கடைசியில மனைவி, பிள்ளைகளை சந்தோஷமாக வைத்திருக்க முடியாத சம்பளம். ஆனாலும் கௌரவமான கட்டுப்பாடான வாழ்க்கை. பகுதி நேர எழுத்தாளனாகவும் பத்திரிகை நிறுவனமொன்றில வேலை. ஓர் எழுத்தாளனாக நின்று தன்னைதான் நோக்கும் பொழுதுகளில் அவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்வான். "என்ன தான் இருந்தாலும் இந்த நடுத்தர வர்க்கத்தில் வாழ்கை அமைந்துவிடக் கூடாது. உயர் மட்டத்துக்கு ஏறவும் முடியாது; அதேநேரம் கீழ்மட்டத்துக்கு இறங்கவும் முடியாது. திரிசங்கு சொர்க்கமாய் நரக வாழ்கையப்பா". உண்மைதான் அவன் சம்பள முதல் நாளில் போட்ட வரவுசெலவுத்திட்டத்தை புறக்கணிக்கச் சொல்லிக்கொண்டு நண்பனின் சின்னப் பெண் வயதுக்கு வந்து நிற்கும். பக்கத்து வீட்டுக்காரர் தம் பெண்ணுக்குத் திருமணம் கைகூடிய தாய் அழைப்பிதழ் தருவார். கோயில் திருப்பணிக்கென ஆலயபரிபாலனசபையினர் வந்து அவனுக்காக வீட்டில் காத்திருப்பார்கள். புன்னகையோடு வரவேற்பான் - பெரிய மனிதத் தனத்தோடு. உள்ளே மனம் இருப்பிலிருந்து செலவு ஒதுக்கிக் கணக்குப் பார்க்கும் வேகம் கணனியை மிஞ்சும். ஆனாலும் மௌனமான போராட்டம் கௌரவமான, சமூகவியல் சார்ந்த வாழ்விற்காகத் தொடரும். இதெல்லாம் வழமை. இந்தமுறை மனைவியின் 'ஆஸ்மா'வில் இவனுக்கு மூச்சடைத்துப் போயிற்று. சாதாரண அரச ஆஸ்பத்திரிகளில்தான் தவறென மனித மனத்துக்குரிய இயல்போடு சிந்தித்துக்கொண்டான்.

பாசம் தவறான எடுகோள்களை சரிபோலக் காட்டிற்று. பிரபல்யங்களின் தனியார் மருத்து வழிகளும் கட்டணத்தைக் கண்மூடிக் கொண்டே சொல்லின. எல்லாம் போயிற்று. கடன் தெரிந்தவர்களைக் கூடவோடு [illegible] தன்கால் பார்க்கத் தோன்றியது. தேறிவந்த மனைவிக்கு, பிள்ளைகளுக்குச் சீரான கவனிப்பில்லை. இதற்குள் 'நடுத்தர வர்க்கக் கௌரவத்தை'யும் விடமுடியவில்லை. வாழ்கையிலிருந்து தப்பிக்கும் எண்ணம் தோன்றிற்று. கொடிய விஷத்தின் சிறு குப்பியை ஏதோ காரணம் சொல்லி வாங்கியாயிற்று.

நவரச வீதி. நடந்தான். கடைசி நாள்கள். கண்கள் மங்கின. 'வெளி நாட்டுத் தம்பி தன் அக்காவை கையேற்பான்' - மனைவிக்காக மனம் சொல்லிற்று.

"அண்ணை அண்ணை! ஒரு ரிக்கெற் எடுங்கோ அண்ணை. அதிர்ஷ்டம் கையில அண்ணை, அண்ணை" குரலுக்குத் திரும்பினான் வழமையான அதிர்ஷ்டலாபச் சீட்டு விக்கிற பையன். "அண்ணை..... உங்களுக்குத்தான் அண்ணை...." ஒருசிறு மரப் பெட்டிக்கு பின்னாலிருந்து கத்தியவனை வெறுப்புடன் பார்த்தான். "அதிர்ஷ்டம் கையிலயா? நீயே அதை எடடா" சொன்னான். "அதுக்குத்தான் கையே இல்லையே அண்ணை...." சிறுவன் பெட்டிக்கு மேலே கையை எடுத்தான். மணிக்கட்டுக்குக் கீழ் விபத்திலிழந்த மூளிக் கைகள்... அதிர்ந்தான். சில்லறை பொறுக்கி பெட்டிக்குள் வைத்தான். என் கைகள்...எழுதும் வலிமையுடைய என்கைகள்...இவை போதும் எனக்கு. வாழ்க்கையோடு போராடி ஜெயிப்பது ஒரு சுகம். எனக்கு முடியும். மனதில் நம்பிக்கை படர்ந்தது தன்னம்பிக்கை தந்த சிறுவனை வணங்கத் தோன்றிற்று. விலகினான். மனதில் சிரித்தபடி மனைவியின் முகம் எழுந்தது. விஷக் குப்பியை எடுத்து வீசிவிட்டு நடந்தான். பாதங்கள் உறுதியாய் மண்ணில் அழுந்தப் படிந்தன.



சிந்தனைக்கரு:- **தன்னம்பிக்கை**

# வெண்மையும் நுண்மையும்

தமிழ்மொழி பல்லாயிரம் சொற்களைத் தன்னகத்தடக்கியது. அச்சொற்களிலே பெரும்பாலானவை பல பொருள் தந்து நிற்கின்றன. விரிந்த பொருள்களை உள்ளடக்கிய குறியீடுகளாய் நம் எண்ணத்தைப் பொதிந்து வைக்க இடமளிப்பவை இவை.

இச்சொற்களே கவிஞர்களின் கைம்முதல். இச்சொற்களின் துணைகொண்டு, சிந்தனைக்கு அப்பாற்பட்ட பொருள்களையும் நம் கைக்கொண்டு தரும் சித்து விளையாட்டில் கைதேர்ந்தவர்கள் நம் கவிதைச் சித்தர்கள். அவர்கள் கையாள்கையில் மயங்கி, சில வகைச் சொற்கள் பல்வகைப் பொருள் தந்து, அவர்க்கு ஏவல் செய்து நிற்கும்.

சாதாரண கவிஞர்களுக்கே ஏவல் செய்யும் இச்சொற்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பன் கைவயப்பட்டால், விந்தை பல புரிவது வியப்பன்றே! வேறு வேறு இடங்களில் ஒரே சொல் பல பொருள் தரும்படி பிறகவிஞர்கள் அமைத்துக் காட்ட, கவிச்சக்கரவர்த்தியோ, ஒரே பாட்டில் இரண்டிடங்களில் வரும் ஒரே சொல்லிற்கு அச்சொல்லுக்குரிய பொருள்கள் அனைத்தும் அவ்விரண்டிடத்திலும் பொருந்துமாறு அமைத்து விந்தை செய்கிறான். அந்த அற்புதக் கவிதை காண்போம்.

அவதார புருஷன், இராம காதையின் நாயகன் - காசில் கொற்றத்து இராமன் - அவதரிக்கப் போகும் பேறு பெற்ற நாடு கோசலம். இவ்வரியவாய்ப்பைப் பெற, அக்கோசலம் எத்துணைத் தவம் இயற்றியிருத்தல் வேண்டும்? ஒரு நாட்டின் தவவெளிப்பாடு அதன் செழிப்பன்றோ? கோசலத்தில் அச்செழிப்பைப் பல்லாற்றானும் காட்டி வந்த கம்பன், ஆயர்பாடியில் ஒரு பெண் தயிர்கடையும் காட்சியை விவரிப்பதாய் அவ்வரிய கவிதையை அமைத்துள்ளான்.

பெரியதோர் பானையிலே தயிரிட்டு, வடம் பிடித்துத் தயிர் கடைகின்றாள் இளமை பொருந்திய ஓர் ஆயர்குலப் பெண். அப்பெண் தயிரைக் கடைய, மத்தினால் மொத்துண்ட தயிரில் ஓசை கிளம்புகிறது. கயிறசைத்துச் தயிர் கடையும் ஆயர் குலப் பெண்ணின் கைகளிற் சங்கு வளைகள். தயிர் கடையும் அவள கைகள் அசைய அசைய அவள் கைகளிலுள்ள வளைகள் ஒன்றோடொன்று மோதுவதால், அவையும் ஓசை செய்கின்றன. 'வளையோசையில் தயிரின் அலையோசை அடங்கிற்று' என்றான் கம்பன். இவ்வாறு தயிர் கடையும் அப்பெண்ணின் சிற்றிடை, அவள் கையசைவிற்கேற்ப மெய்யசைவதால் வருந்தி வாடுகிறது. அசைவுறும் இடையின் வருத்தம் வணக்கமாய்த் தோன்ற அக்காட்சியைக் கவிதையாக்குகிறான் கம்பன்.

**தோயும் வெண் தயிர் மத்தொலி**
**துள்ளல் போய்**
**மாய வெள்வளை வாய் விட்டு**
**அரற்றவும்**
**தேயும் நுண்ணிடை சென்று**
**வணங்கவும்**
**ஆய மங்கையர் அங்கை**
**வருந்துவர்.**

தயிரை வெண்தயிர் என்றும் வளையை வெள்வளையென்றும் இப்பாடலில் 'வெண்மை' என்ற சொல்லை இருமுறை புகுத்துகிறான் கம்பன். வெண்மை என்னும் சொல்லுக்கு அகராதிகள் தரும் பொருள்கள் மூன்று. வெண்மையாகிய நிறம், இளமை, அறியாமை. இந்த முப்பொருள்களையும் அச்சொல்லைத்தான் பயன்படுத்தும் இரு இடங்களிலும் பொருத்திப் பொருள் காணுமாறு அமைத்து, கற்றோரைக் களிக்கச் செய்கின்றான் கம்பன்.

முதலில், வெண்மை நிறம் பொருந்துமாற்றைக் காண்பாம். இப்பொருள் சிந்தனைக்கிடமின்றி எளிமையாய் இரு இடங்களிலும் பொருந்தி நிற்கிறது. தயிரது வெண்மை தெரிந்ததே. ஆயர் பெண் கைகளிலிடுவது சங்கு வளைகளாதலால் அதனது வெண்மையும் வெளிப்படையே. அவ்வளையோசையில் தயிரோசை மாய்ந்து போவதால் 'ஒலி துள்ளல் போய் மாய' என்ற பொருளும் அவ்வளைகள் அசையும் வேகத்தால் அவை இருப்பது போன்றும், இல்லாதது போன்றும் மாயத் தோற்றம் தருவதால், 'மாய வெள்வளை' என்ற பொருளும் தர 'மாய' என்ற சொல்லை இரு பொருள்களில் கம்பன் பயன்படுத்தியமையும் நயப்பிற்குரியதே.

இனி வெண்மைக்கு இளமையெனும் பொருள் பொருந்துமாற்றைக் காண்போம். வெண்மைக்கு 'இளமை' என்ற பொருள் கொள்ள, வெண் தயிர் எனும் சொல், 'இளந்தயிர்' எனப் பொருள் தருகிறது. இக்கருத்து, 'நாம் வலிந்து பொருள் கொள்வதாய் ஆகுமோ?' எனின் ஆகாது. முதிந்த தயிர் செந்நிறங் கொண்டது. 'செந்தயிர்க் கண்டம் கண்டம் இடை இடை செறிந்த சோற்றில்' என்று பிறிதோரிடத்தில் கம்பனே இதை எடுத்துக்காட்டு கிறான். முதிர்ந்த தயிர் கடைந்தால் வெண்ணெயை வெளிப்படுத்தும். 'இப் பெண்ணோ இடை வருந்த நீண்ட நேரம் தயிர் கடைகின்றாள்' என்கிறான் கம்பன். அவள் இளமை காரணமாய் அனுபவம் இன்றி தன்னைப்போல், முதிர்ச்சியுறாத தயிரினை முனைந்து கடைவதால் வெண்ணெய் வெளிப்படவில்லை. இதனாலும் கடையப்படுவது இளந்தயிரென உறுதியாகிறது. இனி, சடப்பொருளாகிய வளைக்கு 'இளமை' பொருந்துமோ? எனிற் பொருந்தும். இளமைமிக்கவர்கள் அணியும் ஆடை, அணிகலன்கள் அவர்தம் இளமையை வாங்கி இளமையுற்றுத் தோன்றுதல் கண்கூடு. ஆகவே, அப்பெண்ணின் இளமையை வளையில் ஏற்றி, 'இள வளை' எனப் பொருள் கொள்ளச் செய்கிறான் கம்பன்.

வெண்மையின் இவ்விரண்டு பொருள்களும் பொருந்திப்போக, 'அறியாமை' எனும் மூன்றாம் பொருள் அமையாது இடையூறு செய்யுமாப் போலத் தோன்றுகிறது. தயிர், வளை ஆகிய இவ்விரண்டும் சடப்பொருள்கள். அறிவு, அறியாமை இரண்டுமற்ற சடப்பொருள்களில் அறியாமை எனும் பொருளைப் பொருத்துவது எங்ஙனம்? விந்தை செய்கிறான் கம்பன். இவ்விடத்தில் மறைபொருளாய் ஒரு பேருண்மையைப் பிறிதுமொழிந்து, விளக்கம் செய்கிறான் அவன். வாழ்வில் நாம் அடையும் இன்ப, துன்பங்கட்கு, காரணமாய அமைவது முன்னைவினையே. நுண்ணறிவாளர்கள் இவ்வுண்மையை உணர்ந்து கொள்வர். துன்பம் தம்மைத் தாக்கும் போது, வீணே புலம்பித் திரியாது, அவன் தாள் வணங்கி அருள் பெற்று அவ்வினையை அனுபவித்துக் கடப்பர். அறிவற்ற மூடர்களோ, விதியுணராது துன்பங்கண்டு புலம்பித் தீர்ப்பர். விதியின் இயல்பை, அறிவோர் அறிவர். அறியார் அறியாரே. இஃதியற்கை.

இப்பாடலிலே துன்பத்தால் தாக்குறும் பொருள்கள் மூன்று.

கடைவதால் துன்புறும் தயிர்.

அலைவதால் துன்புறும் வளை.

அசைவதால் துன்புறும் இடை.

தயிராயின் கடைபடுதல் அதன் விதி.

வளையாயின் அலைவுறுதல் அதன் விதி.

இடையாயின் அசைவுறுதல் அதன் விதி.


ஆனால், இங்கு தம் விதியறியாது தயிரும், வளையும் கடைதல் பற்றியும், அலைதல் பற்றியும், வாய்விட்டு அலறுகின்றன. இஃது அறியார் செயலன்றோ? விதியினை வணங்கிக் கடக்கவறியா இவ்விரண்டையும் அறிவற்றவை எனப் பொருள்படும்படி 'வெண் தயிர்', 'வெள்வளை' எனக் கூறி அவற்றில் 'அறியாமை' எனும் பொருளேற்றி நயக்கச் செய்கிறான் கம்பன்.

ஆயப் பெண்ணின் இடையோ, அசைவது தன் விதி என உணர்ந்து புலம்பாது அத்துன்பத்தைக் கடக்க வணங்கி நிற்கிறது. விதியுணர்ந்த அவ்விடையை 'நுண் இடை' எனப்பாடி ஏற்றி உணரப்பட்ட அதன் அறிவின் திறத்தையும், இளம் பெண்ணின் அங்கலட்சணத்திற்கேற்ப, சுருங்கி நிற்கும் அவ்விடையின் அழகின் திறத்தையும் 'நுண்மை' என்ற ஒரே சொல்லிலடக்கி நம்மை மகிழ்விக்கிறான் கம்பநாடன்.

இவ்வாறு, ஒரு சொல்லின் முழுப் பொருளையும் அச்சொல் வரும் இரு விடயங்களிலும் வருவித்து நயக்கச் செய்யும் கம்பன் கவித்திறம் கற்றோர் இதயத்தைக் களிக்கச்செய்கிறது.

**-கம்பவாரிதி இ.ஜெயராஜின் 'அழியா அழகு' நூலிலிருந்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**35ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்த ஓர் எழுத்தாளரின் அனுபவங்கள இங்கே தொடராய் இடம்பெறுகின்றது. இத் தொடருக்கான ஓவியரும் அவரே!**

கா.அருளானந்தம்
(கீழ்க் கருணையூர்)

இனிய ஓர் இடத்தைத் தொட்டுக்காட்டி ஆரம்பிப்பதுதான சிறபபு.தடாலடியாய் விஷயத்துள் நுழைந்து விடுவதுதான் விவேகம் என்பது புரிந்தபோதும், சொல்ல வரும் விஷயத்துக்கு ஓர் அறிமுகம் போன்று சிலவார்த்தைகள் அவசியந்தான் என்று, சரியான அல்லது சரியல்லாத ஒரு தீர்மானம் மனதில் எழுந்தது.

விளைவு...?

சில பந்திகளைத் 'தம்' பிடித்து வாசித்து முடித்து.....பின்னர் 'மூச்சு விட்டு' ஆசுவாசப்படுத்திக்கொண்டு வாசிக்க நேர்ந்துவிட்டதே! இந்த அவலத்தை என்ன சொல்ல..?போன பிறப்பில் செய்த கர்மம்' எனலாமா....? இப்பிறப்பில் எந்தக்கர்மமும் செய்யாதவர்கள் என்பதை நாங்கள் வேறு எப்படித்தான் சொல்லிக் காட்டுவது?

நபிகள்நாயகத்தின் வரலாற்றை 'நாயகம் ஒரு காவியம்' என்று கவிதை நூலாய்த்தந்த கவிஞர் மு. மேத்தா,

*"கண்ணெதிரே விரிந்திருக்கும்*
*கடல்நீர் முழுவதும் ஒரு*
*கிண்ணத்தில் அள்ள வந்த*
*கிறுக்கன் நான்."*

என்று, அடக்கத்தோடு ஆரம்பித்திருப்பது நினைவுக்கு வருகிறது.

என்னெதிரே தோன்றுவது கடலுமல்ல. அவர் அள்ளித்தந்த பொருளுக்கு உள்ள மகத்துவமும் இதற்கு இல்லை.ஆனாலும், ஆவலின் உந்துதலால் மேத்தாவின் அமுதமான வார்த்தைபோல் ஓரிருவரிகள் எழுத முற்பட்டுத் தோற்றுப்போய், முன்னுரை, முகவுரை ஏதுமின்றி 25 வரியில் ஒரு 'பயோ டேற்றா' தந்து, அதிரடியாய் குருட்டுவாக்கில் விஷயத்துள் நுழைவதுதான் நியாயம் என்று மனதில் தோன்றியது.

1960 ஜனவரியில், பலாலி ஆசிரிய கலாசாலையின் விசாலமான இரும்பு 'கேற்' அகலத்திறந்து விடப்பட்டபோது வெளியேவந்தேன். மாணவனாய் உட்புகுந்து ஆசிரியனாய் வெளியே வந்தேன் - 'பேக்கிங்' முடிந்து வெளியேவரும் 'பாண்' போல.

ஏற்கனவே ஆசிரியர்களாக எங்களுடன் இருந்தவர்கள் அந்த மாதமே புதிய இடத்துக்கு புதிய பாடசாலைக்குச் சென்றுவிட, என் போன்றவர்கள் 2வருடமோ, 3வருடமோ நியமனத்துக்காகக் காத்திருக்க வேண்டிய காலம் அது.

வேலையற்றிருக்கும் துரதிர்ஷ்டம் எனக்கு நான்கு மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. மத்துகம சென்ற். மேரிஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்த நண்பர் திரு. கி.சுப்பிரமணியம் (இப்போது ஓய்வூதியர் சங்க, வடமராட்சிக் கிளைச் செயலாளர்) மூலம், மத்துகமவிலிருந்து 12மைல் தொலைவிலுள்ள 'லப்பந்துர' என்ற இடத்தில் 'சித்தார்த்த கல்லூரி' என்ற தனியார் கல்வி நிறுவனத்தில் தமிழ்ப் பிரிவில் ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அரச நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை அங்கு வேலை செய்யத் தீர்மானித்தேன்.

## முதல் பிரவேசம்

1960ஆம் ஆண்டு மேதினத்தின் மறுநாள் (02.5.60) அன்று காலைப் பொழுதில், மத்துகமவிலிருந்து நண்பர் ஒருவரும் நானும் புறப்பட்டு 'லப்பந்துர' என்ற அந்தச் சிறு நகரத்தில் பஸ்ஸை விட்டு இறங்கினோம்.கடைவீதிக்கு அண்மையிலுள்ள அந்தக் கல்லூரிக்கு - சித்தார்த்த கல்லூரிக்கு - சென்று அலுவலகத்தில் முகாமையாளரைச் சந்தித்தோம்.

முகாமையாளா மலையகத் தமிழா. மிடுக்கான தோற்றமும், மும்மொழ| ஆற்றலும் உடையவர் செல்வாக்குள்ள சிங்களக் குடும்பத்துப் பெண்மணியை விவாகம் செய்தவர் - இத்தகவல்களை ஏற்கனவே அறிந்திருந்தோம். உரியபடிவங்கள் பூர்த்தி செய்து கடமையேற்றேன்.

என்னுடன் கடமையாற்றிய மலையகத் தமிழ் இளைஞரான ஆசிரியர் தர்மலிங்கமும் நானும் மத்துகமவிலிருந்து தினமும் ஒன்றாகவே பஸ்ஸில் போய்வருவது வழக்கமாய் இருந்தது.

தர்மலிங்கம் பேசிய இந்திய வாசனை அதிகமுள்ள தமிழும், நேர்மைமிக்க நல்லியல்பும், என் மீது அவர் கொண்டிருந்த கரிசனையும் அவர்மீது எனக்கு மிகுந்த பிரியத்தை ஏற்படுத்தியிருந்தன. தமிழ், சிங்களம் இரு மொழியையும் சரளமாகக் கையாளும் ஆற்றலும், சுமாரான ஆங்கிலத் தேர்ச்சியும் அவருக்கு இருந்தன. 'தர்மா' என்றே எல்லாரும் அவரை அழைத்தனர்.

சிங்களப் பிரிவிலும் தமிழ்ப் பிரிவிலுமாக சுமார் 30பேர்வரை கடமையாற்றினோம். 20பேருக்கு மேல் ஆசிரியைகளாக இருந்தனர். எனக்கு அப்போது சிங்களம் அறவே தெரியாது. சிங்கள ஆசிரிய குழாத்துக்கோ தமிழ் அறவே தெரியாது. எனது ஆங்கில அறிவும் ஓரளவு சமாளிப்பதற்கு மட்டுமே உதவியாயிருந்தது என்பது தான் உண்மை. சிங்கள ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஆங்கில அறிவுப்பற்றாக்குறை மிகுதியாயிருந்தது. எனவே, நாங்கள் சந்திக்கும் வேளைகளில் புன்சிரிப்பு ஒன்றே எங்கள் மொழி ஊடகமாய் அமைந்தது. (புன்சிரிப்பில அனைவருக்கும் நல்ல தேர்ச்சி இருந்தது.) இலகுவான ஆங்கிலச்சொற்களுடன் சிறிதளவு தமிழ், சிங்களச் சொற்களும் பெருமளவு சைகைகளும் சேர்ந்த ஒரு புதிய மொழியையும் அவ்வப்போது பயன்படுத்தினோம்.

சில நாள செல்ல, இடைவேளைகளின் போது ஆசிரியர் ஓய்வு அறையில் (STAFF ROOM)சிங்கள ஆசிரியசமூகமும் நானும் பேசிக்கொள்வதற்கு தர்மாவை மொழி பெயர்ப்புக் கணனியாய்ப் பயன்படுத்த ஆரம்பித்தோம். நானும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஓர் ஆசிரிய யுவதியும் மட்டுமே யாழ். பிரதேசத்தவர்கள். அந்த ஆசிரியை கணீரென்ற குரலில் அருமையாகப் பாடுவார். அவரது தமிழ் சினமாப் பாடல்களும ஏனைய பாடல்களும் அனைவரையும் பெரிதும் ஈர்த்தன! இசையும் ஒரு பொது மொழி தானே!

ஒரு மாதம் நிறைவாகுமுன்னரே எனக்கும் ஒரு மதிப்பை ஏற்படுத்தும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

அன்று மதிய இடைவேளையின் போது எல்லாரும் தேநீர் அருந்திக் குதூகலமாய் இருந்த வேளையில், நண்பர் தர்மலிங்கம் பாரியகுண்டு ஒன்றைத் தூக்கிப் படாரென்று சிங்களமாய்ப் போட்டார். யாழ்.ஆசிரியைக்காகத் தமிழிலும் போட்டார்.


## ஜெர்மன் மொழி அரங்கேற்றம்

தர்மா என்னைச் சுட்டி "இவருக்கு சிங்களம் தெரியாமற் போனாலும் ஐரோப்பிய பாஷையான 'ஜெர்மன்' மிக நன்றாகத் தெரியும்" என்று அவர் சொன்னதும், 'சும்மா ஒரு தமாஷ்'என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால், ஏனைய அனைவருமே மிகஉறுதியாய் அதை நம்புவதும், அந்த மொழியின் தொனியைக் கேட்கவிரும்புவதும் எனக்குப் புரிந்தபோதுதான், தர்மலிங்கம் ஒரு நச்சு வாயுக்கசிவை ஏற்படுத்திவிட்டதாய் உணர்ந்தேன். ஜெர்மன் மொழியைப் பேசிக்காட்டும்படி சிங்களத்தில் கலகலத்து ஆரவாரப்பட ஆரம்பித்துவிட்டார்கள்.

தர்மலிங்கம் தான் எனக்கும் இப்போது ஜெர்மன் மொழியைப் பயில்வதாகவும், 2ஆம் தவணை இறுதி வாரத்தில், நான் பேசும் ஜெர்மன் மொழியை சிங்களத்தில் பெயர்த்துச் சொல்வதாகவும் கூறி அவர்களை அப்போதைக்குச் சமாளித்து விட்டதை எனக்குச் சொன்னார்.'ஆஹா..! இலகுவான காரியமாச்சே......! வேறு எவருக்கும் ஜெர்மன் தெரியாத வரையில், நான் அமோகமாய் ஜெர்மன் பேசலாமே' என்பது புரிந்த போது எனக்குப் புதிய ஒரு சுவாரஸ்யம் பிறந்தது.

'இறுதி வாரம்வரை காத்திருக்கத் தேவையில்லை. இலகுவான ஜெர்மன் வசனங்களை மொழிபெயர்க்கும் அளவுக்கு தர்மலிங்கம் தேர்ச்சியடைந்துள்ளார்' என்று தெரிவித்து, வருகிற திங்கள் நான் ஜெர்மன் மொழி பேசுவதாய் தேதி, நேரம் குறித்து இருதரப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டோம்.

சனி, ஞாயிறு இருநாளும் முற்பகல் வேளையில் தர்மாவும் நானும் எனது அறையில், எங்கள் ஜெர்மன் மொழி அறிவை அரங்கேற்றுவதற்



கான 'செட்அப்' ஒன்றைத் திட்டமிட்டுத் தயாரித்தோம். தர்மலிங்கம் மொழி பெயர்ப்பாய்ச் சொல்ல வேண்டிய வசனங்கள் யாவற்றையும் படிமுறையாகத் தமிழில் எழுதிக்கொண்டோம். ஒத்திகையும் பார்த்துக் கொண்டோம்.

திங்களன்று -

கல்லூரி விடப்பட்டதும் மாணவர் மன்றம் கூடும் அந்த 'ஹோலில்' எல்லாரும் அமர்ந்தோம். தயாரிக்கப்பட்ட தேநீரும் தருவிக்கப்பட்ட பிஸ்கற்றும் அருந்தினோம். பலகை மேடைமீது நானும் தர்மாவும் ஏறியதும் ஆரவாரச் சலசலப்பு ஓய்ந்து அமைதி நிலவியது. ஓர் ஓரத்தே பேசுவதற்கான 'ஸ்ரான்ட்' மீது, ஏற்கனவே எழுதிய தாள்வைத்து அதன் மீது முழங்கை பதித்தபடி தர்மாவும், மறு ஓரத்தே நானும் நிற்கிறோம்.

நிகழ்ச்சி ஆரம்பமாகியது -

எனது ஜெர்மன் பேச்சை தர்மா, முதலில் சிங்களத்திலும் பின்பு தமிழிலும் பெயர்த்துச் சொல்வதாக அறிவிக்கப்பட்டது.

நான்: "உகாயு மதோ கீனத் ஸ்வரங் லீஸ் வீரற்!"

(தர்மா சிங்களத்தில் பெயர்த்துக் சொல்கிறார்)

தமிழில் - "அன்பானவர்களே உங்கள் எல்லாருக்கும் என் நிறைவான வாழ்த்துக்கள்"!

நான் "ஸ்லிக்கிள் விபாரக்.... சன்னின் ஸ்ரல் லிதுக்கன்ரி வேத்லக் கின்ஸ்ரோ கஸ்ருன்!"

(தர்மா சிங்களத்தில் சொல்கிறார்.)

தமிழில் -"முன்பின் அறிந்திராத என்மீது நீங்கள் காட்டுகின்ற அன்புக்கு என் வந்தனங்கள்!"

நான் மொழிபெயர்ப்பை ஆட்சேபித்து திருத்தம் சொல்கிறேன்.

தர்மா திருத்திச் சொல்கிறார்:- "முன்பின் அறிந்திராத என்மீது நீங்கள் காட்டுகின்ற அன்புக்கு என் இதய நன்றிகள்!"

நான் "லாசூரத்.... வைக்கின்ரோ மீனிதட் லாரிதங் சீரியல்ஸ்ரிக்!"

(தர்மா சொல்ல முற்பட்டுத் தடுமாறுவது போல் என்னைப் பார்க்கிறார். மீண்டும் அதே ஜெர்மன் தொடரை அப்படியே சொல்ல என்னால் இயலுமா?)

நான் (தமிழில்) "நீங்கள் வசிக்கும் இந்த மாவட்டம் பல பெருமைகளை உடையது."

(தர்மா சிங்களத்தில் சொல்கிறார்)

நான்: சீத்ரெஸ் விஸ்கன் போதிர்விஸ்ரியா லெரியாதீ சிலோன் மத்துகம எம்.எம்.வி.

(தர்மா சிங்களத்தில் சொல்கிறார்)

தமிழில் - "இலங்கையின் முதலாவது மத்திய மகாவித்தியாலயம், மத்துகம எம்.எம்.வி. தாபிக்கப்பட்ட பெருமை உங்கள் மாவட்டத்துக்கு உண்டு."

(நான் முன்போல் வாயில் வந்த சொற்கள் சேர்த்து ஜெர்மன் வசனமாய்ச் சொல்கிறேன்)

(தர்மா சிங்களத்தில் சொல்கிறார்)

தமிழில் - "இந்த ஊரால் வரிசை வரிசையாய் வளர்ந்தோங்கிய றபர் மரங்களால் சூரிய ஒளி நிலத்தைத் தொடுவதில்லை."

இவ்வாறாக, நான் ஜெர்மன் மொழி என்ற பெயரில் ஏதோ பேச, தர்மா மொழி பெயர்ப்பாய்ச் சொன்ன தமிழ் வசனங்களில் சிலவற்றை மட்டுமே ஞாபகத்துக்குக் கொண்டு வரலாம்:-

"இலங்கையின் பெரிய றபர்த் தொழிற்சாலை அகலவத்தையில உங்கள் மாவட்டத்திலேயே உள்ளது!"

"இலங்கை முழுவதும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி தந்த கல்வியமைச்சர் C.W.W.கன்னங்கராவைத் தந்ததும் இம்மாவட்டமே!"

இவ்வாறு நாங்கள் பேசிய 'ஐஸ் கிறீம்' வசனங்களை சுமார் ஒரு மணிநேரம் உச்சிகுளிர உற்சாகமாய்க் கேட்டனர்.

முடிவுரையாக, உல்லாசப் பயணியாய் யாழ்ப்பாணம் வந்து பல மாதங்கள் தங்கிவிட்ட ஜெர்மனியரிடம மொழி கற்றதாக நான் தமிழில் சொல்ல, தர்மா சிங்களத்தில் சொன்னார்.

எங்கள் இருவரதும் முகபாவங்கள், இயல்பானதொனி ஏற்ற, இறக்கம், விரல், கை அசைவுகள், மொழி பெயர்ப்பின்போது இடையிடையே நான் காட்டிய ஆட்சேபம், திருத்தம் எல்லாமே ஒருங்கமைந்து நிகழ்வைப் பிரமாதமாய் ஒப்பேற்றிவிட்டன.

மறுநாள் -

நாங்கள் நடத்தியது ஒரு நாடகம். பேசிய ஜெர்மன் மொழி வெறும் 'டூப்' வார்த்தைகள் என்பதை வெளிவிடுவோமா?என்று தர்மாவிடம்ஆலோசனை கேட்டேன். "கூடவே கூடாது! ஏதோ ஒரு நம்பிக்கையில் எங்களை உன்னதமான ஓரிடத்துக்கு உயர்த்திவிட்டார்கள். திடீரென எங்களைக் கீழிறக்கி வைப்பதென்பது மிகுந்த மனக் கஷ்டத்தை - மனப்பாதிப்பை ஏற்படுத்தும்" என்று திட்டவட்டமாய் மறுத்து விட்டார். அவரின் கருத்து மிகச் சரியாய்த் தெரிந்தது.

அதன் பிறகு அந்த 'ஜெர்மன்' பற்றி......!..மூச்.....!

ஜெர்மன் மொழி அறிஞனான என்னை அவர்களில் யாராவது இன்றும் நினைவில் வைத்திருக்கக் கூடுமோ......யார் கண்டது!

* * *

## ஹம்ஸத்வனி ராகம்

பொதுவாக, யாழ்ப்பாண மக்கள் படிப்பறிவில் முன்னேறியவர்கள் என்ற அபிப்பிராயம் அக்காலத்தில் மலையக சகல இன மக்களிடையேயும் பரவலாக இருந்தது என்பதை முழுவதாகப் புறந்தள்ள முடியாது. இற்றைக்கு சுமார் 30ஆண்டுகளுக்கு முந்திய நிலைமை இது. எனது ஆங்கில அறிவு திருப்திகரமாயில்லாதிருந்த போதும், கணித அறிவு ஓரளவு மேம்பட்டதாகவே இருந்தது. இக்கூற்று சற்றுத் தற்பெருமையானதாகத் தோன்றினாலுங்கூட அது உண்மையானதாகவே எனக்குத் தோன்றியது. இது தென்னிலங்கையில் கடமையாற்றிய யாழ் ஆசிரியர்கள் பலருக்கு மிகப் பொருத்தமான கூற்று என்றால், அந்தப் பலருள் நானும் ஒருவன்.:.. அவ்வளவே!


என்னைத்தவிர ஏனையோர் யாவரும் வர்த்தமானியில் பிரசுரமாகும் போட்டிப்பரீட்சைகள் பலவற்றுக்கும் அவ்வப்போது விண்ணப்பித்துக் கொண்டே இருந்தனர். எந்த ஒரு போட்டிப் பரீட்சைக்கும் ஏனைய பாடங்களுடன் தாய்மொழியும் எண் கணிதமும் நிச்சயமான பரீட்சைப் பாடங்களாயிருக்கும்.

பரீட்சைகளுக்காக ஒவ்வொருவராக மெல்லமெல்லக் கணக்குகளில் சந்தேகம் கேட்க ஆரம்பித்தனர். மொழி பெயர்ப்பு ஊடகமாய் தர்மாவே திகழ்ந்தார். சிக்கலான கணக்கானாலும் இயன்றவரை சகல குறியீடுகளையும் பொருத்தி, ஒரே பின்னமாகவே பெரும்பாலும் அமைத்துக் கொடுப்பேன். சிலர் சேர்த்து அதைச் சுருக்கி விடைபெற்றதும் கணக்குப் புத்தகத்தின் கடைசியிலுள்ள விடையைப் பார்ப்பார்கள். சரியென்று கண்டதும் என்னை வியந்து பார்ப்பார்கள். நானோ,'இதென்ன ஒரு பெரிய விஷயம்' என்ற பாவனையில் அடக்கமாய்ச் சலனமின்றி இருப்பேன். இது எனது 'இமேஜ்'ஜைத் தக்கவைத்துக் கொள்ள நான் கைக்கொண்ட ஒரு யுக்தி என்றே கூறலாம். அதேநேரம் 'ஆலையில்லா ஊருக்கு......' என்ற விளையாட்டுத்தான் இதுவும் என்பது எனக்குத் தெரிந்தே இருந்தது.

ஒரே பின்னமாய் அமைத்துவித்தை காட்டிய கணக்கைப் படிமுறையாக விரித்து நான் தமிழில் கரும்பலகையில் எழுத, தர்மா அதைச் சிங்களத்தில் சொல்ல அவர்கள் படிமுறைப்படி சிங்களத்தில் எழுதிக்கொள்வார்கள்.

சில நாள் செல்ல, இவர்கள் மூலம் இவர்களின் உறவுகளும் நட்புகளுமான இளைஞர் யுவதிகளும், ஓய்வு வேளைகளிலும் பாடசாலை விடும் நேரங்களிலும் என்னிடம் வரத் தொடங்கினர். லப்பந்துரவிலோ அண்மையிலோ உயர் வகுப்புள்ள அரச பாடசாலையோ வேறு கல்வி நிறுவனமோ இல்லாததுதான் இதற்குக் காரணம் என ஊகித்தேன்.

இது ஒரு பெரிய சங்கதி அல்லவாயினும், தினமும் மகிழ்ச்சியுடன் ஊக்கமாகப் பாடசாலைக்குச் செல்வதற்கு எனக்குப் பெரிய உந்து சக்தியாக இருந்தது. சித்தார்த்த கல்லூரியில் மன நிறைவையும் சந்தோஷத்தையும் தந்த இவ்விஷயத்தை மீட்டு அசைபோடுகையில் இன்றும் 'ஹம்ஸத்வனி' ராகமாய் நெஞ்சு இனிக்கிறது.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகைக்கற்பாறைக் கடல்களுக்குரிய பாடல் பெறாத அழகிகள்

**"கோரிக்கையற்றுக் கிடக்குதன்றோ வேரிற் பழுத்தபலா"**

- என்று பாரதிதாசன் பாடி வைத்தார். ஆனால் பாடல் பெறாத பாத்திரங்கள் பல நம்மைச சுற்றிச் சூழலில் நிறைந்துள்ளன.




கடலில் ஒரு பூ. ஹெக்ஸஸா பிறாங்கஸ் என்ற ஓடில்லா நத்தை.

மிகவும் அழகான அங்கிகள் பொதுவாக முருகைக் கற பாறைக்கடல்களில காணப் படும். முருகையுருப்பிராணிகள் அயனமண்டல, உபஅயனமண்டலக் கடல்களுக்குரியவை. அதனால் பசுபிக், அத்திலாந்திக், இந்துசமுத்திரத் தீவுகளில் பலதரப்பட்ட, பலநிறங்களையுடைய, மிகவும் அழகான அங்கிகளைச் சாதாரணமாகக் காணலாம். மிக அழகான மீன்களும் இங்குதான் கிடைக்கும். இலங்கையிலும் உண்டு. அழகான மீன்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பணம் சம்பாதிப்பதை ஒரு தொழிலாகவே சிலர் மேற்கொண்டுள்ளார்கள். இவ்வியாபாரத்துக்கு சட்டம் இடம்தருமா என்பது வேறு விடயம். இந்தப் பிராந்தியத்துக்குரிய அழகர்களில் சில வற்றைப்பற்றி இங்கு கவனிப் பேரம்.



கொம்பு போன்ற உணர் கொம்புகளையும் இறகு போன்ற பூக்களையும் காட்டும் கடலின் தளத்தில் மேயும் 'நிர்வாணப் பூக்கள்'

நூடிபிறாங்ஸ் (NUDIBRANCHS) என்பவை ஓடில்லா நத்தைகள். பெயரின் கருத்து "நிர்வாணப் பூக்கள்" என்பதாகும் அதாவது ஓடில்லாத காரணத்தினால் பூக்கள் வெளியே தெரியும். நூடிபிறாங்ஸ் கடல் வாழ்கைக்குரியவை. பூக்களின் உதவியினால் சுவாசிக்கும். பல நிறங்களையுடையவை. மிகவும கவர்ச்சியானவை




செவ்வந்திப் பூப்போன்ற முருகையுருப்பிராணிகள். செம்மஞ்சள் நிறமுள்ள, பூவிதழ் போன்ற, பரிசக் கொம்புகள் தூக்கமாகத் தெரிகின்றன.

யாயினும இயற்கை நிலைமைகளில் சந்தடிசெய்யாமல் ஆராயும்போதுதான் அவற்றின் அழகு புலப்படும்.

நிலத்தின் மேற்பரப்பிலும் நீரிலும் "லினன்" துணிபோல அலைஅலையாக இவை அசைந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும். ஆயினும் இவை சூழலுக்கேற்ற நிறமுடையவையாகவிருக்கும். சூழலுக்குத் தக அனுகரணம் (MIMICRY) செய்பவை, அதனால் இவையிருப்பது சுலபமாகத் தெரியாது. பிடித்தால் அவை சுருண்டு பந்துபோலாகிவிடும். அழகெல்லாம் மறைந்துவிடும். போமலின், மதுசாரம் போன்ற பாதுகாப்புத் திரவங்களில் இவற்றைப்பேண முயன்றால், இவற்றின் நிறங்கள் மங்கி மறைந்துவிடும். அதனால் அவற்றை அவற்றின் போக்கில் விட்டு அவதானித்து மகிழ்வதுதான் சிறந்தமுறை.

ஹவாய்த் தீவுகள் மற்றும் பசுபிக் தீவுகள், கரீபியன் தீவுகள், ஆஸ்திரேலியா மற்றும் பல இடங்களுக்கு முருகைக் கற்பாறைக் கடலங்கிகளைக் கண்டுகளிப்பதற்கென்றே பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வருகின்றார்கள். இங்கும் இதே நோக்குடன்தான் ஹிக்கடுவாவுக்குச் செல்கின்றார்கள் (வேறு நோக்கங்களுமிருக்கலாம், அது வேறு விடயம்).




பொய்க்கோலம் கொண்ட நத்தைகளுக்கு ('நிர்வாணப் பூக்களுக்கு') முருகைக்கல் இடுக்குகளில் வேட்டையாடுகின்றனர்.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

**-குகன்-**

நூடிபிறாங்ஸ், ஒரு சில இனங்களைத்தவிர, பெரும்பாலும் சிறியவை. இருபத்தியைந்து சதக்காசிலும் சற்றுப் பெரிதாகவோ அல்லது சற்றுச் சிறிதாகவோ இருக்கும். "பறக்கும் கம்பளம்" (FLYING CARPET) என்ற ஓடில்லா நத்தை பசுபிக்கடலுக்குரியது. கடலில் ஒரு பூப்போல இது காட்சிதரும். இதன் விஞ்ஞானப்பெயர் ஹெக்ஸோ பிறாங்கஸ் (HEXO BRANCHUS) என்பதாகும். இதன் கருத்து "ஆறு பூக்கள்", அதாவது இப்பிராணி ஆறு பூக்களையுடையது. ஓடில்லா நத்தைகளில் இது பெரியது. ஐந்து அங்குல நீளம் வரையிருக்கும். நூடி பிறாங்ஸின் பூக்கள் அவற்றின் முதுகில் வைக்கப்பட்டிருக்கும். அதனால் சாதாரணமாகவே துலக்கமாகத் தெரியும். அதிர்ச்சியேற்படும் பொழுது பூக்களைச் சுருக்கி பின் அங்கியும் சுருண்டுகொள்ளும்.

டென்றோபிலியா (DENDRO PHYLLIA) என்பது



பயங்கரத் தோற்றமுடைய 'பொக்சர்' நண்டு (Boxer Crab). இரு கொடுக்கன்களிலும் கடல் அனிமனிகளைக் கவனிக்கவும்.

செம்மஞ்சள் நிறமுள்ள முருகையுருப்பிராணிகள். இவை மார்கழிச் செவ்வந்தி போன்ற மிகவும் அழகான அங்கிகள். இவற்றின் மத்தியில் இதே நிறத்தையுடைய ஒருவகை ஓடில்லா நத்தை வாழும். அவற்றின் பொய்க்கோலம் (CAMOUFLAGE) அவற்றிற்குப் பாதுகாப்பைக் கொடுக்கும். அழன்மொட்டுக்களையுடைய முருகையுருப் பிராணிகளும் பாதுகாப்பைக் கொடுக்கும்.



கடலுணவு–சாதாரண ஒளியில்

குளோசோடோறிஸ் (GLLOSSO DORIS) என்பது கடலின் வாழ்க்கைக்குரிய நூடிபிறாங். மிகவும் அழகானது. இதன் பரிசக்கொம்புகள்




அதே கடலுணவு இருட்டில் ஒளிர்கின்றது.

துலக்கமாகத் தெரிவதுடன், பரிசக்கொம்புகளின் முனைகளும் பிரகாசமான நிறமுள்ளவை யாகவிருக்கும்.

சில இன ஓடில்லா நத்தைகள் முருகைக்கல் இடுக்குகளில் மறைந்து வாழும். அதனால் இவற்றைச் சேகரிப்பது சிரமமானசெயல். அவற்றின் சிறப்பான அனுகரணம் காரணமாக அவை இருப்பதே தெரியாது. முதலில அவற்றைக் கண்டு கொள்வதில் பிரச்சினை. பின் அவற்றின் இருப்பிடத்திலிருந்து அகற்றுவதில் பிரச்சினை.

சில இனங்களுக்குரிய நூடிபிறாங்ஸ் சொறிமுட்டை போன்ற சிலந்தறேற்றுக்களை உணவாகக்கொள்ளும். சிலந்தறேற்றுக்களின் அழன்மொட்டுக்கள் சிதையாமல் ஓடில்லா நத்தைகளின் உடல் மேற்பரப்புக்களை அடைந்து அவற்றிற்குப் பாதுகாப்புக் கொடுக்கும் சில இன நூடிபிறாங்ஸ் அல்காக்களை உணவாகக்கொள்ளும். அல்காக்களின் பச்சையுருவங்கள் சிதையாமல் நூடிபிறாங்ஸின் உடலமேற்பரப்புக்களை அடைந்து அப்பிராணிகள் ஒளித்தொகுப்பு நிகழ்த்த உதவும். இவை தொடர்பான விவரமான விளக்கம் ஏற்கனவே (பிறிதொரு கட்டுரையில்) தரப்



ஈட்டியால் குத்தப்பட்ட மொறே விலாங்கு.

பட்டதுதானே.

குளோசோடோறிஸ் லீனியோலேற்றா (GROSSODORIS LINEOLATA) என்ற ஓடில்லா நத்தை வளைவான உடலமைப்பை (STREAMLINED) உடைய நேர்கோடு (LINEAR) போன்ற அங்கிகள். அதனால் இவற்றினால் வேகமாக நீந்தவும் முடியும், வேகமாக திசை திரும்பவும் முடியும், நீரின் அழுத்தத்தை இவற்றினால் சுலபமாக எதிர் கொள்ளவும்முடியும்.

சையேர்ஸ் நைகிறா (CYERCE NIGRA) சிறிய அழகான நூடிபிறாங். பல தூக்கங்களையுடைய இவ்விலங்கு பார்ப்பதற்கு வண்ணத்துப் பூச்சிகளின் செட்டைகளினால் ஆக்கப்பட்ட பூச்செண்டு போலிருக்கும். இயோலிடியெல்லா (AEOLIDIELLA) என்ற நூடி பிராங்கின் தலையில் மேல்



மொறே விலாங்குகள்


நோக்கி இருபெரிய கொம்புகளும், கீழ்நோக்கி இரு சிறிய கொம்புகளுமுண்டு. மேலும், முதுகுப்புறமாக, உடல் மேற்பரப்பு முழுவதும் புன்குழாய்களுண்டு. பார்ப்பதற்கு கிழவனின் மீசையும் தாடியும் போலிருக்கும். அதனால் இதை கடலின்கிழவன் என்றழைக்கலாம். இது மிகவும் சிறிய ஓடில்லா நத்தை. குளொசோடோறிஸ் பெஸ்ரிவா (GLOSSODORIS FESTIVA) என்ற ஓடில்லா நத்தையின் உணர்கொம்புகளும் பூக்களும் தீப்பந்தங்கள் போலிருக்கும். அதனாற்றான் திருவிழா(FESTIVAL) என்ற இனப் பெயர்கள் கொடுக்கப்



சிலேற் பென்சில் கடல் முள்ளிகள். மழுங்கிய முட்களையுடையவை. அதனால் கையிலெலடுத்து அழகு பார்க்கலாம்.

பட்டுள்ளது.

ரெறியோலிடியா செம்பெரி (PTERAEOLIDIA SEMPERI) என்ற நூடிபிறாங் முருகைக்கல்லின் மேல் உணவு தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் உணர்கொம்புகள் பெரியவை. முதுகுப்புறமாக இதன் உடல்முழுவதும் வரிசைகளாக கொசுவம் போன்ற மடிப்புகளுண்டு. அதனால் இதை ஆங்கிலத்தில் பிறிண்ஸ்ட் நூடிபிறாங் (FRINGED NUDIBRANCH) என்றழைப்பார்கள். அதுவும் மிகச் சிறியதொரு ஓடில்லா நத்தையாகும். ஓடில்லா நத்தைகள் பெரும்பாலும் தமது பாகு போன்ற முட்டைகளை அல்காக்களின் மறைவிலும், முருகைக்கற்



ஓடம் போன்ற வடிவமைப் புள்ள ஓடில்லா நத்தை.

களுக்கிடையேயும் இடும். முருகைக்கற் கடற்பிராந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யத்திற்குரிய மற்றும் சில ...ங்கு வினோதங்களையும் ...ரிப்போம். குத்துச்சண்டை ...ர் நண்டின் (BOXER ...B) விஞ்ஞானப் பெயர் ...பா ரெசெலேற்றா (LY- TESSELATA) என்பதா ...குத்துச்சண்டைவீரன் தன் ...கைகளிலும் கையுறைக ...துப் பதில் பிடையன் பாம் ...ள வைத்திருப்பது போல ... நண்டு தனது கொடுக்கு ...ல் கடல் அனிமனிகளை ...த்திருக்கும். • எதிரிகள் ...ங்கும் போது அனிமனி ...ல் எதிரிகளை முட்டும். ... அனிமனியின் (SEA ...EMONE) அழன் மொட் ...ளால் (NEMATOCY- ...) தாக்கப்பட்டு எதிரிகள்



...வண்ணாத்துப்பூச்சிகளின் ...ட்டைகளால் ஆன பூச் ...ன்டோ?'


...துகு காட்டும். நண்டு ...க்குககிடைக்குமஉணவை ...மனியுடன் பகிர்ந்து ...ள்ளும். அதேபோல அனி ...யும் தனக்குக் கிடைக்கும் ...ளவை நண்டுடன் பகிர்ந்து ...ள்ளும். இங்ஙனம் உண ...ப் பகிர்ந்து கொள்ளும் ...கிகளமேசைத் தோழர் (...TABLE MATES) என ...ழக்கப்படும். இவ்வியல்பு ...டிலிலுண்ணுமியல்பு (CO- ...ENSALISM) எனப்படும். ...மனிகள் மிக ஆறுதலா ... நகர்ந்து இடப்பெயர்ச்சி ...யும். இங்கு அனிமனியின் ...பெயர்ச்சிக்கு நண்டு உத ... மேற்படி நண்டு பார்ப்ப ... பயங்கரமாவிருந்தாலும் ...வில் மிகச்சிறியது. 25சத ...யமளவுதானிருக்கும். அதன் ...வு குளவியும் அளவில் ...பதுதான், கொட்டினாற் ... புரியும் அதன் சங்கதி.



...தீப்பந்தங்கள் போன்ற ...ம்புகளையும் பூக்களையும் ...ண்ட ஓடில்லா நத்தை.

...றப்லோகார்சினஸ் (HA- ...CARCINUS) என்ற ...டும் அளவில் மிகச்சிறி ... வினோத வாழ்க்கை ...றயைக் கொண்டது. ஆண் ...டுகள் சுயாதீனமாக நீந் ...திரியும். பெண்நண்டுகள் ...கைக்கல்லறைகளில சிறை ...ம் செய்யும். குறிப்பிட்ட ... முருகையுருப் பிராணிக ...டயே பெண்குஞ்சு சென்று ...ந்து கொள்ளும். முருகை ...பிராணிகள் சுண்ணாம் ... சுரந்து ஒரு சிறையறை ... தோற்றுவிக்கும். பெண் ...மையாகச் சிறையாகு ... ஆண் அறையின் மேலி ... கொண்டு அதைக் கரு ...டயச் செய்யும். பின பெண் ...மையாகச் சிறைப் படுத் ...டும். ஆயினும் சுவாசத் ...கும உணவுக்கும் நீர் செல் ...கூடியதாக சிறிய துவாரங் ...நக்கும். முட்டைகளிடப் ...போது அவை இத்துவா ...ர் வாயிலாக வெளியேறி ...ரியே பொரிக்கப்படும். ...ன்றும் ஆண்கள் சுதந்திர ...க்கையை மேற்கொள்ள ...ாகள் சிறை வாழ்கையை ... செல்லும். சிறையை

உடைத்துப் பெண்ணை மீட்டாலும் அது மீண்டும் ஓடிச் சென்று சிறைக்குள்ளேயே பதுங்கிக்கொள்ளும். வாழ்கை முடிவின் போது



கடலின் கிழவன். 'கிழவனின் மீசையும் தாடியுமா தெரிவது?'

சிறைக்குள்ளேயே மரணிக்கும்.

விலாங்குகள் (MORAY EELS) கற்பாங்கான கடற் கரைக்குரிய பயங்கரவாதிகளாகும். இவை விடமுள்ளவையல்ல, ஆயினும் அருகில் சென்றாலே பாய்ந்து கடித்து விடும். இவற்றின் கூரிய பற்கள் பெரிய கடிகாயங்களை ஏற்படுத்திவிடும். கால்விரலோ கைவிரலோ அகப்பட்டால் துண்டித்தே எடுத்துவிடும். பார்ப்பதற்கும் விலாங்குகள் பயங்கரமான பாம்பு போன்ற தோற்றமுடையவை.

கடல் முள்ளிகளின் (SEA VRCHINS) முட்கள் பொதுவாகக் கூரியதாய் இருக்கும்



முருகைக்கல்லின்மேல் உணவு தேடும் ஓடில்லா நத்தை. என்ன அலங்காரமான தோற்றம்!

அதனால் சுலபமாகக் குத்திவிடும், விடமில்லாவிட்டாலும் தாங்க முடியாத எரிச்சலைத் தரும். ஆனால் சிலேற்றுப் பென்சில் கடல் முள்ளிகளின் (SLATE PENCIL SEA VRCHINS) முட்கள் மழுங்




முருகைக்கற் சிறையில் ஆயுட் தண்டனையை மேற்கொள்ளும் சிறு நண்டு. நண்டு தெரிவதற்காகச் சிறை உடைக்கப்பட்டுள்ளது.

கியு முனைகளையுடையவை, அதனால் இவற்றைப் பயமின்றிக் கையாளலாம்.

பொதுவாகக் கடலுணவுகளில் ஒளிரும் பற்றீரியங்களுண்டு. வெளிச்சத்தில் கடலுணவுகள் சாதாரணமாகவே தெரியும், ஆனால் இருட்டில் அவை ஒளிவீசிப் பிரகாசிக்கும். அப்போது அவற்றை பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

*

# மந்திரத்தால் அழிந்த மதிகேடர்



ஓர் ஊரில் நான்கு பேர் ஒன்றாகக் கல்வி பயின்றார்கள். அவர்கள் நால்வரில் மூவர் மந்திர வித்தையில் மிகத் தேர்ச்சியடைந்தார்கள். நான்காமவன் சரியாகக் கல்வி பயிலவில்லை. மற்ற மூவரும், அரசனிடம் தங்கள் திறமையைக் காட்டிப் பொருள் பெறுவதற்காகச் சென்றார்கள். அப்போது கல்வித் தேர்ச்சியில்லாதவனாக இருந்தாலும், தங்களுடன் படித்தான் என்பதற்காக நான்காமவனையும் மற்றைய மூவரும் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். தங்கள் வருவாயில் ஒருபங்கு தருவதாகப் பேசிக்கொண்டு கூட்டிச் சென்றார்கள்.

அவர்கள் போகும் வழியில் ஒரு சிங்கம் செத்துப்பிணமாகிக் கிடந்தது. 'நாம் கற்ற வித்தையை சோதித்துப் பார்க்க இது ஓர் அரிய வாய்ப்பு. நாம் மந்திர வித்தையால் இந்தச் சிங்கத்தைப் பிழைத்தெழச் செய்வோம்' என்றான் ஒருவன். அப்போது கல்லாதவன், 'சிங்கத்தை எழுப்பினால் அது நம்மைக் கொன்று விடும்!' என்று கூறினான். மற்றவர்கள், கோபத்தோடு அவனை 'அப்பால் போ' என்று பிடித்துத் தள்ளினார்கள். அவன் பேசாமல் போய் ஒரு மரத்தின்மேல் ஏறியிருந்து கொண்டான்.

மற்றவர்கள் மூவரும் தங்கள் மந்திர சக்தியைக் கொண்டு அந்தச் சிங்கத்துக்கு உயிரூட்டினார்கள். உயிர் பெற்றெழுந்த சிங்கம், அவர்கள் மூவர் மீதும் பாய்ந்து அவர்களைக் கொன்றுவிட்டது.

'கல்வியைக் காட்டிலும், அறிவுதான் பெரிது' என்பது இக்கதையினின்றும் தெரிகிறது.


-பஞ்சதந்திரக்கதை-

# விடை தெரியுமா?

1. எட்டு மனிதர்களிடம் எட்டுக் கழுதைகள் உள்ளன. ஒவ்வொரு கழுதையும் எட்டு மூடைகள் சுமக்கின்றன. ஒவ்வொரு மூடையிலும் எட்டுப் பெட்டிகள் உள்ளன. ஒவ்வொரு பெட்டியிலும் எட்டுச் சிலைகள் உள்ளன. ஒவ்வொரு சிலையிலும் எட்டுக் கைகள் உள்ளன. ஆக மொத்தமாக சிலைகளில் உள்ள கைகளின் எண்ணிக்கை யாது?
2. ஓர் இலக்கத்தை மட்டும் கொண்ட ஐந்து வெவ்வேறு எண்களைக் கூட்டினால் வருவது 35. அப்படியானால் அந்த எண்கள் யாவை?
3. நூறிலிருந்து 999வரையுள்ள மொத்த எண்கள் எத்தனை?
4. ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்கி, அதே எண்ணைக் கழித்தால் வருவது 12. அப்படியானால் அந்த எண் யாது?
5. கேசவன் ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தான். அவனுக்கு தினமும் ஐம்பது ரூபா சம்பளம். சில நாள்கள் கழித்து அவன் வேலையை விட்டு விலகிவிட்டான். அவன் வேலைக்கு வராத நாள் ஒன்றுக்கு பத்துரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்பது நிறுவனச் சட்டம். அவனுக்குக் கிடைத்தது 2ஆயிரத்து 400ரூபா. அவன் கட்டிய மொத்தத் தண்டம் நூறு ரூபா. அப்படியானால் அவன் வேலைசெய்த நாள்கள் எத்தனை?

(விடை XV ஆம் பக்கத்தில்)

# இயலுமா?



மேலே இருபத்தியைந்து அடைப்புக்களைக் கொண்ட ஒரு சதுர வடிவ அட்டவணை உள்ளது. இந்த அடைப்புக்களில் மொத்தம் பதினைந்து அடைப்புக்களை நீங்கள் வர்ணம் தீட்டி அடைக்க வேண்டும். எந்த ஒரு வரிசையிலும் (மேலிருந்து கீழாகவோ அல்லது இடமிருந்து வலமாகவோ எந்த வரிசையிலும்) மூன்றுக்கு அதிகமான அடைப்புக்கள் வர்ணம் தீட்டப்பட்டிருக்கக் கூடாது. இயலுமா பாருங்கள்?

(விடை ... ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திடு

படிக்கும் நல்ல தம்பியே,
பார்த்துச் சிரிக்கும் நம்பியே!
அடி யிரண்டில் உலகை அளந்த
வள்ளுவர் போல் வாழ்ந்திடு!


பள்ளி செல்லும் தங்கையே,
பாச முள்ள நங்கையே!
கள்ள மில்லா இந்திரா
காந்தியைப் போல் வாழ்ந்திடு!

கல்வி பயிலும் தம்பியே,
கண்டு மகிழும் நம்பியே!
நல்ல தலைவர் நேருபோல்
நாட்டை என்றும் போற்றிடு!

அழகு கொண்ட தம்பியே,
அழகு சிரிப்புத் தங்கையே!
சரித்திரத்தில் காந்தி போல்
சத்திய மண் காத்திடு!

பா.ஹம்சினி
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

# வழிகூறுங்கள்?



வாய்ப்பாட்டுக்காரர், மிருதங்கவித்துவான், வயலின்காரர் ஆகிய அந்த மூன்று இசைக்கலைஞர்களும், ஒரு பிரபு வீட்டுக் கல்யாணக் கச்சேரிக்குப் போய்க்கொண்டிருந்தனர். மாலையில் கச்சேரி. வழியில் ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. வழக்கமாக அதில் அதிக நீர் இருக்காது. ஆகவே இடுப்புவரையுள்ள நீரில் நடந்து கடந்து விடலாம். ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டம் அது காட்டாறு. ஆகையால் அன்று திடீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றைக் கடக்க உள்ள பாலமோ, ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருந்தது. அங்கு போய்ச்சேர இரவாகிவிடும். அவர்களுக்கு நீந்தவும் தெரியாது. அந்த வெள்ளத்தில் நீந்தத் தெரிந்தவர்களும் திக்குமுக்காடிப் போவார்கள். தவித்தார்கள் சங்கீதக்காரர்கள்.

திடீரென்று அவர்கள் பார்வையில் ஒரு படகு தென்பட்டது. அதன் அருகே இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பையன்களிடம் தங்களை கரையில் கொண்டு சேர்த்தால் கை நிறையக் காசு தருவதாகக் கூறினார்கள்.

"காசு தருகிறீர்கள் சரிதான். ஆனால் இந்தப் படகைப் பார்த்தீர்களா? இது ரொம்ப சின்னது. இதில் இரண்டு சிறுவர்கள் அல்லது ஒரு பெரியவர் தான் போகமுடியும். உங்களில் ஒருவர் படகில் மறுகரைக்குப் போனால் படகைத் திரும்ப யார் இங்கு கொண்டுவருவது? உங்களோடு எங்களில் ஒருவர் வரமுடியாது. படகு கனம் தாங்காது!" என்றான் சிறுவர்களில் ஒருவன். இசைக்கலைஞர்கள் இடிந்து போனார்கள்.

சட்டென்று ஒரு பையனுக்கு யோசனை தோன்றியது. ஒரு மணித்தியாலத்தில் மூன்று பாட்டுக்காரர்களும் படகின் மூலம் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். எப்படி?

(விடை XV ஆம் பக்கத்தில்)


# நான் வளர்க்கும் நாய்க்குட்டி

நான் வளர்க்கும் நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
கள்ளமில்லா நாய்க்குட்டி

பாலை நக்கிக் குடித்திடும்
பந்தை உருட்டி அடித்திடும்
வாலை ஆட்டிக் களித்திடும்
வீட்டை நன்றாய்க் காத்திடும்

வேட்டை ஆட விரும்பிடும்
'வள் வள்' என்று குரைத்திடும்
வீர நடை நடந்திடும்
வேலி மேலாய்ப் பாய்ந்திடும்

ஆ.கஜீதா
(தரம்7, சாவகச்சேரி டிறிபேக்)



# கேட்டாயோ 'பாட்டை'

வெண்புறாவின் கூடுபோல்
மிளிர்ந்த எந்தன் தேசமே!
வெறிக் கழுகால் கொத்துப்பட்டு
வேகல் என்ன நியாயமே?
கண்ணிழந்து, ஊமையாகி
புண்ணடைந்த மானமே!
கையில் ஓடெடுப்பினெங்கள்
கற்பனைக்கும் ஊனமே!

வேதனைகள் குட்டிபோட்டு
விசிலடிக்கும் தாய்மடி.
விழுமியங்கள் வேசமிட்டு
வெருளியாகும் நிலையடி.
கூதல் காயும் பேய்கள் கட்டும்
கும்மிப்பாட்டால் சந்ததி....,
குஷ்டரோகியாய் அழுகும்!
குஞ்சு...நின்று பாரடி!

தினம்தினமும் புதுமலர்கள்
தெருவில் பூத்த போதிலும்
திசையில் நித்தம் புதுமை தோன்றி
சிரிப்பை ஊற்றப் பாக்கினும்
மனசுக்கல்லில் பதிந்த நேற்றை
வடுக்கள் மீண்டும் கனவினில்
வந்து...'வரவை' நாம் நேசிக்க
வழக்கு போடும் நனவினில்

கோயில்போல் கொழித்த வாசல்
குலைவதோடி சுடலையாய்?
கொஞ்சும் காதல் மண்டபத்தில்
கொல்களங்கள் வைத்ததார்?
நோயில் வாடும் நூதனங்கள்
நூர நீயும் பார்ப்பியா?
நொடிகள் கேட்க நேரமில்லை!
நியாயம் கேட்டோம் தீர்வுதா!

- சயனொளிபவன் -

# மண்மீது மகிழ்வுறவே...

எங்குந்தமி ழினமக்கள்
இனிமையுடன் நிதம் வாழ
தங்குந் தடைக ளெல்லாம்
தவிடு பொடி யாகிவீழ
பொங்குந் தமிழினினிமை
பாரெங்கும் மணங்கமழ
சங்கெடுத் தூதி யென்றும்
சாதியில்லையென்றுரைப்போம்!

வங்கக் கடலை போல்
வேதனையு மெம்மனதில்
பங்கப் படவைத் தார்ப்பரித்து
பக்குவ மற்றவர் களாக்கி
தங்கத் தமிழ் மண்ணில்
தலை குனிவை யேற்படுத்தும்
பாங்கதனை மாற்றி வைக்க
பாரதனி லெழுந்திடுவோம்!

இந்தமண் ணதில் வந்து
இன்முகத் தோடுதித்த
எந்தப் பிறப்பினையும்
ஏகமன தாயேற்று
மாந்த ரெல்லா மொரு இனமாய்
மண்மீது மகிழ்வுறவே
சிந்தித்துச் செகமதனில்
செயற் பட்டிடுவோம்!

மொழியொன்றாய் இருந்திடினும்
மோதல்கள் பல நடத்தி
குழிதன்னில் விழுந்தொவ்வன்றாய்
குலமழிய வைத்து நிதம்
வழி தெரி யாமலிங்கே
வாழ்விழந் திந்த மண்ணில்
இழிவுற்றே யேங்கு வோரின்
இன்னிலையை மாற்றிடுவோம்!

பலகால் மாயெங்கும்
படர்ந்திட்ட சாதியதை
நிலந்தன்னில் நீறாக்கி
நிஜமொன்றை உருவாக்க,
கலகங்க ளது நீங்கி
கருணையோ டனைவருமே
வலம் வந்து வசந்தத்தில்
வாழ்வொன்றைப் பெற்றிடுவர்!

அயராத வுழைப்பதனால்
அனைவரு மொன்று கூடி
துயரின்றி வாழ்வதற்கு
துணையாயிங் கிருந்திட்டால்
பயமின்றிப் பைந்தமிழர்
பரந்த மனத் தோடிங்கே
நயங்கண் டிருந்திடும்
நாளொன்று புலர்ந்திடும்...!

-பொலிகையூர் சு.க.சிந்துதாசன்.

# இதுவரையில் நாம்

எங்களுக்காய் தானாம் எல்லாமாம்; ஓமோம்!
எங்களால் எங்களுக்காய் நாங்களேதானாம்! ஓகோ!
யார் நாங்கள்?
குடியரசுக் கதிரையிலே கொழுத்துள்ள மூட்டைகளால்
குடிக்கப்படுபவர்கள்;
குறிப்பாகச் சொன்னால் நாம்
குடிமக்கள்!

யுத்தக் கணிதத்தில் "இடைவெட்டுக்கள்" இந்த
யுகத்திற் கலைஞர்க்கும் கவிஞர்க்கும் எழுதுகின்ற
பத்திரகைக்காரருக்கும் வாய்த்த "கருப்பொருள்கள்"

எங்களினைத் தம்பக்கம் எனச்சொல்லிச் சொல்லியே
எத்தனையோ துடைப்பங்கள் செங்கோல்கள் ஆயின.
செங்கோல்களானதன் பின் சீ! குப்பை தூசிகளே!
என்பதுபோல் அவை எம்மை ஏளனமாய் நோக்கின.

கையுண்டு வாய்பொத்த கழுவ; எங்களுக்கு
காலுண்டு மிதிவெடியில் உழக்க; தேர்தலுக்கு
மையுண்டு அதற்காக விரல்கள்! பூட்ஸ்காலை
மண்டியிட இருக்கிறது முழந்தாழ்; ஆயுதங்கள்
செய்யெண்டால் செய்வதற்கும் பெய்யென்றால் பெய்வதற்கும்
சீரெடுத்துக் கொடுத்தவரும் நாம்தான்!

உலகத்தில் எத்தனையோ கொடிகள்; கொள்கை
உவை பறக்கும் கம்பங்கள் அனைத்தும் எம்போல்
கலகத்தின் இடையினிலே சிதறும் மக்கள்
காலெலும்பும் முதுகெலும்பும் தானே; யாரோ
வலை பின்ன அதில் மாட்டி வாழ்வை மாய்ப்போர்
வரலாற்றின் ஏடுகளில் எங்கே? எங்கே?
உலகத்தில் வீராதி வீரர் எல்லாம்
உருப்படியாய் இதுவரையில் என்ன செய்தார்?

மூட்டைகளாய் எமையுறிஞ்சி முட்டுச் சாமான்
மூடைகளாய் எமைக்கணித்து சிறையில் பூட்டி
மூடைகளாய் எம்சொத்தை பங்கு போட்டும்
மூடைகளை எம் தலையில் மூடை கட்டி
சாட்டைகளால் அடித்தோட்டி தம்மூர் சேர்த்து
தர்பாரில் தமைப்பாடும் எச்சில் நாய்க்கு
மூடைகளாய் பொன்கொடுத்து வரலாற்றேட்டில்
முந்நூறு பக்கத்தைச் சொந்தங் கொண்டார்.

கோட்டைகளை அவர் பெயரால் விட்டுப்போனார்
கொத்தளத்து அகழியிலே நீராய் அகன்று
வேட்டையிலே பலியான எங்கள் செந்நீர்
வியர்வைகளை யார் நினைவு கூர்வார் இன்று?

போர்களிலே நாம்தானே குதிரை எங்கள்
புத்தியென்ற கடிவாளம் யாரோ கையில்

ஒப்பந்தம் பல வந்து உருவும் வாள்கள்
உடனடியாய் பூ மாலை ஆகிக் கொள்ளும்
இப்பென்ன செய்வதென உணரா தங்கே
இவர்களினை சுமக்கின்ற குதிரை ரண்டும்
தப்பென்றும் சரியென்றும் உணராதங்கே
தாம் போரைத் தொடர்ந் தொன்றில் ஒன்றுபாயும்
எப்போது நாம் சுயமாய்ச் சிந்தித்துள்ளோம்
ஏறுபவர் யார் அறியோம் சுமந்து செல்வோம்.

மேடையென ஆகின்றோம் பொய்கள் ஏற
மெத்தையென ஆகின்றோம் மெய்கள் தூங்க
பாடையென ஆகின்றோம் யுத்தம் வந்தால்
பகடைகளாய் ஆகின்றோம் பதவிச் சூதில்
ஆடைகளாய் ஆகின்றோம் ஆக்கிரமிப்பில்
அம்மணமாய் ஆகின்றோம் சீக்கிரமாக
கோடைகளே கோடைகளே எங்கள் வாழ்வு
குளிர்த்தென்றல் வரலாற்றில் இனி எப்போது?

- இந்துக்கவி -

# அதிகாரிகள்

ஊர்ச்சனத்திற் குதவிசெய்யும் ஒன்று
உயிர்கொடுக்கும் தன்மையதும் உண்டு
பேரறிவு படைத்தவரும் உண்டு
பெரும்பாலும் மற்றதெல்லாம் "மண்டு".

கதிரையினை விட்டுவிட்டு எழும்பிக்
காரியத்திற் குதவுவதும் உண்டு
கதிரையொன்று இருப்பதனை மறந்து - வீட்டில்
கட்டிலிலே உருளுவதும் உண்டு!

வால்பிடிக்கும் தன்மையது ஒன்று - வீணே
வம்பளந்து களிப்பதுவும் ஒன்று
கால்பிடித்து மேலிடத்தில் மாட்டிக்
கழுத்தறுப்புச் செய்வதுவும் உண்டு!

பொறுப்பெடுத்துத் தலைகொடுப்பா ருண்டு
பொறுமையுடன் வேலைசெய்வா ருண்டு
நெருப்பெடுத்து எரிந்துவிழும் ஒன்று - சும்மா
நிற்பவரைத் திட்டுவது முண்டு!

காரியத்திற்கு உதவுமதிகாரி - மக்கள்
கண்களிலே என்றுமுள்ளார் கண்டீர்
வாரியங்கள் யாவிலுமே இன்று - நல்ல
[illegible] நன்று!

- க.வாயுபுத்திரன் -

# கண்ணிருந்தும் குருடராய்...

இன்பங்கள் யாவர்க்கும் வேண்டும் - இங்கு
எல்லோரும் பூமியின் பிள்ளை - போர்(த்)
துன்பமில்லாவோர் பூமி - அது
தோன்றிடின் மானிட தர்மம்.

மனிதரை மனிதர்கள் கொல்லும் - மூட
மதிமிகும் கொடுமைகள் தீது
புனிதமாய் யாவரும் சேர்ந்து - கூட்டு(ப்)
பொறுப்புடன் வாழ்ந்திட வேண்டும்.

கண்கள் இரண்டிருந்தாலும் - அறிவு(க்)
கண்ணை இழந்தவர் வாழ்வு
செந்நெல் பதரினை ஒக்கும் - புது(ச்)
சிந்தை வளர்ந்திட வேண்டும்.

அறிவால் உயர்ந்தவர் மக்கள் - அந்த
அறிவால் பகைமையில் வீழ்தல்
சிறுமை, மிகப்பெரும் தீமை - தர்ம
செய்கை நிலைபெற வைப்போம்.

எந்தப் பகை வளர்ந்தாலும் - தம்
இனத்தை கொன்றிடும் செய்கை
மந்தை மற்றுயிர் யாவும் - இந்த
மண்ணில் புரிவதும் உண்டோ?

சிந்தை அறிவுயர் நீதி - மேன்மை(த்)
திறனால் நிறைந்திடும் மாந்தர்
அந்தோ! தம்மினம் தன்னை - போரால்
அழிக்கும் கொடுமைகள் செய்வார்.

அன்பென்னும் வாழ்க்கையின் நாதம் - அது
அகிலத்து உயிர்களின் கீதம்
துன்பங்கள் யாவையும் வெல்லும் - மன(த்)
தூய்மைக்கும் அது முதலாகும்.

அறிவால் வளர்ந்தது வாழ்வு - அந்த
அறிவே ஆயுதமாக
நெறிகள் படைத்தனர் மேலோர் - நல்ல
நீதி முறைமைகள் செய்தார்.

பாரைப் பயிற்றிட என்றே - நறும்
பண்புறும் வாழ்வியல் நீதி - உயிர்
வேராய் மிளிர்ந்திட செய்தார் - போர்
வெறியில் அழிந்திடல் வேண்டாம்.

வையத்து மானிடர் எல்லாம் - ஒன்றாய்
வாழும் சமநிலைத் தன்மை
செய்தே போரினை வென்று - அன்பில்
சேரின் சமாதானம் தோன்றும்.

- வளலாய் ரஞ்சன் -

# தமிழே.... உயிரே...


இதயக் காவல் தன்னை மீ[illegible]
உள்ளே வந்தவளே...
இளமைக் காலக் காதல் என்னும்
கள்ளைத் தந்தவளே....

உதயக் கால் சுடரைப் போலே
ஒளியுங் கொண்டவளே...
உரிமைக் காரன் நானே என்னும்
உறவுஞ் சொன்னவளே...

நிதமும் எந்தன் நினைவில் வந்தே
தமிழே உறை(க்)கின்றாய்...
நிஜமே இதனால் தருமேந் திரனே
கவிதை புனைகின்றேன்...

இதழில் உந்தன் எழிலின் வண்ணம்
கவியிற் தருகின்றேன் - (அம்மா)
இனிமைச் சந்தம் அதனிற் தந்தே
அருளும் புரிகின்றாய்.

- தர்மேந்திரா -




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புரியாத மறுபக்கம்

தலைமாட்டிலிருந்த குத்துவிளக்கின் ஒற்றைச் சுடர் தொடர்ந்து எரிவதா விடுவதா என காற்றுடன் விவாதம் நடத்தியவாறே எரிந்து கொண்டிருந்தது. என்னைப் போலவே அந்தச்சுடரும் படபடத்துக் கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்த வாழைப்பழமொன்று ஊதுவத்தியை புகைத்துக் கொண்டிருந்தது.

நான் சற்றுமுற்றும் பார்க்கிறேன். ஹோலின் மூலையில் என் மனைவி, அங்கு குழுமியிருந்த பக்கத்து வீட்டுக்காரிகளுடன் ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தாள். முற்றத்தில் போடப்பட்டிருந்த கதிரைகளில் என் அலுவலக நண்பர்கள் நாலைந்து பேரும், அயலக ஆண்கள் சிலரும் இன்றைய தினசரியுடன் ஏதோ சுவாரஸியமாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

கிரியைகளுக்கான ஆயத்தங்களுடன் குருக்களை எதிர்பார்த்துக் காவல் காத்தவாறிருந்தார் முன்வீட்டு பொன்னுத்துரையண்ணர்.

சுழன்ற பார்வை வாங்கிலை நோக்குகிறது.

பெட்டியினுள் கொக்கோக்கோலா நிறத்தில், இந்தப் பாழும் உலகையும் அதன் வக்கிர விகாரங்களையும் துறந்த நிலையில் 'வாசன்' நீட்டி நிமிர்ந்து முடிவிலித்துயிலில் ஆழ்ந்திருந்தான்.

வாசன் கடந்த ஒரு கிழமையாக ஏற்புவலி என்ற ரெற்றனஸ்க்கு எதிராக டாக்டர்களுடன் இணைந்து கடும் போராட்டம் நடத்தியும் முடிவில் தோல்வியுடன் அடங்கிவிட்டான். இப்போராட்டத்தில் மரணத்தின் சகல அவஸ்தைகளையும் அவன் அனுபவித்துத்தான் போனான். இப்போதுதான் அந்த முகத்தில் வேதனையற்ற அமைதி நிலவுகிறது.

வாசன் எனக்கு அறிமுகமானது ஆறு மாதங்களுக்கு முன்புதான்.

அன்று பஸ்நிலையத்தில் எனது பஸ்ஸிற்காக காத்துக்கொண்டிருந்தேன். பஸ் வந்தபாடேயில்லை. கையில் கொண்டுவந்திருந்த பாலகுமாரனின் 'தாயுமானவனை' மேய்ந்து கொண்டிருந்த போதுதான் அந்தக் கூச்சல் சத்தம் என்னைக் குழப்பியது.

"அடியடா, நல்லா அடி, இந்த வயசிலே இது இப்படித் தொடங்கியுட்டுது."

"இதுகளை இப்படியே விடக் கூடாது" என்ற குரல்கள் என் ஆவலைத்தூண்ட அவ்விடம நோக்கி நகர்ந்தேன்.

அங்கு சிறுவனும் இளைஞனும் இல்லாத- இடைப்பட்ட வயதில் - ஒருவனை அடித்தும், ஏசியும், திட்டிக் கொண்டிருந்தது சனக்கும்பல்.

இடையில் புகுந்த நான் அவனை அவர்களிடமிருந்து விடுவித்து, "ஏன் இந்தப் பொடியனை அப்படிப் போட்டு முரட்டுத்தனமாய் அடிக்கிறீர்கள்?" எனச் சற்றுக் கடுமையாகவே கேட்டேன்.

என் தோற்றத்திற்கும், வினவல் தோரணைக்கும் பலன் இருந்தது. அதன் விளைவு...

"உந்தக் குரங்கு பிக்பொக்கட் அடிச்சு வசமா மாட்டியிட்டுது."

"இந்த வயசிலே இப்படியெண்டா. இது இன்னமும் வளர்ந்தா என்னென்ன செய்யுமோ?"

"இதுகளை இப்படியே விடக் கூடாது. இதுகளுக்கு இரக்கமே காட்டம அடிச்சு முறிச்சுப் போடவேணும்."

இப்படியாக அவனைப் பற்றிய விமர்சனங்கள் எனக்குத் தரப்பட்டது.

"சரிசரி விடுங்கோ, சின்னப் பொடியன் ஏதோ தெரியாமச் செய்திட்டான்" என்றவாறு அவனை கைப்பிடித்துக் கூட்டியவாறு எனது பழைய இடத்தை நோக்கி பயணித்தேன்.

கும்பல் என்னை ஒருமாதிரிப் பார்த்தது. நிறையவே முணுமுணுத்தபடியே கலைந்து போனது.

என முன்னைய இடத்தையடைந்து அவனை என்னருகே அமர்த்தி என் கைக்குட்டையை எடுத்து அவன் வாயோரம் வழிந்த இரத்தத்தை துடைத்து விட்டுக்கொண்டே.

"ரொம்ப வலிக்குதா?" என வினவினேன்.

அந்தக் கண்களில் இன்னமும் கலக்கம் கரையவில்லை.

ஆனால் அதுவரை தோன்றாத கண்ணீர் இப்போது அரும்பத் தொடங்கியது. அதையும் துடைத்து விட்டவாறே....

"தம்பி உன்ர பெயர் என்னப்பு?" பாசமுடன் என் கேள்வி புறப்பட்டது.

"வாசன்" ஒரு சொல்லில் விடை. இறுக்கம் தளரவில்லை. அதனால் "வா! தம்பி ரீ குடிச்சிட்டு வருவம்" என்றேன்.

"வேண்டாம்"

"பரவாயில்லை வாடாப்பா" எனக் கையைப் பற்றியவாறு ஒரு தேநீர்ச்சாலையை அடைந்தேன்.

சர்வர் தட்டைக் கொண்டு வந்து வைக்க இரு தேநீருக்கு ஓடர் கொடுத்துவிட்டு வாசனிடம் திரும்பி, "தம்பி வடையை எடப்பு" என்றேன்.

அவன எடுப்பதாகத் தெரியவில்லை.

நானே இருவடைகளை எடுத்து அவன் கையில் ஒன்றைத் திணித்து விட்டு மற்றதை கடிக்கத் தொடங்கினேன். அவன் என்னையே பார்த்தான். "சாப்பிடப்பு" என்றேன். சாப்பிட்டான். ரீயைக் குடித்ததும் அவனைக் கூட்டிக்கொண்டே மீண்டும் பஸ் நிலையத்தை அடைந்தபோது எனது பஸ் போய்விட்டிருந்தது. சரி அடுத்தது வரட்டும் என எண்ணியவாறு பழைய இடத்தில் அமர்ந்து கொண்டு அவனையும் அமரப்பண்ணினேன்.

அவனது இறுக்கம இப்போ காணாமல் போயிருந்தது.

"வாசன்" என அன்பாய் அழைத்தேன்.

என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தான். முகத்தில் நன்றி தென்பட்டது.

"ஏனப்பு இப்படி களவில ஈடுபடுகிறாய்?" என்றேன்.

"சாப்பிட காசு வேணும். அதுக்குத்தான்" என்றான்.

"நீ எங்க இருக்கிறனி? உன்ர அப்பா, அம்மா எங்கே?"

"எங்கட சொந்த இடம் மாதகல். அங்க கடல்த்தொழில் செய்தனாங்கள். அம்மா ஷெல்லடியில செத்திட்டா. பிரச்சினையால குருநகருக்கு இடம்பெயர்ந்து வந்து தொழில் செய்த அப்பா இங்க இன்னொருத்தி யைக் கட்டியிட்டார்."

"ந பள்ளிக்கூடம்போறதில்லையா?"

"அம்மா இருக்கயுக்க போனனான். அப்பாவோட இஞ்ச வந்த பிறகு போறதில்லை. புதிசா வந்த சின்னம்மா கொஞ்ச நாளிலேயே என்னை திட்டி வீட்டிலயிருந்து கலைச்சுப் போட்டா"

"இப்ப எங்க தங்கிறனி?"

"பகல்ல இப்படிச் சுத்தித்திரியிறனான். இரவில ஆஸ்பத்திரி வாசல்ல இல்லாட்டி பஸ் ஸ்ராண்டிலதான் படுக்கிறனான்."



எம் தேசத்தின் அவலங்கள் அவனில் நாயின் நிலைமையாய்.

"சரி நீ ஏதாவது வேலை செய்யலாமே? இப்படிக் களவெடுப்பது கூடாத செயலல்லவா?"

"எனக்கும் இப்படிக் களவெடுப்பது பிடிக்கவில்லைத்தான். ஆனால் எனக்கு எவரும் வேலையோ கூலியோ தரேல்லையே? வேலை கேட்டுப்போனா 'மூஞ்சியைப்பார் இதுகள் வேலைசெய்யவா வருகுதுகள்? களவெடுத்துக் கொண்டு ஓடியிடுங்கள். இப்ப நோட்டம் பாத்திட்டு பேந்து களவெடுத்திடுங்கள் கவனமாக இருக்கவேணும். இதுகளை வீட்டுக்குள்ளேயே அண்டக்கூடாது' என்று சொல்லி 'இஞ்சை ஒரு வேலையுமில்லை. வீட்டுக்கைவராத போ-போ' எண்டு விரட்டி விடுகினம். சிலர் என்னைக் கொண்டு வீட்டுவளவுகள், கக்கூசுகள் எல்லாம துப்புரவாக்கிப்போட்டு பழஞ்சாப்பாடு ஏதும் தந்து 'சரி போ' என்று கலைச்சு இல்லாட்டி பத்து ரூபா காசைத்தந்திட்டு 'சரி எனி இஞ்சாலை வராதே' என்று சொல்லி விடுகினம். நான் என்ன செய்ய முடியும்? எனகுப் பசிச்சா என்ன செய்யிறது? நீங்களே சொல்லுங்கள்?" என்னிடம் பெரிய ஆராய்ச்சிக்குரிய வினா பதிலாக எழுப்பப்பட்டது.

'இந்தச் சனந்தானே நான் களவெடுக்காம உழைக்க முயற்சி செய்ய கள்ளன் கள்ளன் என என்னைப் புறக்கணித்தது. அப்ப வேறவழியில்லாமல் நானும் கள்ளனாயிட்டன். களவெடுக்காமல் கள்ளன் என்று பெயரெடுத்தாப் பிறகு களவெடுத்தால் என்ன எடுக்காட்டி என்ன?' - அவன் கேட்காத இக் கேள்வி எம்மில் பலருக்கு புரியாத, உணராத, உணர முயற்சிக்காத உண்மையின் தத்துவங்கள் என்னை மோசமாய்த் தாக்கின.

"நீ இப்படிக் களவெடுக்காம பிச்சை எடுத்துச் சாப்பிடலாமே!?" என நிச்சயமாய் நியாயமற்றது எனத் தெரிந்தும் இக்கேள்வியைக் கேட்டேன்.

"அதோ அங்க பாருங்க" அவன் சுட்டிக்காட்டிய திசையில் என் பார்வை திரும்பியது. இனியும் தைக்கவே முடியாது என்ற நிலையிலுள்ள கிழிந்த பாவாடையும், அதைவிடப் பாதிக்கப்பட்ட நிலையில் சட்டையும் பூண்டு இலங்கையின் பிரச்சினையைவிட சிக்கல் நிறைந்தாய் தலைமயிருடன் பத்து வயது மதிக்கக் கூடிய சிறுமி ஒருத்தி பிச்சை கேட்டுத் திரிந்து கொண்டிருந்தாள். எவரும் தர்மம் இட்டதாய்த் தெரியவில்லை.

ஏதோ பார்க்கக் கூடாததை பார்த்துவிட்டது போலவும், அட்டை ஒன்று உடையில் ஊர்வது போலவும் அருவருத்து 'அங்காலபோ' என்பவர்களும், உதட்டைப் பிதுக்குபவர்களும் சட்டைப் பையை மேலாகத் தடவி சில்லறை இல்லை என்றவர்களுமாகவே இருந்தனர்.

சிலர் "இதுகள் பொக்கற் அடிக்க நோட்டம் விடுகுதுகள் கவனம்" என்றனர்

"பார் இதுகள் பள்ளிக்கூடமும் போகாம இப்பவே பிச்சைக்குத் திரியுதுகள்"

"இதுகளுக்கு கொடுத்துப் பழக்கக்கூடாது"

- என விமர்சனங்கள் பல திசையிலிருந்தும் பரவின.

ஆனாலும் அவள் சலிக்காமல் ஒவ்வொருவரிடமும் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"பார்த்தீங்களா ஐயா!?" வாசனின் குரல் என்னைக் கூப்பிட்டது.

"பாருங்க ஒரு பெட்டைக்கு இரங்கி பிச்சையிடாத சனம் எனக்கா பிச்சை போடும் என எண்ணுகிறீர்கள். நாங்க பசியால கேட்கிறம் ஒரு ரூபா தர மாட்டாங்கள். ஆனா கோயில்ல கொண்டுபோய் கடவுள் கேட்காமலேயே கொட்டிக் கொடுக்கிறாங்கள். நீங்களே யோசியுங்க ஐயா. இதைப்பாத்த எங்களுக்கு கோயில் உண்டியல் உடைக்கத்தோன்றுமா தோன்றாதா?"

"பிச்சைதராதவர்களின், எம்மைக் கள்ளன் எனத் திட்டி அருவருப்பவர்களின் 'பேர்ஸை' பிக்பொக்கட் அடிக்கத்தானே எண்ணம் வரும்?"

'ஏன் அவர்களின் நிஜ நிலைமையை உணர மறுக்கிறார்கள்? அவர்களே ஏன் அருவருத்து புறக்கணித்து ஒதுக்கிறார்கள்? வீட்டு நாயை மதிக்குமளவிற்கு கூட அவர்களை மதிக்கிறார்கள் இல்லையே!'

'இப்படி அவர்களை நாம் நடத்தும்போது அவர்களுக்கும் எங்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு பழிவாங்க மனசு துடிக்கும்தானே.' - நான் எனக்குள் கேட்டுக்கொண்டேன்.

'ஏன் அவர்களை புரிந்து கொள்கிறார்கள் இல்லை?'

'பள்ளிக்கூடம் போகாம களவெடுத்து, பிச்சையெடுத்துதிரியுதுகள்' என்று சொல்கிறார்கள். ஆனால் பள்ளிக்கூடம் போற பிள்ளைகளைப் பார்க்கும்போது அவர்கள் மனதில் ஏற்படும் ஏக்கம் எப்படியிருக்கும் தெரியுமா?'

என்மனதுக்குள் பதில் கிடைக்காமல் எழுந்த கேள்விகள் இவை.

"எங்கட இடத்தில் என்ர அம்மாவோட இருந்தால் நானும் வெள்ளைச் சேட்டுப்போட்டு பள்ளிக்கூடம் போவன் தானே." - என்றான் வாசன்.

"அம்மா ஷெல்லடியில செத்தது என்ர பிழையா?"

"அப்பா வேற கலியாணம் கட்டினது என் தவறா?"

"பட்டுச் சட்டையா கேட்கிறோம்? இல்லையே...... வயிற்றுப்பசிக்குத் தானே இரக்கிறோம். ஏன் இவர்கள் எம்மீது இரக்கமே காட்ட மறுக்கிறார்கள்?"

ஆவேசமாய்க் தொடர் கேள்விகள் என்னைத்தாக்கின. இதுவரை புரியாத விடயங்கள் புலப்படத் தொடங்கின. தவறுகள் அவர்களிடம் மட்டுமல்ல என்பது விளங்கியது.

## சித்தர் அனவரதன்

"சரி தம்பி! நீ என்னுடன் வருகிறாயா? நான் உன்னை என்ர பிள்ளை போல வைத்திருக்கிறேன்."

"ஏன் உங்களுக்கு பிள்ளையள் இல்லையா?"

"இரண்டு பெடியள்தான். ஆனால் அதுகளுக்கு இறக்கை முளைச்சவுடனே வெளிநாட்டு மோகத்தில பறந்தே போயிட்டுதுகள். என்ர மனிசியும் அதுகளின் பக்கம். அதுகள் அங்க டொக்டராகவும் இஞ்சினியராகவும் இருக்குதுகள். பெத்த நாங்கள்தான் இஞ்ச இருக்கிறம்."

"ஏன் நீங்களும் வெளிநாடு போகலாம்தானே. அவர்கள் உங்களக் கூப்பிடவில்லையா?"

"ஒவ்வொரு கடிதத்திலும் வரச் சொல்லித்தான் எழுதுதுகள். ஆனா நான் பிறந்து, வளர்ந்து, படிச்ச மண்ணை விட்டுப்போக எனக்கு விருப்பமில்லையடாப்பா. என்னை இஞ்ச விட்டிட்டு என்ர மனிசியும் போக மாட்டன் என்றிட்டாள்."

"சரி இப்ப நான உங்களோடவந்தா உங்கட அவா ஒன்றும் சொல்லமாட்டாவா?"

"எனக்கு வீட்டில இன்னமும் மரியாதை இருக்குதடாப்பா."

அவன் தயங்கவும், விடாமல், "நீ வாப்பு. நான் இருக்கிறன்." எனக் கையைப்பிடித்தவாறு பக்கத்திலுள்ள புடவைக்கடையினுள் புகுந்து அவனுக்கு அளவான உடைகளில் இரு சோடிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்ட எமது பஸ்ஸினுள் ஏறினோம்.

அவன் முகத்தில் எதிர்பார்ப்புடன் கூடிய கலக்கம்.

வீட்டையடைந்தவுடன் அவன் மிகவும் தயங்கினான். நான் அவனின் கையைப்பற்றிபடி கேற்றைத்திறந்து நுழைய அங்கு காத்திருந்த என் மனைவி வெளிப்பட்டாள்.

வாசனைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் கேள்விக்குறி குடியேறியது.

அதை அவதானித்த நான். "இவன் வாசன். இனி எங்கட பிள்ளையாக இஞ்சதான் இருக்கப்போறான்." என்றேன்.

அவள் முகத்தில் எவ்வித சலனமுமில்லை.

அவள் என்மீது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள். என்னைச் சுற்றியே தன் வாழ்வை அமைத்துக் கொண்டவள். என்னை நன்கு தெரிந்தவள், புரிந்து கொண்டவள்.

இதனால் வாசன் எம்முடன் இருப்பது பிரச்சினைக்குரியதாகி விடவில்லை.

ஆனால் அவளால் என்போல, வாசனுடன் விரைவில் நெருங்க முடியவில்லை.

வாசனை நான் பாடசாலைக்கு படிக்க அனுப்ப முயன்றேன். ஆனால் அவன் பலமாக மறுத்துவிட்டான்.

"அங்கு என்னைப் புறக்கணித்து நடப்பார்கள். அதை என்னால் தாங்க முடியாது. நிராகரிப்பில இருக்கிற கொடுமை வேறு எதிலும் இல்லை" என்றான்.

அதன் நிஜத்தை உணர்ந்த நானும் விட்டுவிட்டேன்.

வீட்டில் அவன் இலகுவாய் ஒட்டிக் கொண்டான். சும்மா இருக்க மாட்டான். ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டேயிருப்பான்.

இரவில் நான் கண்டிப்புடன் அவனுக்கு எழுத, வாசிக்க கற்றுக் கொடுத்து வந்தேன். அவனும் ஆவலுடன் கற்றான். அவனிடம் நல்ல திறமை இருப்பது தெரிந்தது.

இவனைப் போல நல்ல திறமை உள்ளதுகள் வாய்ப்புக்களின்றி வீணாவதை யார் கவனிப்பது?

என் அலுவலகத்திலும் வாசனைப் பற்றி சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்வேன்.

இப்படியிருக்கையில்தான் போன கிழமை இரவு திடீரென கடும் காய்ச்சலுடன் ஒருவித வலிப்புத்தன்மையும் வாசனுக்கு ஏற்பட்டது. பனடோல் கொடுத்தும் எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. இரவு முழுவதும் அனுங்கியபடியே இருந்தான். எனக்கு மிகவும் வேதனையாகவும் அந்தரமாகவும் இருந்தது. அடுத்தநாள் விடியவே காரில் கூட்டிவந்து பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தேன்.

உடனடியாகவே அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

என் நிலைதான் மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. என் மனைவி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் நான் இப்படியிருப்பது அவளால் தாங்கமுடியாததாக இருந்தது.

ஏழாம் நாள் வாசனின் சடலத்தையே என்னால் பெறமுடிந்தது.

வாய்வரை வந்த வேதனையை அடக்கிக் கொண்டு மௌனமாய் எனக்குள் அழுதேன். என் அழுகை என்னவளை தாக்கி விடக்கூடாது. அதை அவள் தாங்கமாட்டாள்.

பிரேதத்துடன் வீட்ட வந்த நான் முன்வீட்டு பொன்னுத்துரையண்ணரைக் கூப்பிட்டு விடயத்தைக்கூறி அடக்கத்திற்கு வேண்டிய சகலதையும் செய்யுமாறு கேட்டுக்கொண்டேன்.

"தம்பி பாலன்" என்னை நிஜத்திற்கு கூப்பிட்டார் பொன்னுத்துரையண்ணர்.

"என்னண்ணே?" இது நான்.

"குருக்கள் வந்திட்டார். ஆர் கொள்ளி வைக்கிறது?"

"நான்தான்." என்றவாறு பெருகிய கண்ணீரைத் துடைத்தவாறே கிரியைகளில் கலந்து கொண்டேன்.

"சரி பெட்டியைத் தூக்குங்கோ" என்றபோதுதான் "என்ர வாசா!" என என் குரல் வெதும்பியவாறு பலமாய்ப் வெளிப்பட்டது.

பொன்னுத்துரையண்ணர்தான், "பாலன்! இது என்னது அழுகை. கவலைப் படாதே. விதி பொல்லாதது" எனத் தேற்றியவாறு கொள்ளிக் குடத்தை என் தோளில் வைத்தார்.

பெட்டி 'ஒளியக' வாகனத்துள் வைக்கப்பட்டது - வாகன முன் கதவு திறக்கப்பட என்னை அமரச் சொன்னார்கள். மறுத்துவிட்டு வாசன் வாகனத்தில் பின்னால் தொடர நான் முன்னே கொள்ளிக் குடத்துடன் நடக்கிறேன்.

(சிந்தனையின் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | சந் | |
| | இராசிச்சக்கரம் | | புத சூ ராகு |
| கே | | | வெ |
| | | செவ் | |

# இந்த வார இராசி பலன்

## 07 - 08 - 1999 இலிருந்து 13 -08 - 1999 வரை

# மகாதேவா ஜோதிடம்

* மாற்றம் - ரோகிணி நட்ஷத்திரம்- இடபம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் புதிய திசைதிருப்பங்கள் ஏற்படும். புதிய பேச்சுக்கள் இடம் பெறும். வன்னிமக்களின் குரல் மக்கள் மத்தியில் எதிரொலிக்கும். உலகம சிந்திக்கும். ஐ.நா.வில் இனப்பிரச்சினையை அயலநாடு முன்னெடுக்கும் சூழ்நிலை உருவாகும். வட்டமேசை, சதுரமேசை பேசியவர்கள் தடுமாறுவார்கள். மக்கள், மாணவர்கள், தொழிலாளர்களின் குரல் அரசையும் அரசியல்வாதிகளையும் சிந்திக்க வைக்கும். யுத்தம் புதிய பரிமாணம் பெற்று விட்டுவிட்டு அழிவுகளைக் கொடுக்கும்.

வடக்கில் இந்தியா - பாகிஸ்தான் முறுகல்நிலை ஏற்படும். பாரதீயஜனதா வுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். ஆட்சிப் பீடத்தை அலங்கரிக்கும். தேர்தல்! ஜெயலலிதாவின் செயல் மாற்றங்களால் - செல்வாக்கு அதிகரிக்கும். அமெரிக்கா உலக அரங்கில் தன் நிலையை நிலைநிறுத்தும். மத்திய கிழக்கு - கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்த படி இருக்கும். 2000ஆம் ஆண்டில் அணுஆயுதபோர் மத்தியகிழக்கிலும், கிழக்கு நாடுகளிலும் ஏற்பட்டாலும் உலகம் அழிந்துவிடாது தெய்வீக சக்தி தடுத்துநிறுத்தும் ஒரு நிலையை கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

இந்தியாவுக்கு பிரச்சினை வடக்கில் தீரவில்லை. வெளியில் புண்ணுக்கு மருந்துக் கட்டுப்போட்டாலும்- உள்ளுக்குள் சீழல் வேதனை இருக்கச்செய்யும். அதுபோல உங்கள் காணி பூமி, வாகனம், பொருள விஷயங்களில் சில பிரச்சினைகள் தீர்ந்தாதிரி இருந்தாலும் முற்றுமுழுதாக ஆறவில்லை, மாறவில்லை. ஒருவாறு மெல்ல மெல்லச் சமாளித்து வாருங்கள். தொழில் ஸ்தானத்தில் சிலதவறுகளால் வருந்த வேண்டி வரலாம். உதயத்தில் சனி, வியாழன் செவ்வாய்க்கிரகத்தோட பார்க்கப்படுவதனால் குழறுபடு அமைதிமும் மாறிமாறி நடக்கும். எதிர்ப்பாளராலும் சிலருக்கு தலைகுனிவு ஏற்படலாம். வயிற்றில்நோ, கிருமித்தாக்கம், தலைச்சுற்றல், பித்தரோகம் என்பன வரலாம். மருந்துத்துறை, பத்திரிகைத்துறை, சமயசாஸ்திரத்துறை, ரீ.வி.த்துறை, போக்குவரத்துத்துறையினருக்கு வருமானம் பெருகிவரும்.

* அதிர்ஷ்டநாள் - சனி, வெள்ளி.

## இடபம்

வட்டமதி - பூரணை சந்திரன உச்சமாக ரோகிணியில் உதயத்தில் எட்டி நின்று பார்க்கிறான். பற்பல திட்டங்கள், எண்ணங்கள் தொழில் ஸ்தானத்தில் உதயமாகிப் பல பேசவைக்கும். மேலதிகாரிகள் நல்லதைச் செய்வார்கள். காதலும் - மோகமும் கலந்துநின்று பலவீனமாக்க இடமுண்டு - நெஞ்சுநோ, சலளிவு, யோசனை, கைகால் சோர்வு என்பன வருத்த இடமுண்டு. அதிக நீர்பருகவும். கீரைவகைகளைச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளவும். தொழில் நுட்பத்துறையினர், போக்குவரத்துத் துறையினர், எண்ணெய்த்துறை, குருத்துறை, வியாபாரத்துறை என்பனவற்றில் ஈடுபாடுடையவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். நாம் நினைப்பதெல்லாம் நடக்க முடியாத காலமாகும். உங்களுக்குக் கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடைவதே புத்திசாலித்தனமாகும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, வெள்ளி.

## மிதுனம்

வன்னி மக்களும் எங்கள்மக்களே! அவர்களைக் காக்க குரல் எழுப்புவது எல்லோரது கடமையாகும். உங்கள் உள்ளத் துடிப்பை - உணர்ச்சிவேகத்தை - தொழில் ஸ்தானத்தில் கடமை நேரத்தில் காட்டுவீர்கள். தந்திரப்பேச்சு, அடிக்கடி கொதிப்பு, உறுதியற்றநிலை (செல்வம், செல்வாக்கால் சிலர் சமாளித்துக் கொள்ளுவீர்கள்) கண்பார்வை, எரிவு, நெஞ்சுவலி, கிருமித்தாக்கம், கைகால்பிடிப்பு என்பன கொடுக்கலாம். மருந்து, ரீவி, போக்குவரத்து, வியாபாரம் போன்ற துறையினருக்கு மாற்றங்களும் முன்னேற்றங்களும் கொடுக்கும். இளஞனங்களை புறுப்பர். நண்பர்களைச் சமாளித்து விடுவீர்கள். சனி பார்வை இடைக்கிடையே மனஅமைதியற்ற நிலையை சகோதரங்கள் அல்லது பிள்ளைகள் அல்லது நண்பர்கள் மூலம் கொடுத்துக் கொண்டிருக்கும். கைக்குவந்தது வாய்க்கு எட்டாத நிலை சிலருக்கு ஏற்படலாம். குல தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி.

## கடகம்

மனதில் உள்ளதை வெளிப்படுத்

## சோதிட சஞ்சீவி

தியபடி இருப்பதனால் மனப்பாரம வேதனைதரும். பிரமை குறைய இடமுண்டு. ஆனால் தொழில்ஸ்தானத்தில் நடப்பதை வெளிவிடுவதனால் எதிர்ப்புக்கள் வராதுதான் சொல்லமுடியாது அல்லவா? சூரியன், புதன், இராகு, கேது கலந்து - முன்னுக்குப்பின் முரணான வசனங்களைப் - பேசவைக்கும். பிடிவாதமும் - கற்பனையும் உள்ள உங்களுக்கு அமைதியும் - புயலும் வீசும் காலமாக இக்காலம் நடந்துவரும். தலைச்சுற்று, நெஞ்சு, முட்டு, வயிற்றுநோ, கண்எரிவு என்பன வரலாம். ஹோட்டல், ரீவி, நகை, வாகனம், வியாபாரம், மருந்து, குரு, மின்சாரம் போன்ற துறையில் ஈடுபாடுடையவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள். காசு கடன் கொடுத்துவிட்டு கனதூரம் அலைந்துதிரிவது போன்ற நிலை, கொடுத்ததைப் பெறுவதில் போராட்டம், வேதனைவர இடம்உண்டு.

* அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.

## சிங்கம்

விஞ்ஞான சாதனைகள் சமூகத்திற்குப் பிரயோசனமாக வேண்டும். அது தனிப்பட்ட ஒருசிலருக்கல்ல. ஆயினும் அதற்காக போராடிக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானி அல்லது ஆராய்ச்சியாளர், பேராசிரியர்கள் இரகசியமாக தமது கண்டுபிடிப்புக்களை காத்துவர வேண்டும். அல்லது அதனால் தாக்கங்கள் ஏற்படும். அதுபோன்று உங்கள் கண்டுபிடிப்புக்களை இரகசியமாகத் தொழில் ஸ்தானத்தில் செயற்படுத்துங்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படும். புதிய பிரச்சினை, புதிய அனுதாபம், மனமாற்றம், சமநிலைநோக்கு என்பன ஏற்படும். கஷ்டப்படுபவர் கூலி பெறுவார் என்ற வேதவாக்கியம் பிழையாது. வேலைக்களைப்பு, நாரிநோ, கண் எரிவு, வயிற்றுக் கடமுடப்பு, வாய்வுத தொல்லை வரலாம். நிர்வாகத்துறை, சட்டத்துறை, குருத்துறை, பத்திரிகைத் துறை, வாகனத்துறை, கோவில்துறை என்பவை தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.

## கன்னி

பொருளால் வேதனை, மனக்குழுறல், பல பிரச்சினைகள் வந்து போகும். மழை விட்டும் தூவானமும் ஈரலிப்பும் போகாத நிலை வட்டமிட்டபடி இருக்கும். எதையும் எதிர்கொண்டு தாங்கி நடக்கவும். தெய்வபக்தியால் வேதனை குறையலாம். உலகம் அழியும் எனப் பயப்படுகிறீர்களா? பயப்படாதீர்கள். உலகத்தில் சண்டைகள் நடந்தபடி தான் இருக்கும். உலகம் ஒருபொழுதும் அழியாது. ஒருசிலர் அடிக்கடி பயமுறுத்தியபடிதான் இருப்பார்கள். இயற்கை - தெய்வீகசக்தி எமது பூமியையும், கிரக அமைப்புக்களையும் காக்கும் ஒரு நிலையில் மாறிலியாக அமைக்கப்பட்டுள்ளது என்பது உண்மையாகும். தொழில் ஸ்தானத்தில் உறுதியாக இருங்கள். நாரிநோ, வாய்வு, வாதத்தொல்லை, நரம்புச் சோர்வு, கைகால் பிடிப்பு, யோசனை வரும். நிர்வாகத்துறை, குருத்துறை, பத்திரிகை, ரீ.வி., கடல்துறை, புடைவைத்துறை, நகைத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கு நன்மைகள் கிட்டும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## துலாம்

உண்மை, தர்மத்தின்படி நடப்பவர்களுக்கு சோதனைகளை சில தெய்வ சக்திகள் கொடுத்தபடிதான் இருக்கும். நாம் அதிலிருந்து விலகி நடக்கமுயல வேண்டும். நீங்கள் செய்யாத செயல்களையெல்லாம் செய்வதாகச் சிலர் உண்மையறியாது சொல்வார்கள். தொழில் ஸ்தானத்தில் அதைப் பெரிதாக எடுக்காதீர்கள். அவர்களே தங்கள் தவறுகளை எண்ணிப் பின்பு வருந்துவார்கள். வாக்குவாதங்களைத் தவிர்க்க முயலுங்கள். இன ஜனப் பகை, வீடுவாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். தலையிடி,வாதவிறைப்பு, வயிற்றுக்கோளாறு, கிருமித்தாக்கம் என்பன வரலாம். பண்ணைத்துறை, ரீ.வி.த்துறை, நிர்வாகத்துறை, செய்தித் துறை, குருத்துறையில் சம்பந்தப்பட்டவர்கள் நன்மையும் மாற்றங்களும் அடைவார்கள். பிரயாணங்களால் நன்மைகள் ஏற்படும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## விருச்சிகம்

திருக்குறளில் சொன்னபடி நாம் நடக்கின்றோமா? கீதையில் கடமையைக் கண்டோம். நாம் கடமைகளைச் செய்கின்றோமா? ஒருவரை ஒருவர் சுயநலத்தால் ஏமாற்றுகின்றோம். வாழ்க்கையில் போராட்ட உணர்வுகள் தலைதூக்கியுள்ள காலமாகும். சுயநலம், ஆதிக்க உணர்வு,பணத்தால்-சாதித்துவ உணர்வுகளால் ஏற்படும் மனோநிலை என்பவற்றால் ஒருவரை ஒருவர் அறியாமையால் பகைத்துக் கொள்ளுகின்றோம். தொழில் ஸ்தானத்தில் மென்மைப் போக்கை அனுசரியுங்கள். அதனால்மாற்றங்கள் ஏற்படும். கிருமித்தாக்கம், அடிவயிற்றுநோ, சிரசு வியாதிகள், கைகால் உளைவு என்பன ஏற்படும். சட்டத்துறை, நகைத் துறை, புடைவைத்துறை, கோவில் துறை, இரும்புத்துறை, வியாபாரத் துறை சம்பந்தப்பட்டவர்கள் நன்மை அடைவார்கள். இடமாற்றம், பிரயாணங் களைத் தவிர்க்கவும்.

* அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன், வெள்ளி.

## தனுசு

எத்தனை போராட்டம் உலகில்? எதற்கும் அசையமாட்டீர்கள். உங்கள் வாக்குச்சாதுரியம் மட்டும் விளம்பரப்படுத்தப்பட்டு பல காரியங்களைச் செயற்படுத்தியபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் தத்துவம் பேசுவீர்கள். சிலர் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுவார்கள். பொருளாதாரத்தில் மாற்றங்கள் கொடுக்கும். வயிற்றுப்பொருமல், கைகால்பிடிப்பு,உஷ்ணபீடைகள்,வாய்வுத் தொல்லைகள், பதற்றம் என்பன ஏற்படும். நகைத்துறை, ரீவித்துறை, மின்சாரத்துறை, அரசியல்துறை,பத்திரிகைத்துறை, அச்சுத்துறையினர்களுக்கு அதிக நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படும். நீங்கள் பிரச்சினைகள் வரும்பொழுது அமைதியாக இருந்து பாருங்கள். அப்பிரச்சினைகளிலிருந்து திடீரென விடுபடுவீர்கள். குல தெய்வ வழிபாடு நன்மைதரும்..

* அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன், வெள்ளி.

## மகரம்

புத்திசாதுரியமாகச் சிலர் - பல பொறுப்புக்களை எடுத்துச் சிலரை வசீகரித்துவிடலாமென எண்ணுவது போல நினைக்கிறீர்கள் போல் தெரிகிறது. தப்புத்தாளங்களால் பலரின் ஏச்சும் பேச்சும் தேடிவரும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். அதிக பொறுப்பு, பாரங்களைச் சுமக்க முடியாமல் திசைமாற வேண்டி வரலாம். மந்த நிலை ஏற்பட இடமுண்டு. காணி, வீடு, வாகனச் செலவுகள அதிகரிக்கும். குடும்பத்தில் மாமன் - மச்சாள் பகுதியினர் குறை சொல்லுவார்கள். சமியாக் குணம், மனக்குழப்பம், நரம்புச்சோர்வு, வயிற்றுவியாதி, உஷ்ணபீடைகள் என்பன வரலாம். சட்டத்துறை, வியாபாரத் துறை, அரசியல்துறை, கமிஷன்துறையினர்கள் அதிக நன்மைகளை அடைவார்கள். எவ்வளவுதான் முன்னேறினாலும் நெப்போலியன் வாழ்வில் இறுதிக் கட்டம் என்ன நடந்தது? எனவே தெய்வவழிபாடு முக்கியமாகும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன், வெள்ளி.

## கும்பம்

தொழிலாளர்களும் மாணவர்களும் சமூகத்தைக் கணித்துச் செயற்பாடுகளைச் செயற்படுத்த வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு தவறுகளை சிலர் விடுவதனால் பலர் பாதிப்புக்குள்ளாக்கப்படலாம். ஆழமாகச் சிந்தித்துச் செயற்படும் நீங்கள், சிலரை மகிழ்விக்க தவறுகள் இழைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில்ஸ்தானத்தில் மின்னிமின்னிப படபடப்புக்கள் ஏற்பட்டபடி இருக்கும். கைகால்வலி, வாய்வுத்தொல்லைகள், வரட்சித் தன்மை, இருதயத்துடிப்பு என்பன ஏற்படலாம். ரீ.வி.த்துறை, ஹோட்டல், நகைத்துறை, வாகனத்துறை, மருந்து, மின்சாரத்துறை, கூலித்துறையினர்களுக்குப் பல மாறுதல்கள் ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் அல்லது இழப்புக்கள் ஏற்பட இடம் உண்டு.

* அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.

## மீனம்

ஆடி அமாவாசைக்கு மோட்ஷ அர்ச்சனை செய்ய - உங்கள் நட்ஷத்திரங்களை அல்லது இறந்தவர்களின் நஷ்டத்திரங்களைப் புரோகிதரிடம் சொல்லாதீர்கள். சிலர் பிழையாக விளம்பரப்படுத்துகிறார்கள், இறந்தவர்களின் திதிக்குத்தான் மோட்ஷ அர்ச்சனை செய்யவேண்டும். இதைஅறியாத சிலர் கோயில் நிர்வாகத்தில் இடம்பிடித்து மக்களைச் சமய, சாஸ்திர விதிகளை மாற்றி நடைமுறைப்படுத்த முற்படுகின்றார்கள். அது போன்று நீங்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் திசைமாறி நடப்பீர்கள். இதைக்கண்டித்துக கலக்க மடைவீர்கள். நரம்புவியாதிகள். சளிக் காய்ச்சல், இடுப்புவலிகள், உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கலாம். மருந்துத்துறை, வியாபாரத்துறை, பத்தரிகைத்துறை, சமயசாஸ்திரத்துறை, அரசியல்துறை, கடல்துறை என்பனவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல பொருள்சிறப்புக் கொடுக்கும். வெளிநாட்டிலிருந்து ஏமாற்றச் செய்திகள் சிலரைக்கலக்க மடையச் செய்யும்.

* அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.

# வழக்கப்படுத்திக்கொள வேண்டுவன

வரகவி பாரதியார் பாப்பாவுக்குப் பாட்டிசைத்தார். ‘காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு – மாலை முழுதும் விளையாட்டு – என்று வழக்கப்படுத்திக் கொள்ளு’ என்று கூறினார். எங்கள் பழம் புலவர் ‘காரியா சானும்’ வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுவன – நினைவில் இருத்தவேண்டுவன – ஐந்து கூறுகின்றார். காண்போம்.

ஒன்று பெருங்குணத்தாரை சேர்ந்தொழுகல். ஆமாம் பெருங் குணத்தார் யார்? அறிவு, ஒழுக்கம் முதலியவற்றால் மேம்பட்டவர். அன்பு, நாண்,ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை மிக்க சான்றோர். ஔவைப்பிராட்டியார் ‘சான்றோர் இனத்து இரு’ என்று கூறினார். மேலும் அமையாராய்ச் ‘சேரிடம் அறிந்து சேர்’ என்றார். பருமரத்தைச் சுற்றிய பல்லிக்கு தீங்கு இல்லையே! திருவள்ளுவதேவரும், ‘அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்பேணி தமராக்கொளல்’ என்று கூறுவர். எனவே நாம் கல்வி, அறிவொழுக்கங்களில் மேம்பட்ட பெரியார்களுடன் கூடிப் பழகுதல் வேண்டும்.

தேன்கூடு

அடுத்தது – பிறர் பொருளை வெளவாமையாகும்; வெளவுதல் – அபகரித்தல். வெளவாமை – அபகரியாதிருத்தல். வஞ்ச மனத்தோர் அயலார் சொத்துக்களை அபகரிக்க முற்படுவர். பிறர் பொருளை எட்டி என்றே – நஞ்சு என்றே நாம் கருதுதல் வேண்டும். திருவள்ளுவப் பெருந்தகையார் பிறர் பொருளை அபகரித்து அனுபவிக்கும் செயலை விரும்பாதிருங்கள் என்று பணிக்கின்றார். அனுபவிக்கும்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதல் இல்லை என நவில்கின்றார். பிறர் ஆக்கம் விரும்பாப் பெருங்குணத்தைப் பேணுவோம்.

தொடர்ந்து வருவது கருங்குணத்தார் கேண்மை கழித்தலாகும். கருங்குணத்தார் – தீக்குணத்தார்; கேண்மை – நண்பு; நாம் எல்லோருடனும் நண்பு பூணுகின்றோம். தெய்வத் திருக்குறளில் நண்பு தொடர்பாக நான்கு அதிகாரங்கள் வருகின்றன. அவை நட்பு, நட்பு ஆராய்தல், தீநட்பு, கூடாநட்பு என்பனவாம். சுருங்கக் கூறுமிடத்து தூயநட்பினர் உடல் இரண்டாய் உயிர் ஒன்றாய் இருப்பர். சிறந்த நட்பு எழுபிறப்பும் தொடர்ந்து வரும் என்பர்; நகுதற் பொருட்டன்று நட்டல்; தவறு கண்ட இடத்து தட்டிக் கூறிப் புத்தி புகட்டுவதற்கே ஆகும். கரு நண்பினர், நெய்க் குடத்துள் எறும்பென நின்று அது தீர்ந்ததும் விலகும் இயல்பினராம். கைப்பொருள் இல்லாத போது கழிந்துவிடுவர்.

## சிந்திப்போம் செயற்படுவோம்

அடுத்து தீச்சொற் காத்தலை வழக்காறாகக் கொள்ள வேண்டுமாம். தீச்சொல் என்பது தீமைபயக்கும் சொல்லாகும். அதனுள்,பொய், குறளை, கடுஞ்சொல் என்பன அடங்கும். பொய் என்பது பொய்யு ரைத்தல் என அறிவோம். குறளை என்பது கோள் கூறுதலாகும். அதனை வெளிப்படையாக அன்றி, குறிப்பானே பிறரை இகழ்ந்து உரைத்தல் என்று கூறுவதும் உண்டு. கடுஞ்சொல் சுடுசொல்லாகும். இன்சொல் இனிது பயக்கவும், வன்சொலை ஏன் வழங்குதல் வேண்டும்? ‘இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாது’ என்பது நன்னெறி.

தொடர்வது, காலன் வருகுவன்; உறுதி என்பதாகும். வாழ்வாவது மாயம்; உடல் மண்ணாவது திண்ணம் என்பர் அருளாளர். பழம் புலவர் ஒருவர் நமது உடலத்தை மரத்துடன் ஒப்பிடுகின்றார்; காதல், கழிப்பு என்பன அதன் கிளைகளாம். கிளைகளில் துன்பம் என்னும் பூ பூக்குமாம்; பூவிலே இடும்பை – வறுமை என்னும் காய் காய்க்குமாம்; அக்காய் கனிந்து மரணமாகுமாம். என்றோ கூற்றுவன் வருவான். நாலடியார் நகைச்சுவை கலந்து ‘ம்ம்ம்.... இன்று கொல்! அன்று கொல்! என்று கொல் எண்ணாது பின்றையே நின்றது கூற்றம்’ என்று பேசுகிறது. (இன்று – இன்றைக்கோ?; அன்று – நாளைக்கோ?; என்று – என்றைக்கோ?; பின்றை – பின்னே) அப்பர் சுவாமிகள் ‘தாளாது அறஞ் செய்மின்’ என்கிறார்.

இனி பாடலை நோக்குவோம்.

“பெருங்குணத்தார்ச் சேர்மின்; பிறன்பொருள வெளவன்மின்;
கருங்குணத்தார் கேண்மை கழிமின்; - ஒருங்குணர்ந்து
தீச் சொல்லே காமின்; வருங்காலன் திண்ணிதே
வாய்ச் சொல்லே அன்று வழக்கு”

பெரியாரைச் சேர்ந்து, பிறன் பொருளை விலக்கி, தீயருடன் நண்புக்கொள்ளாது, தீச்சொல் பேசாது, நிலையாமையை நினைந்து அறஞ்செய்து வாழ்வோம். (தொடரும்)

–சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப் பாடல் திரட்டில் இனிப்பான பாடல்கள்

ஒரு காலத்தில் புலவர்களுக்கு உரைநடை எழுதுவதைவிடக் கவிதை எழுதுவது இலகுவாக இருந்தது. இன்றும் கூட உரைநடை எழுதுவதிலும் பார்க்க வேகமாகக் கவிதை எழுதும் ஆற்றல் வாய்ந்தோர் நம்மத்தியில் வாழ்கிறார்கள். அதற்குக் காரணம் கவிதை ஆற்றினைப் போல் அமைந்திருப்பதே ஆகும். நீந்தத் தெரிந்தவன் ஆற்றில் இறங்கி விட்டால் ஆற்றின் வேகம் அவனை விரைந்து நீந்தத் தூண்டும். அதே போலத்தான் இயல்பில் கவிதை ஆற்றல் வாய்ந்த ஒருவன் மனத்தில் பாடலின் முதல் அடி தோன்றிவிட்டால் மிகுதி அடிகளைப் பாடுமாறு அந்தக் கவிதை அடியே அவனைத் தூண்டும். அவனை இழுத்துச் செல்லும் என்று கூறினும் மிகையாகாது. அந்த நேரத்தில் அவனால் பாடாமல் இருக்க முடியாது.

அரசர் அவையிலும், தெருவிலும், திண்ணையிலும், கிராமத்திலும் நகரத்திலும் என்று பல இடங்களிலும் பல வேளைகளிலும் இயல்பாகக் கவித்துவம் வாய்க்கப் பெற்றோர் பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. அந்த நேரத்தில் அவர்களுக்குள்ளிருந்து எழுந்த தூண்டுதலினால் - பாடாமல்இருக்கமுடியாமையினால் - அவர்கள் பாடிய பாடல்களில் பெரும் பாலானவை கற்பனைத் தேனில் ஊறிக்கனிந்த கனிகளாகும். அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

## ஔவையார் பாடல்

'இம்' என்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும் 'அம்' என்றால் ஆயிரமும் பாடும் புலவர் விரிசையைச் சேர்ந்தவர் ஔவையார். இவருடைய பாடல்கள் அனைத்துமே கற்பனை வளமும்கருத்தாழமும் வாய்ந்தவை. ஔவையார் பாடலில் பல வெண்பா யாப்பில் அமைந்தவை.

வெண்பாவுக்கு எத்தனையோ தனிச்சிறப்புக்கள் உண்டு. வெண்பாவின் உயிர் நான்கடியிலும் இருந்தாலும் கூட நான்காவது அடியில் ஈற்றடியில் உயிர்க்குணம் மிகுதியாகத் தோன்றும்.

சிறுவர்கள் குறும்பாகச் சில சமயங்களில் பல்லியின் வாலை வேறாகத் துண்டாடி விடுவார்கள். அந்த நேரத்திற் பல்லி ஓடிவிடும். துண்டாடப்பட்ட பல்லியின் வால் தனித்துக் கிடந்து துடிக்கும். அதில் துடிக்கும் தன்மை புலப்படும்.

வெண்பா என்னும் பல்லியின் வாலும் - அதாவது ஈற்றடியும் அத்தகையதே. ஈற்றடி தனித்து நின்றும் உயிர்க்குணம் காட்டும். தனித்து நின்றும் பொருள் தரும்.

ஔவையாரின் பாடல் ஒன்றின் ஈற்றடி "பொற்றாலியோடு எவையும் போம்" என்பதாகும்.

இந்த ஈற்றடியின் கருத்து பொன்னால் செய்யப்பட்ட தாலியினையுடைய மனைவி இறந்துவிடும் போது ஓர் ஆண்மகனின் எல்லா நலன்களும் நீங்கிவிடும் என்பதாகும்.

## விருந்தோம்பல்

"இருந்தோம்பி இல்வாழ்தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பது திருக்குறள். இல்லறத்தில் இருப்பது எதற்காக என்று கேட்டால் விருந்தோம்புவதற்கு என்கிறார் வள்ளுவர். உரையாசிரியர் பரிமேலழகரோ "வேறகாத அன்புடை இருவர் கூடி அல்லது செய்யப்படாமையின்" என்கிறார். எனவே விருந்தோம்பல் மனைவி இல்லாதவன் செய்யமுடியாத அறமாகும். எனவேதான் ஔவையார் பொற்றாலியோடெவையும்போம் என்றார்.

## மங்கல கருமங்கள்

திருமண வைபவத்தில் முன்னின்று உபசரிக்கவோ தேங்காய் அடிக்கவோ அறுகரிசியிட்டு ஆசீர்வாதம் செய்யவோ மனைவியை இழந்தவன் தகுதியற்றவனாகி விடுகிறான். சமூக அந்தஸ்தில் என்னதான் பெரியவனாக இருந்தாலும் மங்கல கருமங்கள் பலவற்றுக்குத் தகுதி அற்றவனாகி விடுகிறான். எனவேதான் ஔவையார் சொன்னார் பொற்றாலியோடு எவையும்போம் என்று.

## மனைக்கு விளக்காகிய வாணுதல

சங்க இலக்கியத் தொடர் ஒன்று மனைவியை வீட்டின் விளக்கு என்கிறது. விளக்கு அணைந்து விட்டால் வீட்டில் ஒரே இருள்தான். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட வாழ்வில் மனைவி இறந்து விட்டால் கணவனைத் துன்ப இருள் வீட்டில் எதிர்பார்க்கும். தொலைவிடம் சென்றாலும் வேற்றூர் சென்றாலும் வீடு திரும்புமாறு அடிக்கடி தூண்டும் நினைவைத் தருபவள் மனைவியே! கணவனின் துன்பங்களில் பங்கு கொள்ள - கணவன் வாழ்வில் நம்பிக்கை ஏற்பட - ஆதாரமாக இருப்பவள் மனைவியே! எனவேதான் பொற்றாலி யோடெவையும் போமென்றார்.

புலவர்
ம.பார்வதிநாதசிவம்

இந்த ஈற்றடியைக் கொண்ட வெண்பாவின் முதல் அடியில் 'தாயோடு அறுசுவையும்போம்' என்றார். தாயை இளம்வயதில் இழந்து பிறர் தயவில் வாழும் சிறுவர்களுக்கு இந்தத் தொடர் மிக எளிதாக விளங்கும்.

'தந்தையோடு கல்விபோம்' என்றார் அதனைத் தொடர்ந்து. தந்தை இறக்கும் போது ஒருவன் கல்வி வசதிகளை எல்லாம் இழந்து விடுகிறான்.

இவ்வாறே இரண்டாம் அடியில் 'சேயோடுதான் பெற்ற செல்வம்போம்' என்றவர், மூன்றாம் அடியில் 'வாழ்வு உற்றார் உடன்போம்' என்றும் 'உடன் பிறப்பால் தோள்வலிபோம்' என்றும் கூறியவர் இவை எல்லாவற்றிலும் பெரியது, கொடியது மனைவியின் இழப்பு என்பதைக் கூறும் பொருட்டுப் பொற்றாலியோடெவையும்போம் என்றார்.


"பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்ற வள்ளுவரின் குறளின் கருத்தாழத்தைத் தன்பாற்கொண்ட ஔவையாரின் ஈற்றடியைக் கொண்ட முழுப் பாடல் இது.

*தாயோடு அறுசுவைபோம் தந்தை*
*யொடு கல்விபோம்*
*சேயோடுதான் பெற்ற செல்வம்*
*போம்- ஆயவாழ்வு*
*உற்றார் உடன்போம் உடன்*
*பிறப்பால் தோள்வலிபோம்*
*பொற்றாலியோடெவையும்போம்.*

## இல்லறத்தில இன்பம்பெற ஒப்பிலா மணிப்புலவர் அறிவுரை

குடும்பம் என்பது சோலை போன்றது. சோலையில் இனிய மலர்கள் பூத்துக்குலுங்க வேண்டும். சோலையில் இனிய ஒலிகள் ஒலிக்க வேண்டும். எந்தவகைத் துன்பமும் அணுகாத, இன்பமே அணுகும் இடமாக இருக்க வேண்டும். அங்கே தென்றல் வீச வேண்டும். புயல் வீசக்கூடாது. ஆனால் நடைமுறையிற் பல குடும்பங்களிலும் புயல் வீசுவதைத்தானே காண்கிறோம்!

ஆடவரிற் பலர் வீட்டில் எந்த நேரமும் சுடுசொற்களையே பயன் படுத்துகின்றனர். நல்ல உள்ளம் உள்ளவர்களுக்குக் கூட இன்சொற் பேசத் தெரிவதில்லை. பெண்கள் கணவனிடம் நகையை எதிர்பார்க்கிறார்கள். பட்டு உடையை எதிர்பார்க்கிறார்கள் என்பது எல்லாம் சரிதான். ஆனால் இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஆண்களிடமிருந்து இதமான - இனிமையான வார்த்தைகளைத்தான் எதிர் பார்கிறார்கள். இதை அறிந்தவர் ஒப்பிலாமணிப்புலவர் என்ற சான்றோர். இல்லறத்தில் இன்பம்பெற இவர் கூறும் அறிவுரை "மாதர்க்கு இதம்" என்பதாகும்.



இல்லறம் இன்பமாக விளங்குவதற்கு இதமான சொற்களும் பாராட்டுக்களும் இன்றியமையாதனவாக அமைகின்றன. இதனால் மாதர்க்கு இதம் என்று ஒப்பிலாமணிப் புலவர் சொன்னார்.

## இலக்கியத் தலைவன்

கூடலூர்க்கிழார் என்ற புலவர் மாதருக்கு இதமாகப் பேசும் தலைவனைக் குறுந்தொகையிற் காட்டுகிறார்.

தலைவி ஒருத்தி சமையல் செய்கிறாள். புளிக்குழம்பு வைக்கிறாள். அந்த வீட்டில் சமைக்கத் தெரிந்த எத்தனையோ பேர் இருந்தும் தலைவன் மீது கொண்ட அன்பு காரணமாகத் தலைவி தானே சமைக்கிறாள். தன்கையாற் சமைத்து கொடுத்தால் தான் அவளுக்கு நிம்மதி; அவளுக்கு மகிழ்ச்சி.

புளிக்குழம்பு பதமாக இருக்க வேண்டும் என்று தன்கையாலே தயிரைப் பிசைகிறாள். அவளுடைய அழகிய கண்ணை அடுப்பிலிருந்து எழும் புகை வருத்திய போதும் அவள் கவலைப்படவில்லை. அவளுக்கு களைப்போ சோர்வோ தெரியவில்லை. அவள் நோக்கம் முழுவதும் கணவனின் நாவுக்குச் சுவைதரும் விதத்தில் குழம்பு அமைய வேண்டும் என்பதே. அவளது நோக்கம் போலவே குழம்பும் சுவையாக அமைந்தது.

கணவன் உணவு உண்ண வந்தான். அவள் உணவை அன்பும் கலந்து படைத்தாள். உண்ட கணவன் புளிக்குழம்பின் சுவை குறித்து "இனிது" என்றான். அந்தப் பாராட்டுரை அவளை உச்சிகுளிரச் செய்தது. பெருமகிழ்வடைந்தாள். மாதருக்கு இதம் என்பது சங்கத் தலைவனுக்கு இயல்பாக அமைந்த ஒன்றாக இருந்தது.

மாதர்க்கு இதம் என்ற ஒப்பிலா மணிப் புலவரை விளங்கியவர்கள், இல்லறத்தில் அன்பாக வாழ்வதை விளங்கியவர்கள் அடிக்கடி மனைவியைப் பாராட்ட வேண்டும்.

வீட்டை எப்படிச் சுத்தமாக வைத்திருகிறாய் என்று பாராட்ட வேண்டும். அவளுடைய சமையலைப் பாராட்ட வேண்டும். அவளுடைய உடையை - அழகை - பாராட்ட வேண்டும்.

அவள் பிள்ளைகளை நல்லவர்களாக வளர்க்கும் திறனைப் பாராட்ட வேண்டும். அவள் விருந்தினரை உபசரிக்கும் பண்பைப் பாராட்ட வேண்டும். இப்படி வஞ்சகமின்றிப் பாராட்டி இன்சொற்கூறுதலையே ஒப்பிலாமணிப் புலவர் மாதர்க்கு இதம் என்றார். கூடலூர்கிழார் அவ்வாறு மாதர்க்கு இதம் கூறும் சங்ககாலத் தலைவனைக் காட்டினார்.

வீட்டில் இன்பமாக வாழ்வதற்கு "மாதர்க்கு இதம்" என்ற மந்திரத்தைக் கூறிய ஒப்பிலாமணிப் புலவர் வெளியில் நல்ல முறையில் வாழ்வதற்கும் சில மந்திரங்களைக் கூறியிருக்கிறார்.

*'கவிவாணர்க்குச் சால*
*வணக்கம்'*
*'குருநாதர்க்கு நீதியோடு*
*ஆசாரம்'*
*'நண்பின் நயந்தவர்க்குக்*
*கோதற்ற வாசகம்'*
*'பொய்க்குப் பொய்'*
*'கோளுக்குக் கோள்'*
*'அறிவிலாதார்க்கு இரட்டி'*

என்பன அவை.

இத்தொடர்களின் பொருள், கவிஞர்க்குப் பணிவு காட்டுதல், குரு நாதருக்கு மெய்யன்புடன் வழிபாடு செய்தல், நட்பிற் சிறந்தவர்களுடன் குற்றமற்ற தன்மையில் அன்புடன் பேசிப் பழகுதல், பொய்யனுக்குப் பொய்யனாதல், புறங்கூறுவோனுக்கு புறங்கூறுவோனாதல், அறிவிலாதவர்களிடத்து அவரைப் போன்று இரண்டு மடங்கு அறிவில்லா மூடன்போல் இருத்தல்- அறிவுடையோர் செய்யக் கூடிய சிறந்த செயல்கள் ஆகும்.

இத் தொடர்களின் முழுப்பாடல்:

*மாதர்க்கு இதம் கவிவாணர்க்குச்*
*சாலவணக்கம் குரு*
*நாதர்க்கு நீதியோடு ஆசாரம்*
*நண்பின் நயந்தவர்க்கு*
*கோதற்ற வாசகம் பொய்க்குப்*
*பொய் கோளுக்குக்கோள அறிவி*
*லாதவர்க்கு இரட்டி அறிவுடையோர்*
*செய்யும் ஆண்மைகளே.*

## விருந்தினரை உபசரித்தல்

விருந்தோம்பலின் சிறப்பைத் திருவள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்திற் கூறினார். தனிப்பாடல் திரட்டில் ஒருபாடல் விருந்தினரை உபசரிக்கும் முறையை விளக்கிக் கூறுகிறது.

ஒருவர் விருந்தினராக நம்மிடம் வந்தால் அவரைக் கண்டது குறித்து மகிழ்ச்சி காட்ட வேண்டும். உபசாரமாக நல்ல இனிய சொற்களைப் பேச வேண்டும். அன்புகனிந்த முகத்தோடு அவரைப் பார்க்க வேண்டும். வீட்டிற்கு வரும் போது வாருங்கள் என்று வரவேற்க வேண்டும். இருக்கையில் இருந்தால் எழுந்து வரவேற்க வேண்டும். விருந்தினருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய சொற்களைக் கூறவேண்டும். அன்புடன் உண்டி கொடுத்து உபசரிக்க வேண்டும் விருந்தினர் "போய் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்படும் போது அவர் பின்னே சிறிது தூரம் செல்ல வேண்டும் என்ற கருத்தைக் கூறுகிறது.

*விருந்தினனாக ஒருவன் வந்து*
*எதிரின்*
*வியத்தநன்மொழி இனிது*
*உரைத்தல்*
*திருந்துற நோக்கில் 'வருக' என*
*உரைத்தல்*
*எழுதல் முன்மகிழ்வன செப்பல்*
*பொருந்துமற்று அவன்தன்அருகுற*
*இருத்தல்*
*'போம்' எனில் பினசெல்வதாதல்*
*பரிந்துநன்முகமன் வழங்கல்*
*இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே!*

காலங்கள் மாறலாம். புறநாகரிகங்கள் மாறலாம். விஞ்ஞானம் பல மாற்றங்களைக் கொண்டு வரலாம். எனினும் மனிதப்பண்பு, மனிதநேயம் மாறக்கூடாது என்பதே தனிப்பாடல் திரட்டின் சாரமாக உள்ளது.

கற்பனைநயம், பொருள்நயம், அணிநயம், நகைச்சுவை முதலிய சுவைகள் அனைத்தையும் தன்பாற் கொண்ட தனிப்பாடல் திரட்டில் இனிப்பான பாடல்கள் பலவுண்டு. *

# பாலரின் உடல்நலமும் விளையாட்டும்


மனிதரின் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளையும், சூழலையும் அமைத்தற்கு, சாதாரண கல்வியைப் போன்று தேகப்பியாசக் கல்வியும் உதவுகின்றது. ஒருவன் சிறந்த முறையில் சீவிப்பதற்கும், அரிய சேவைகள் செய்வதற்கும் பக்குவமுடையோனாதலுக்கு இக் கல்வி அவசியமானது. இது அவயங்களின் சக்தியை விருத்தி செய்கிறது. தசைநார்களுக்கு வலிமையைக் கொடுக்கிறது. இதனைச் சரியான முறையில் கையாளுவதனால் தேகாரோக்கியமும் திருப்தியும் ஏற்படுவதோடு, சரியான மனோநிலையும் நல்வாழ்வும் உண்டாகும். இவற்றால் சந்தோஷம், வல்லமை, ஒழுக்கம் என்பன கிட்டுகின்றது.

-சந்திரா. தனபாலசிங்கம்-
(பயிற்றப்பட்ட பாலர் ஆசிரியை)

உடற்கல்வியானது ஒருவனை உயர்ந்த வாழ்வு வாழவும், சிறந்த கடமையுணர்வுடன் கடமையாற்றவும் வழியமைக்கிறது. புத்திக் கூர்மைக்கும் இக்கல்வியே உறுதுணை புரிகிறது.

கூன் முதலாகிய உறுப்புச் சிதைவுகளுக்கும், கண்பார்வைக் கோளாறுகள், கூச்சவுணர்ச்சி, ஒழுங்கான தசையமைப்பில்லாத உடல் இவை போன்ற உடற்குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உடற் கல்வியும், விளையாட்டும் உறுதுணை புரிவதை அவதானிக்கலாம்.

தேக ஆரோக்கியமும், சரியான மனோ நிலையும், வல்லமை, ஒழுக்கம் என்பனவும் பாலர்களின் கல்விக்கு முறையான அத்திவாரமாகக் கொள்ளப்படத்தக்கன. சரியான உடற்பயிற்சியுடன் கதையை, ஒட்டிய விளையாட்டுக்கள், பாலர்களுக்கு அறிவையும், நடிப்புத் திறனையும், தேகப்பயிற்சியையும் கொடுக்கின்றன. பாலர்கள் ஏதைப் பார்க்கின்றார்களோ அதன்படி நடக்கும் சுபாவமுள்ளவர்களாய் இருப்பார்கள் அவர்களுக்கு பாடசாலையில் கற்பிக்கப்படும் கதைகளை நடிக்கச் செய்வதால் அச்சுபாவத்தைப் பின்பற்ற வைக்கலாம்.



ஒவ்வொரு பிள்ளையும் கதையை ஒட்டிய விளையாட்டுக்களை நடிப்பதனால் தன்னைச்சுற்றியுள்ள சூழலின் தன்மையை நன்கு அறிந்து கொள்கின்றது. வீடு, அயல், பாடசாலை என்னும் இடங்களில் என்ன நடக்கிறதோ அதையேதான் அவர்களும் நடிக்கின்றனர். பாலர்களுடைய கல்விக்கு காலத்துக்கேற்ற விளையாட்டைத் தேர்ந்தெடுத்து நடிக்க வைப்பது நல்ல பயனைக் கொடுக்கிறது. பிள்ளைகள் சுறுசுறுப்பாகவும், தன்னிச்சையாகவும் இயங்குவதற்கு இந்த நடிப்பு மூலக் கல்வி உதவி செய்கிறது.

பாலர்களது விளையாடும் இயல்பினை கல்விப்பக்கம் இழுத்து நல்வழிப்படுத்தலாம். விளையாட்டு மூலம் கல்வி விருத்தி செய்வது சுலபம். ஓடி விளையாடுவது, பந்து விளையாட்டு போன்ற விளையாட்டுக்கள் அவரது உடல், உள ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றன. அவரவர் புத்திக் கூர்மைக்கு ஏற்பவும் பலவகையான விளையாட்டுக்கள் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன.

ஒரு குழந்தையானது தான் பிறந்தவுடனேயே தன்கையைக் காலை அசைத்து இயல்பாகவே விளையாடத் தொடங்குகிறது எனலாம். அப்படிப்பட்ட குழந்தை வளரும் பருவத்தில் பல்வேறுபட்ட விளையாட்டுக்களை விரும்பி விளையாடத் தொடங்குவதில் அதிசயம் எதுவும் இல்லையென்றுதான் கூற வேண்டும்.

விளையாட்டு மூலம் பாலர்களுக்கு ஓர் ஒழுங்கு நிறைந்த தன்மையை உணர முடிகிறது.

உதாரணமாக வட்டப் பந்தாட்டம் என்னும் விளையாட்டை எடுத்துக் கொள்ளலாம். இவ்விளையாட்டுக்கு ஐந்து அல்லது ஆறு பந்துகள் தேவை. இருவருக்கிடையில் இரண்டு அல்லது மூன்று அடி இடைவெளி விட்டு பிள்ளைகள் வட்டமாக நிற்க வேண்டும். ஒருவன் பந்துகளை ஒன்றன்பின் ஒன்றாக - ஊதுகுழல் ஊத - கடத்துவான். ஒழுங்கின் பிரகாரம் பந்துகள் தரையில் விழாமல் துரிதமாய்க் கடத்த வேண்டும். பந்தைத் தவற விட்டவர், தவறவிடச் செய்தவர் உட்பட இருவரும் ஆட்டத்திலிருந்து விலகிக் கொண்டு வர வேண்டும். கடைசிவரை விலகாதவரே வெற்றி வீரராவான்.

இவ்விளையாட்டில் ஒவ்வொரு பிள்ளையும் சம அளவில் இடைவெளி விட்டு நிற்கின்றனர். ஊதுகுழலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உடனடி

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் கொடியேற்றம்; யாருக்குக் கொண்டாட்டம்?

**ஆதிகோவிலடி. குமார்.**
புருஷனை மிரட்டும் பெண்கள், திருடனையும் தாங்களே மிரட்டலாம்தானே?
☺ **மிரட்டலாம்தான். ஆனால் திருடன் பயப்படுவது அவன் மனைவிக்குத்தானே. அடுத்தவன் மனைவிக்கு அல்லவே!**

✿ ✿ ✿

**சங்கானை. எஸ்.சுரேஸ்.**
பேய்களை நம்பும் ஆடவர்களும் இருக்கின்றார்களா?
☺**இருக்கின்றார்களாவா? நம்பித்தானே நம்மவர்கள் பலர் குடித்தனம் செய்கின்றார்கள்.**

✿ ✿ ✿

**நெல்லண்டை. க.சிவம்.**
அரசியல்வாதிகளில் அரைவாசிப்பேர் முட்டாளாக இருக்கின்றார்களே?



☺ **அப்படி என்றால் மிகுதி அரைவாசிப் பேர் புத்திசாலி என்கின்றீரா? நீரும் ஓர் அரசியல்வாதி போலல்லவா கேள்வி கேட்கின்றீர்!**

✿ ✿ ✿

**சங்கத்தார்வயல். செந்தூரன்.**
கரும்பில் இனிப்பது அடிப்பகுதி. காதலில் இனிப்பது....!
☺ **அதே பகுதிதான்!**

✿ ✿ ✿

**யாழ். ப.வானதி.**
எனக்குத் தெரிந்த டாக்டர் என் கையில் நாடித் துடிப்பைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்க்க முயல்கின்றாரே?
☺ **துடிப்பை நாடி அலைகிறார் போலும்! எச்சரிக்கையாய் இருங்கள்!**

✿ ✿ ✿

**இடைக்காடு. சுபா.**
ஓர் ஆண் திருமணம் செய்வதற்கு என்ன தகுதி வேண்டும்?
☺ **சிறந்த ஆனைப்பாகனாக இருக்க வேண்டும்.**

✿ ✿ ✿

**நல்லூர். சிவா.**
ஆஸ்பத்திரியில் பொறுப்புள்ளவர்களும் வழி தவறுகின்றார்களே?
☺ **றோட்டில் மட்டுமா விபத்து? வார்ட்டிலும் அல்லவா நடக்கின்றது!**

☺ **அத்தைக்கு மீசைமுளைத்தால் எப்படி இருக்குமோ அது போல இருக்கும்.**

✿ ✿ ✿

**கோண்டாவில். அ.நிஜா.**
வித்தூ! நீங்கள் அடைய விரும்புவது?
☺ **விடுதலை.**

✿ ✿ ✿

**நெல்லியடி. து.தவம்.**
பெண்கள் தமது சுமையை ஏன் தாமதமாய் உணருகின்றார்கள்?
☺ **அசமந்தமாய் இருப்பதால்.**

✿ ✿ ✿

**யாழ். ஆர்த்தியன்.**
என்னவள் வயதில் என்னிலும் மிகமிக இளையவளாய் இருப்பது தவறா?
☺ **நீர் மிகமிக இளைத்தவராக - இளைப்பவராக - இல்லாவிட்டால்சரி.**

✿ ✿ ✿

**கட்டுடை. ஆ.வத்சலா.**
வயதில் குறைந்த பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டும் என்பது எழுதாத சட்டமா?
☺ **எப்போது பெண்கள் (வயதில்) கீழே இருப்பதுதான் நல்லது!**

✿ ✿ ✿

**தட்டாதெரு. எஸ்.அழகு.**
காதலிக்குப் பரிசு கொடுக்கலாமா?
☺**நீங்கள் கொடுப்பது 'பரிசுகேட்டை' ஏற்படுத்தாவிட்டால் சரி.**

✿ ✿ ✿

**கட்டுடை. கே.சிவன்.**
துணிவோடு காதலித்தேன். தற்போது துணிவின்றி திருமணத்திற்குப் பின்நிற்கின்றேன். என்ன செய்வது?



☺ **இனிமேல் கைகட்டி, வாய் பொத்தி நிற்பதுதானே மிச்சம். அதற்கு ஏன் துணிவும்; துணியும்!**

**கொண்டவர்கள்.**

✿ ✿ ✿

**நாவற்குழி. எஸ்.சுகி.**
வித்துவானே! உமக்கு வெட்கம், ரோசம், மானம் ஏதும் உண்டா?
☺ **நான் தாலி கட்ட முன்னர் இருந்ததாக நினைப்பு.**

✿ ✿ ✿

**வதிரி. நளினி.**
காதல் என்ன நிறம்? கூறமுடியுமா?
☺ **பல காதலர்கள் பச்சை, பச்சையாகச் செய்வதைப் பார்த்தால் பச்சை நிறமோ என்று தோன்றுகின்றது.**

✿ ✿ ✿

**நவாலி. சுபத்திரன்.**
வயதானவர் வீட்டில் இளம் பெண்ணைத் தங்க விடலாமா?
☺ **'தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?'**

✿ ✿ ✿

**குருநகர். எஸ்.முருகேசு.**
மாப்பிள்ளைக்கு என்ன லட்சணங்கள் அவசியம்?



☺ **தீராத விளையாட்டுப்பிள்ளையாக இருந்தால் போதும்!**

☺ **'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம'**

✿ ✿ ✿

**நீர்வை. கணேஸ்.**



மீண்டும் டெண்டுல்கர் இந்திய அணியின் தலைவராகி யுள்ளாரே?
☺**இந்திய அணி இருக்கும் நிலையில் இதைவிட வேறு வழி......?**

✿ ✿ ✿

**இணுவில். அ.மனோ.**
வித்தூ! காதலிப்பதற்கு எதையும் தாங்கும் இதயம் மட்டும் இருந்தால் போதுமா?
☺ **'எதையும' தாங்கும் உடலும் வேண்டுமே!**

✿ ✿ ✿

**மீசாலை. அஜந்த்.**
எதிர்கால இளைஞர் சமூகம் திருந்துமா?
☺ **போகிற போக்கைப் பார்த்தால் நமது இளைஞர்களை விட 'கிழைஞர்கள' தான் ஆட்டம் போடுவார்கள் போல் தோன்றுகின்றது.**

✿ ✿ ✿

**நல்லூர். ம.வரதன்.**
'நல்லூரில் கொடியேற்றம்; நமக்கெல்லாம் கொண்டாட்டம்' என்கிறேன் நான்! நீரென்ன சொல்கின்றீர்?
☺ **நாக்கைத் தொங்விட்டுக் கொண்டு திரிபவர்க்கெல்லாம் கொண்டாட்டம்; பக்தர்களுக்கெல்லாம் திண்டாட்டம்.**

✿ ✿ ✿

**நவாலி. பி.தீபன்.**
சில கனவான்கள் வீட்டில் வேலைக்காரி வைத்திருப்பதன் காரணம் என்ன?
☺ **வேலையைச் செய்வதற்குத்தான்!**

✿ ✿ ✿

# வித்துவான் பதில்கள்

✿ ✿ ✿

**தும்பையூர். சு.ரஜினி.**
'தோலிருக்க சுளை விழுங்குபவர்கள்' குறித்துக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?
☺**கொழும்பிலிருந்து கப்பலில் பொருள்களைத் தருவிப்பவர்களைக் கேட்டால் உங்களுக்கு நன்கு விளக்கம் தருவார்.**

✿ ✿ ✿

**யாழ். ஜோ.டிமெல்.**
'கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர்' என்றால், காதல்........?
☺ **'விதை' என்று கூறலாம். விதை முளைத்தால்தானே பயிரைப் பற்றிய கவலை எல்லாம்!**

✿ ✿ ✿

**நீராவியடி. க.பாலு.**
இவ்வளவு வலிமையுள்ள ஆண்கள், மெலியரான பெண்களிடம் அடங்குவது ஏன்?
☺ **அடக்கும் இரகசியம் அவர்களுக்குத் தெரியும். 'ஆனை வேகம் அடங்குவது அங்குசத்தில்!' என்பது உமக்குத் தெரியாதா?**

✿ ✿ ✿

**சண்டிலிப்பாய். க.வைத்தி.**
பல இடங்களில் வழிகாட்டிகளே வழி தவறுகின்றார்களே?



☺ **'பங்கர்கள்' பற்றிய பயம் இல்லாமல் போனதும் ஒரு காரணம்.**

✿ ✿ ✿

**வேலணை. ப.சந்திரன்.**
'உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டது வீண்' என்று சில உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் கூறித்திரிவது குறித்து.......?

**நவாலி. கே.பிரதீபன்.**
வித்துவான் ஸார்! ஒருத்தி எப்போதும் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றாளே. அதற்கு என்ன அர்த்தம்....?
☺ **நீர் அழுவதற்கு வலை விரிக்கப்படுகின்றது என்று அர்த்தம்.**

✿ ✿ ✿

**வண்ணாங்கேணி. எஸ்.மைக்கல்.**
ஒரு நாள் அறிமுகத்துடன் காதல் கடிதம் எழுதும் பெண்கள் குறித்து யாது நினைக்கின்றீர்?
☺**நேரில் அறிமுகமில்லாமலேயே 'இன்ரநெற்' மூலம் காதலிக்கும் கலிகாலம் ஐயா இது.**

✿ ✿ ✿

**தர்மக்கேணி. கௌதமி.**
தமது பெண்பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி, கட்டாயத்தின் பேரில் திருமணத்தை நடத்தும் பெற்றோர்கள் குறித்து உங்கள் கருத்து.....!
☺ **கல்வியை நிறுத்தி கலவிக்கு அனுப்புகின்றார்கள்!**

✿ ✿ ✿

## இவ்வார ஜோக்

இளம் தம்பதிகள் காரில் பயணம் செய்துகொண்டிருந்தனர். காரை ஓட்டிக்கொண்டிருந்த கணவன் ஒரு கையை 'ஸ்டியரிங்கி'லும் மறுகையை மனைவியின் தோளிலும் போட்டு அவளை அணைத்தவாறே காரை செலுத்திக்கொண்டிருந்தான். தூரத்தில் வரும்போதே இதைக் கவனித்த பொலீஸ்காரர் ஒருவர் காரை மறித்தார்.

"காரைச் செலுத்தும் போது இரு கைகளையுமே பயன்படுத்த வேண்டும்" - என்றார் கண்டிப்புடன்.

"ஆம் சரிதான். இருகையையும் பயன்படுத்தினால் கார் 'ஸ்டியரிங் கைப்' பிடிப்பது யாராம்?" - என்று அப்பாவித்தனமாகக் கேட்டான் கணவன்.

# மாப்பிள்ளைக்குத் தேவையான இலட்சணங்கள் எவை?

✿ ✿ ✿

**தட்டாதெரு. வி.சுகந்தன்.**
உள்ளூராட்சி சபைகளில் பட்டியல் மூலம் ராஜாவாகிய பலர் 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று ஓடித்தப்புகின்றார்களே?
☺ **'ஆடிக் காத்தில் அம்மியே பறக்கும் போது குழவிகள் சும்மாவா இருக்கும்?'**

✿ ✿ ✿

**நவாலி. பி.தீபன்.**
நாட்டியம் கற்ற பெண்ணைத் திருமணம் புரியலாமா?
☺ **உமது நட்டுவாங்கத் திறமையைப் பொறுத்தது அது.**

✿ ✿ ✿

**உடுப்பிட்டி. எஸ்.மகிந்தராஜ்.**
பெண்களுக்கு தாடி முளைத்தால் எப்படியிருக்கும்?



✿ ✿ ✿

**யாழ். து.ஜெயா.**
பல இடங்களில் வீதித் தடைகள் அகற்றப்படுகின்றனவே? காரணம் என்ன? வெளிநாட்டவர்கள் யாரேனும் இங்கு விஜயம் செய்யவுள்ளனரா?
☺ **சோழியன் குடுமி சும்மா ஆடாது. பொறுத்திருந்து பார்ப்போமே!**

✿ ✿ ✿

**மாவடி. சுகந்தன்.**
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை கொண்ட பெண்ணைத் தேடுகிறேன். கிடைப்பாளா?
☺ **முயல் கொம்பு, குதிரை முட்டை போன்றவற்றைத் தேடுகின்றீர் போலும். என் ஆழ்ந்த அனுதாபங்கள்!**

✿ ✿ ✿

**நவாலி. மதுமிதா.**
இடியட் வித்துவானே!
கிட்டாதாயின் வெட்டென மறுப்பதற்கு காதலென்ன கனவா? சரியான 'பித்து'வானாகி விட்டீரே?
☺ **எட்டாக்கனிக்கு கொட்டாவி விடுவது நூனவு என்றால் விட்டுக் கொண்டே இருங்களேன்!**

✿ ✿ ✿

**வடமராட்சி. து.தவம்.**
பெண்களின் அழகு எதில் உள்ளது?
☺ **பார்வையில்! (பார்ப்பவரின்)**

✿ ✿ ✿

**நீர்வேலி. ம.மஞ்சுளா.**
தானும் கெட்டு பிறரையும் கெடுப்பவர்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?
☺ **தன்னைப் போல் பிறரையும் நினைக்க வேண்டும் என்பதைப் புரிந்து**

# ஓர் ஆண் திருமணம் செய்ய என்ன தகுதி அவசியம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்.

IX பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு.


## விடை தெரியுமா?

1. 262,144
2. 5,6,7,8,9
3. 900
4. 4
5. அவன் வேலைசெய்த அறுபது நாள் காலத்தில் ஐம்பது நாள்கள் வேலைக்குச் சென்றிருக்கின்றான்.

## வழிகூறுங்கள்?

முதலில் இரு சிறுவர்களும் அக்கரைக்குப் போனார்கள். ஒருவன் இறங்கிக் கொள்ள மற்றவன் இக்கரைக்கு வந்தான். வாய்ப்பாட்டுக்காரர் படகில் மறுகரை போனார். அங்கிருந்து சிறுவன் படகோடு இக்கரைக்குத் திரும்பினான். மீண்டும் சிறுவர்கள் இருவரும் மட்டும் அக்கரை போனார்கள். ஒருவன் இறங்கிக் கொள்ள ஒருவன் மட்டும் இக்கரைக்குத் திரும்பினான். மிருதங்கக்காரர் படகில் போனார். இதேமுறை அடுத்து அடுத்து கையாளப்பட்டு மூன்றாவதாக வயலின்காரரும் அக்கரை சேர்ந்தார். அங்கு இருந்த சிறுவன் அவர்களிடம் கைநிறையக் கூலி பெற்றுக் கொண்டு இக்கரைக்கு வந்தான் - தன்தோழனிடம்.

## இயலுமா?



# ஆளுமை என்றால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுகளை விருத்திசெய்ய அதிக நேரம் ஒதுக்குவர்.

* தீர்மானங்களை இவர்கள் நிதானமாகவே எடுப்பதால் தீர்மானம் தரமானதாக இருக்கும்.

## ஆளுமையை மதிப்பீடு செய்தல்

ஆளுமை என்பது உளவியல் சார்ந்தது என்பதனாலும், நபருக்கு நபர் வேறுபடுவதாலும் ஒரு நபரது ஆளுமையைத் திட்டவட்டமாக மதிப்பீடு செய்தல் கடினம். எடுத்துக்காட்டாக எந்தவொரு சராசரி மனிதனுக்கும் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள் எனக் குறித்துரைப்பது போன்று ஆளுமை தொடர்பில் பொதுமைத் தன்மையான மதிப்பீடுகளை வெளிப்படுத்த முடிவதில்லை. இருப்பினும் நடைமுறையிற் பின்பற்றப்படும் சில ஆளுமை மதிப்பீட்டுமுறைகளைப் பார்ப்போம்.

* ஆளுமை வினாக்கொத்துக்கள்:- இவ்வினாக் கொத்துக்கள் பல விடைகளைக் கொண்ட ஒரு தொகுதி வினாக்களைக் கொண்டதாக அல்லது ஆம்/இல்லை, உண்மை/பொய் என்ற அமைப்பிலான விடைகளைக கொண்ட ஒரு தொகை வினாக்களைக் கொண்டு அமையும். குறித்த நபர் இவ்வினாக்களுக்கு தெரிவு செய்யும் விடையின் அடிப்படையில் அவரது ஆளுமை மதிப்பிடப்படும்.

* அளவீடுகளை வரிசைப்படுத்தல்:- இம்முறை பொதுவாக வினாக் கொத்துக்களை அல்லது வரிசைப்படுத்தும் படிவங்களைக் கொண்டு அமையும். இம்முறையில் ஆளுமை வினாக் கொத்து முறையினைப் போலன்றி ஒருவரது ஆளுமையை இன்னொருவரைக் கொண்டு மதிப்பிடுவதாக இருக்கும். இங்கு ஒருவரது ஆளுமையை மதிப்பிடுகையில் படிவங்கள் அவரது நண்பர்களுக்கோ, கூட்டாக வேலை செய்பவர்களுக்கோ அல்லது மேற்பார்வையாளர்களுக்கோ, ஆளுமை மதிப்பீட்டு நிபுணர்களுக்கோ தரப்பட்டு ஆளுமை மதிப்பிடப்படும்.

* உத்தேசப்பரீட்சைகள்:- இதில் பல அர்த்தங்களைக் கொடுக்கக்கூடிய வடிவங்கள், உருவங்கள் போன்ற விடயங்களை ஒரு நபரிடம் காட்டி விவரிக்கும்படி கேட்கப்படும். அவரால் வழங்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் அவரது ஆளுமைப் பண்பு தகுதி வாய்ந்த உளவியலாளர் ஒருவரால் மதிப்பிடப்படும்.

## ஆளுமையை மதிப்பிடுவதிலான சிக்கல்கள்

* ஆளுமை மாற்றமடைகின்ற தொன்றாக இருப்பதால் ஒருவரது ஆளுமை பற்றிய தற்போதைய மதிப்பீடு எதிர்காலத்திற்குச் சரியாக அமைவதில்லை.

* மக்கள் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபடுவதால் ஆளுமைப்பண்பும் மாற்றமடைதல்.

* ஆளுமை மதிப்பீடு பக்கசார்பானதாக அமையுமாயின் அது தவறான முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

* ஆளுமையை மதிப்பீடு செய்ய எல்லாச்சந்தர்ப்பங்களிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவீட்டு நுட்பம் எதுவும் விருத்தி செய்யப்படவில்லை.

இதுவரை ஆளுமை என்றால் என்ன? என்பதிலிருந்து ஆளுமை தொடர்பான பல்வேறு விடயங்களையும் ஆளுமை தொடர்பாக ஓர் ஆரம்ப அறிவினை அல்லது அடிப்படைத் தத்துவங்களையும் விளங்கிக்கொண்டோம். எனவே இனி ஒருபோதும் 'PERSONALITY' என்ற பதத்தை தவறான அர்த்தத்தில் பயன்படுத்த மாட்டோமல்லவா?!

# பாலரின் உடல்.....

(XIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாகச் செயலாற்றத் தொடங்குகின்றார்கள். பந்துகள் தரையில் விழாமல் கவனித்துப் பிடிக்கப்படுகின்றன. தவறாக ஆடியவர் தாமாகவே ஆட்டத்திலிருந்து விலகுகிறார்., கடைசிவரை விலகாத வெற்றி வீரன் கதாநாயகனாகின்றான். அடுத்த தடவை தாமும் ஒரு வெற்றி வீரனாக ஆக வேண்டுமென ஒவ்வொருவரும் நினைக்கின்றனர். இவையெல்லாம் இவ்விளையாட்டில் காணப்படும் ஒழுங்கு முறைகளாகும். இவ்வொழுங்குமுறைகள் ஒவ்வொரு பாலரின் உள்ளத்திலும் வளரப் போகும் வித்தாகப் பதிவாகின்றன.

வாசிப்பு, கற்பிக்க உதவும் விளையாட்டுக்கு உதாரணமாக 'என்பை' என்னும் விளையாட்டை விளையாடலாம்.

முதல் ஒருபாலன்:- "என்னிடம் ஒரு பை இருக்கிறது!"

இரண்டாம் பாலன்:- "பையில் என்ன இருக்கிறது?"

முதல் பாலன்:- "அதில் ஒரு மாம்பழம் இருக்கிறது!"

இரண்டாம் பாலன் மூன்றாமவனிடம்:- "என்னிடம் ஒரு பை இருக்கிறது!"

மூன்றாம் பாலன்:- "பையில் என்ன இருக்கிறது?"

இரண்டாம் பாலன்:- "அதில் ஒரு கொய்யாப்பழம் இருக்கிறது!"

இது போலவே வரிசைப்பிரகாரம் விளையாடிக் கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு முறை விளையாட்டிலும் காய்கள், பழங்கள் போன்ற வெவ்வேறுவகைப் பொருள்களின் பெயர்களைச் சொல்லுமாறு தூண்டலாம். அல்லது ஓர் எழுத்தால் ஆரம்பிக்கும் வார்த்தைகளைச் சொல்லத் தூண்டலாம். உதாரணம்:- பட்டம், படம், பம்பரம், பந்து, பஞ்சு.

கதையை ஒட்டிய விளையாட்டுக்களை பிள்ளைகள் விளையாடும் போது அவர்களுக்கு நன்கு தெரிந்த கதைகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணமாகத் 'தொப்பி வியாபாரி' கதையை எடுத்துக்கொள்வோம். சிறுவர்கள் பாடசாலைக்கு அணிந்து வரும் தொப்பிகள் அனைத்தையும் மூடையாகக்கட்டிக் கொள்ளலாம். ஒரு மாணவன் தொப்பி வியாபாரி போல அம்மூடையைத் தலையில் வைத்துக் கொண்டு, "தொப்பி வேண்டுமா தொப்பி?" என்று கூவியபடி சுற்றிவர வேண்டும். அவர் தானும் ஒரு தொப்பியை அணிந்திருக்க வேண்டும். பின் அவர் களைப்பினால் ஒரு மரத்தின் கீழ் மூடையை வைத்து விட்டு சாய்ந்து உறங்குவது போல் உறங்க வேண்டும். மிகுதி மாணவர்கள் எல்லோரும் குரங்குகளாக மரத்திலிருந்து குதிப்பது போல் குதித்து இறங்கி, அந்த வியாபாரி அணிந்திருப்பது போலப் பார்த்து தாமும் ஒவ்வொரு தொப்பியாக எடுத்து அணிந்து கொள்ள வேண்டும். பின்பு மரமேறிக் குந்திக் கொண்டிருப்பது போல ஒவ்வொரு இடமாகக் குந்தியிருக்க வேண்டும். வியாபாரி கண் விழித்ததும் தொப்பிகளைக் காணாமல் அங்கு மிங்கும் தேடுவான். குரங்குகளின் சத்தம் கேட்க வேண்டும். வியாபாரி அப்போது தான் அவற்றைப் பார்ப்பது போல் பார்ப்பார். வியாபாரி, "தா....தா" என்று கேட்டுக்கையை நீட்டுவார். குரங்குகளும் "தா.....தா" என்பது போலக்கைகளை நீட்டும். வியாபாரி நன்றாக யோசிப்பார்... என்ன செய்யலாம் என்பது போன்ற பாவனையுடன் யோசிப்பார். குரங்குகள் செய்வதைச் செய்யும் தன்மையுள்ளன என்பதால தன்தொப்பிகளைக் கழற்றி அவர் எறிந்து காட்டுவார். குரங்குகளும் தத்தமது தொப்பிகளைக் கழற்றி எறியும். வியாபாரி மகிழ்ச்சியான முகபாவனையுடன் தொப்பிகளைப் பொறுக்கியெடுத்துக் கட்டிக் கொண்டு, "தொப்பி வேண்டுமா தொப்பி" என்று கூவிக் கொண்டு செல்வார்.

இவற்றையெல்லாம் ஆசிரியர் முதலில் நடித்துக் காட்ட வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் விளையாடும்படி உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வகையான விளையாட்டுக்கள் மூலம் பாலர்கள் தொப்பி வியாபாரியின் கதையை அனுபவபூர்வமாக அறிகின்றனர். கதை அவர்கள் மனதில் பசுமரத்தாணி போலப் பதிந்துகொள்ளும். சமயோசித புத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலுதல் என்பன இக்கதை மூலம் அவர்தம் மனதில் பதிவாகின்றன. இப்படியே ஒவ்வொரு கதையாக நடிக்கப்படும் போது அக்கதையின் சிறப்பியல்புகள் அவர் மனதில் பதியப்படுகின்றன.

ஒரு தாயின் அன்பான பராமரிப்பிலேயே ஒரு குழந்தையின் உடல் ஆரோக்கியம் தங்கியுள்ளது. 'சுத்தம் சுகம் தரும்' என்பதற்கிணங்க குழந்தையை சுகாதார நெறிகளுக்கமைய வளர்த்தெடுத்தல் அவசியமாகிறது. அசுத்தத்தினால் உண்டாகும் கிருமித் தொற்றுக்களால் குழந்தையின் உடல் நலம் பாதிப்படையும். கொதித்தாறிய நீரைப் பருகக்கொடுத்தல், நகங்களை வெட்டி விரல்களை சுத்தமாகப் பேணுதல், போஷாக்கான உணவளித்தல் என்பன ஒரு குழந்தையின் ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்ததாகும்.

முட்டை, பால், காய்கறி என்பனவற்றைக் குழந்தைகளின் உணவில் தாராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வளரும் குழந்தைகளுக்குப் புரதச்சத்து நிறைந்த உணவு வகைகள் அத்தியாவசியமானவை. இன்னும் மீன்எண்ணெய், தோடம்பழம், எலும்பிச்சைச்சாறு என்பவற்றைக் கொடுப்பதன் மூலம் தேவையான உயிர்ச்சத்துக்களையும் அவர்களுக்கு அளிக்கலாம்.

குழந்தைகளின் ஆடையணிகளை சுத்தமாகப் பராமரிப்பதும், குளியல் போன்றவற்றை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதும் சரியான சுகாதார முறைகளாகும். மலசலகூட பாவனையின் பின் சவர்க்காரமிட்டுக் கைகழுவு தலைக் கற்றுக்கொடுக்க வேண்டும். குடும்பஅங்கத்தினர் அனைவருமே இம்முறையினை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். குழந்தையின் வயிற்றில் ஏற்படும் பூச்சித் தொல்லைகளை வைத்தியரின் ஆலோசனைகளுடன கூடிய தகுந்த மருந்துகளைக் கொடுத்து அகற்றுதல் வேண்டும்.

மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தாயின் அரவணைப்பிலும், ஆறு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலையிலும் இடைவயதுப் பிள்ளைகள் பாலர் பாடசாலையிலும் உள்ளன. பாலர் பாடசாலையின் பாலர்கள் ஆசிரியரின் அன்பான அரவணைப்பில் இருக்க வேண்டியவர்கள். பிள்ளை வளர்ப்பில் நாம் கவனம் எடுப்பது நம் இனத்துக்கும், தேசத்துக்கும் உரிய-அரிய சேவையாகும். இதை இயற்றுதல் வயது வந்தோர் அனைவரதும் கடமையாகும். உண்மையில் ஒரு குழந்தையினுடைய வளர்ப்பு நாட்டையே வளர்ப்பதாகும்.

உடற்கல்வியென்பது நற்பழக்கத்தையும் - கீழ்ப்படிதல், தன்னம்பிக்கை, தன்னடக்கம், மரியாதை, ஒத்துழைப்பு, நட்பு, வைராக்கியம், நேர்மை, நியாயம், தன்கட்சியைப் பற்றிய பெருமை, சுறுசுறுப்பு, முன்யோசனை, தைரியம் முதலிய நற்குணங்களையும் உண்டு பண்ணுகிறது. இதனால் இரத்தோட்டம், நரம்புப்பலம், இயல்பான சுவாசப்பை அமைப்பு என்பன உருவாகின்றன.


பாலருக்குரிய கழுத்தப்பியாசம், கையப்பியாசம், கால்அப்பியாசம், இடுப்புஅப்பியாசம், சுவாசப்பியாசம் மற்றும் முழு உடம்பு அப்பியாசங்களைத் தேர்ந்தெடுத்து செய்வித்தல் வேண்டும். வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னால் இவற்றைச் செய்விப்பது அவர்கள் உற்சாகமாகக் கல்விகற்பதற்கான ஆரம்ப நிலையாக அமையும். அணிநடை செய்வித்தல் அவர்களுக்குள் ஓர் ஒழுங்குமுறையினை ஏற்படுத்தும். ஊஞ்சல், சறுக்குமரம் போன்ற விளையாட்டுக்கள் உடல் நலத்துடன் அவர்களைக் குதூகலிக்கவும் வைக்கும்.

ஒரு மனிதனது உடல் வலிமையும், மனவலிமையுமே அவனது சகல திறமைகளையும் நிர்ணயிக்கின்றன. அந்தவகைளில் அவற்றுக்கு ஆக்க சக்தியாக இருப்பது தேகப்பியாசமே. தேகப்பியாசங்கள் மூலம் தசைநார்கள் வலிமையுற்று உடலின் அங்கங்கள் யாவும் வலிவுறுகின்றன.

பாடசாலை வாழ்கை இயற்கையோடு சம்பந்தப்பட்டதாகவும், தேகாரோக்கியத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதனால் பாலர்களுக்கான பாடத்திட்டத்தை அமைக்கும்போது தேகப்பியாசபாடத்தையும் அவற்றுள் ஒன்றாகக் கொள்ளல் மூலம் அவர்களது கல்வி நிலையின் உச்ச வளர்ச்சியை உறுதி செய்துகொள்ளமுடியும். *

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.114



**சொற்சிலம்பம் இல. 114**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

..........................இங்கே வெட்டுக..........................

முடிவுத் திகதி:- 13-08-1999

### இடமிருந்து வலம்

1. நிகழக்கூடாதது. 6. மகிழ். 7. கைப்பற்றுகை. 9. பிதற்றுதல். 10. பாதிப்பை ஏற்படுத்துபவர். 12. ஒருவகை மீன். 14. நட்புக்கு எதிரானது. 15. பிழைபடுதல். 18. வல்லமை மிக்கவன். 20. போர் புரிய இது தேவை. 21. சமிக்ஞை. 22. மறி.

### மேலிருந்து கீழ்

1. செருக்கு அல்லது இறுமாப்பு. 2. தடிமனால் வருவது. 3. கவிஞர். 4. நஞ்சு. 5. இழை வாத்தியக் கருவி. 8. வாசம் மிக்கபூ. 9. கூறுதல். 11. வழங்கா. 13. ஆறுவிதம். 14. அரைக்கும் தொழிலுக்கு உரிய உறுப்பு. 16. கூட்டமாகச் செல்லுதல். 17. தனது. 18. ஒரு பலகாரம். 19. துயில் கொள்.

## சொற்சிலம்பம் 112 இன் விடைகள

### இடமிருந்து வலம்

1. சாவகச்சேரி. 7. பதில். 8. வதனம். 9. யாசகம். 11. கணவன். 12. விதி. 13. ஆள். 14. நரி. 15. சுளகு. 17. நகைப்பு. 19. கன்றுதல். 21. புள். 22. குடுகுடு.

### மேலிருந்து கீழ்

1. சாபம். 2. வதி. 3. கல்யாண. 4. சேவகன். 5.ரிதம். 6.தம்பதி. 10.சவம். 11. கள்ளன். 12. விரிப்பு. 13. ஆசுகவி. 14. நகை. 16. குறுகு. 17. நல்கு. 18. புள்ளி. 20. தடு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு** :- திருமதி ந.சண்முகலிங்கம்,
இல 21, இராஜ வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு** :- இ.இரகுலினி,
19,நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர்,

**மூன்றாம் பரிசு** :- கந்தசாமி குலதீபன்,
கலையரசு லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 113 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிறேக் டான்ஸைக்' கண்டிக்கும் சஞ்சீவி 'வித்துவான் பதிலை' மட்டும் அனுமதிக்கலாமா?

யாழ் குடாநாட்டு மக்களுக்காக இயங்கி வரும் ஒரேஒரு செய்தித்தாபனம் எனும் முறையில் உதயன் - சஞ்சீவி யாழ்மக்களுக்கு ஆற்றிவரும் பணி மகத்தானது; போற்றுதற்குரியது.

வெறுமனே செய்திகளை மாத்திரம் பிரசுரிக்காமல் பல்வேறு சிறப்பம்சங்களையும் தன்னுள் தாங்கி வாரந்தோறும் வெளிவரும் சஞ்சீவி மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றதில் வியப்பேதுமில்லை.

அதிலும் குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் நிகழும் அநியாயங்களையும் சமூக, கலாசார சீரழிவுகளையும் பளிச்சென மின்னலாய் மக்களுக்கு வெளிப்படுத்தி அவற்றையெல்லாம் மறைமுகமாகவோ நேரடியாகவோ தட்டிக் கேட்கும் பாங்கு கொண்ட 'அதிரடி அரங்கி'ன் மூலம் சஞ்சீவி சமூகத்தில் தனக்குள்ள பெரும் பொறுப்பைத் திறம்படவே நிறைவேற்றி வருகின்றது.

அதேவேளை பசுக்கூட்டத்துடன் சேர்ந்து கொண்ட பன்றி போல "வித்துவான் பதில்கள்" எனும் பகுதி ஏனைய சிறப்பம்சங்களுடன் சேர்ந்துகொண்டிருப்பது சஞ்சீவியின் தரத்தைக் குறைக்கின்றதோடு சஞ்சீவியின் புகழுக்கும் களங்கம் கற்பிக்கவும் முனைகிறது.

மிக அண்மையில் கூட கலாசார, சமூக சீரழிவுகள் குறித்து, 'ஆபாசமான' சினிமாப் பாடல்கள் இசைக்கப்படுவதும், 'பிறேக்டான்ஸ்' ஆடுவதும் எம் தமிழ் கலாசாரத்திற்கு ஒவ்வாதெனக் குறிப்பிட்ட சஞ்சீவி தன்னுள்ளிருந்து ஆபாசமாகவும் பொறுப்பற்ற முறையிலும் பதிலளிக்கும் 'வித்துவான் பதில்கள்' குறித்து இன்னும் ஏன் எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை? ஊருக்கு உபதேசம் பண்ணும் சஞ்சீவி தன்னைத்தானே திருத்தமுடியாதா?

வித்துவான் பதில்கள் ஆபாசமாக எழுதப்படுவது மட்டுமன்றி காலம் காலமாகத் தமிழினம் தெய்வீகமாகப் போற்றும் காதல், கணவன் - மனைவிஉறவு, இல்லறவாழ்வு என்பவற்றை இழிவாகப் பழித்துரைப்பதாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் இளஞ்சமூகத்தினரிடையே இவை பற்றி தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. அத்துடன் விடுதலை வேண்டி தமிழினம் போராடும் இவ்வேளையில் இவ்வாறான கேள்விபதில் பகுதி மக்களின் மன உணர்வை வேறு பாதையில் திசைப்படுத்திச் செல்வதுடன் மக்கள் மனதில் கீழ்த்தரமான எண்ணங்களையும் அது உருவாக்க முயல்கிறது. ஒவ்வொரு வாரமும் இவ்வார 'ஜோக்' பகுதியில் வித்துவானால் எழுதப்பட்டுவரும் ஆபாச விரசம்கலந்த பகிடிகள் இன்றைய எம் இளம் தமிழ்ச் சமூகத்தின் தறிகெட்ட போக்கிற்கு உரமிடுகின்றதாகவே அமைகின்றன. எனவே இப்பகுதியை முற்றாக ஒழிக்காது விடினும் சமகாலத்திற்கு - இந்தப் போராட்ட காலத்திற்கு - ஏற்றவகையில் தரமான ஒரு படைப்பாக மாற்றி சஞ்சீவியின் சுவையை மேன்மேலும் கூட்டலாம் என்பது எமதுகருத்து.

**சாவகச்சேரி. கரிகாலன்.**

## உங்கள் உள்ளத்திலிருந்து

### முதலில் 'சஞ்சீவி' தன்னைத் திருத்தட்டும்!

கடந்த 24.07.99 அதிரடி அரங்கு பகுதியில் இடம்பெற்ற 'பிறேக்டான்ஸ்' குறித்து சில கேள்விகள்.

என்னையா அப்படி அந்தப்பாடல்களில் கலாசார சீர்கேட்டை கண்டீர்? அவை என்ன அந் நிகழ்ச்சி நடத்தியோரால் இயற்றப்பட்டதா? இசையமைத்துப்பாடப்பட்டதா? இல்லையே! தமிழ் நாட்டில் இருந்துவந்த பாடல்கள்தானே அவை.

இதனைச் சுட்டிக்காட்டும் நீர் 10-07-1999ஆம் திகதிய 'இவ்வார ஜோக்' பகுதியில் பிரசுரித்த ஜோக் தரமுயர்ந்ததா?

இந்தியாவில் இருந்து வந்த பாடல்களை அவர்கள் போட்டு ஆடினார்கள். அதேமாதிரி இந்தியாவில் இருந்துவந்த ஜோக்கை நீர் எழுதினீர். சஞ்சீவியின் ஏனைய இவ்வார ஜோக் எல்லாம் என்னவாம்? அவ்வளவும் பச்சை.

அன்றைய டான்ஸ் நிகழ்ச்சி, அதனைப் பாதித்த பார்வையாளர்களை மட்டும் திசைதிருப்பியிருக்கலாம். ஆனால் கீரைக்கடைக்கும் எதிர்க்கடை இல்லாது பத்திரிகை நடத்தும் உமது பத்திரிகை பச்சையாக எழுதுவதை எத்தனை லட்சம் பேர் படிக்கிறார்கள்? அதிலும் வித்துவான் கேள்விபதில் பகுதியில் அனேகமானவை விரசம் நிறைந்த பதில்களே. இதைப்பற்றி யாராவது திருப்பிக் கேட்டால் அதற்கு ஏன் இரட்டை அர்த்தம் காணபிக்கிறீர்கள் என விளக்கம் வேறு.

முழுமையான மஞ்சள் பத்திரிகையாக மாறும் உமது பத்திரிகைக்கு தவறுகளைச் சுட்டிக்காட்ட என்ன தகுதி இருக்கின்றது?

ஆபாசம்பேசுவோனைப் பார்த்து மற்றொரு ஆபாசம் பேசுவோன் 'ஆபாசமாக பேசுகிறான்' என்று சொல்வது போலல்லவா இருக்கிறது.

எனவே முதலில் உம்மைத் திருத்திக் கொள்ளும். சமூகம் தானாகத் திருந்திவிடும்.

**பளை. க.கனகசிங்கம்.**

### வித்துவானுக்கு கடும் எச்சரிக்கை

உடுவில் அரவிந்தனின் 'உணர்வுகள்' சிறுகதை மிகவும் சிறப்பாக இருந்தது. இவைபோன்ற சமகால பிரச்சினையுடைய கதைகளுக்கு முன்னுரிமை வழங்கிப் பிரசுரிக்கவும்.

ஐயா, வித்துவானுக்கு என்ன நடந்தது? ஏன் தனிநபர்களை தாக்கி பதில் தருகிறார்? தனக்குத் தான் யாவும் தெரியும். மற்றையோர் யாவருக்கும் காதில் பூவைக்கலாம் என்று அவர் நினைக்கிறாரா?

'அறுபது வயதில் பந்து விளையாடலாமா?' என்ற கேள்விக்கு 'ஏன் அறுபதுவயதில் துடுப்பாடும் இரும்பன்களும் நம்மூரில் இருக்கின்றார்களே?' என்று பதில் தந்துள்ளார். 'இரும்பன்' என்பது ஒரு தனிநபரைக் குறிப்பிடுகின்றது! எனவே இப்படியான பதில்களைத் தவிர்க்கவும். இல்லையென்றால் வித்துவான் வீண் சிரமங்களுக்குள்ளாகவேண்டிவரும். நன்றி.

**கந்தர்மடம். அ.கோகுலன்.**

### அறிவுத்தீனி போடும் அங்கிகள் பலவிதம்

குகன் எழுதிவரும் 'அங்கிகள் பலவிதம்' என்னைப்போன்ற அறிவுத் தேடலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகின்றது.

அழகிய தமிழ் நடையில் அருமையாக எழுதிச் செல்கின்றார் குகன். இடையிடையே புதிய கருத்துக்களையும் தொட்டுச் செல்ல முயல்கிறார். அவரின் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். மேன்மேலும் புதிய தகவல்களை தருவதற்கு தொடர்ந்து எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கொக்குவில். இராம.ஜெயபாலன்.**

### மகுடப் பண்பை பேணுங்கள் கவிஞர்களே!

சஞ்சீவியின் 'கவிதைமுற்றம்' தொடர்பாக சில வரிகளை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். சஞ்சீவியின் கவிதை முற்றத்தில் நல்ல பல மாற்றங்களை இந்த தேசம் இன்று விரும்பி நிற்கின்றது.

எங்களுடைய தேசம் இயல்பு வாழ்க்கையில் இருந்து தூர விலகி நிற்கிறது என்பதை விட தூர விலகிவைக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. எவருக்கும் எங்கேயும் எந்த நிலையிலும் உத்தரவாதம் இல்லாத நிலைமை. செம்மணியும் அதன் வழித்தோன்றல்களும் அதனைத் தான் இன்னும் எமக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. இதுவே எமது இன்றைய வாழ்வியலின் யதார்த்தம் என்றாகிவிட்ட நிலையில் - எமது கவிஞர்கள் பெண்களையும் பிலாக்கொட்டையையும் பற்றி பாடுவது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை அவர்களே எண்ணிப் பார்க்கட்டும்.

இலக்கியம் என்பது உண்மையில் ஒரு காலத்தின் கண்ணாடி என்ற வகையில் இவை ஒரு வரலாறுச் சுவடுகள். இந்தவகையில் பார்க்கின்றபோது இந்த எமது கவிஞர்கள் ஒரு பெரும் இலக்கிய வரலாற்றுத் தவறினை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இலக்கியங்களை எடுத்துப் பார்க்கின்றபோதெல்லாம் அவ்விலக்கியங்கள் உருப்பெற்ற காலத்தினது பண்புகள் அவ்விலக்கியங்களிலேயே தெளிவாகப் புலப்படுவதைக் காணலாம்.

இன்று நாங்கள் பிலாக்கொட்டையையும் பெண்ணையும் பாடிக்கொண்டிருந்தால் எமது வரலாறு எமது சந்ததிக்குச் சரியான முறையிலே தெரியாமல் போய்விடும். எமது தார்மீக போரியல் மற்றும் அரசியல் வடிவங்கள் திரிபுபடுத்தப்பட்டு தவறான கோணத்தில் எமது இளம் சந்ததியின் முகங்களுக்கு காட்டப்படும். எமது வரலாறுகளை நாளைய எமது சந்ததிக்கு இலக்கியங்களே எடுத்துச்செல்ல இருக்கின்றன. அந்த வகையில் இலக்கியங்கள் தம் கடமைகளை சரியாகச் செய்யத்தக்க விதத்தில் அவற்றை உருவாக்க கவிஞர்கள் முன்வரவேண்டும்.

கவிதைகளுக்கு கற்பனைதான் அழகு. அதற்காக கருவே கற்பனையாகிவிடக்கூடாது. அதற்காகப் பெண்ணையும் பிலாக்கொட்டையையும் பாடுவது தவறு என்று மட்டும் நான் சொல்லவரவில்லை. ஏனென்றால் இலக்கிய நயம் எங்கிருந்தாலும் அது ரசிக்கப்படக் கூடியதே. ஆனால் காலத்தை அனுசரித்து, அதைப் பிரதிபலித்துப் பிறப்பதுதான் இலக்கியத்தின் மகுடப் பண்பு. அத்தகைய மகுடப் பண்பில் இருந்து எமது கவிதைகள் திசை மாறுகின்றன.

எனவே அன்புக் கவிஞர்களிற்கு இந்த ரசிகன் விடுக்கும் பணிவான வேண்டுகோள் இது தான்:- "எதுவுமே என்றைக்குமே நிலையானதல்ல. இந்தக் காலமும் நிச்சயமாக ஒரு நாள் மாறும். அப்படியானதொரு மாற்றம் வருகின்ற அந்த நாளைய பொழுதிலே நாங்கள் பெண்களையும் பிலாக்கொட்டைகளையும் பற்றி தாராளமாகப் பாடுவோம். ஆனால் அதுவரை காலத்தின் கட்டாயத்தையும் தேசத்தின் தேவையையும் புரிந்துகொண்டு இயன்றவரை, எமது இனத்தின் தேசிய விழிப்புணர்வையும், எமது சிறைவாழ்வின் சீரிய அத்தியாயங்களையும் மட்டும் பாடமுடியுமானால் பாடுங்கள. அதற்காக உங்களை காலம் கையெடுத்து வணங்கும்.

**யாழ்.பல்கலைக்கழகம். 'இவன்.'**

### சிறந்த கதைகள் இரண்டும் பாராட்டுக்குரியவை

தாயகத்தின் தலைசிறந்த பத்திரிகையான உதயன் - சஞ்சீவியே! உனக்குவமை நீயே. கவிதைமுற்றம், மௌனமொழி, சிறுகதை, வித்துவான் பதில்கள் என நீண்டு செல்லும் அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளாய்.

'மதுரபாவங்கள்' எனும் கோகுலராகவனின் சிறுகதைப்படைப்போ சூப்பர். இதில் சிந்துவின் காதலும், மாறனின் நட்பும் எத்தனை அற்புதமானவை!

உடுவில் அரவிந்தனின் 'உணர்வுகள்' சிறுகதையில் காணும் இல்லற இன்பங்கள் நெஞ்சை நெகிழவைத்தன.

மானியூர் ரட்ணேசின் 'மணமகன் தேவை' கவிதைமுற்றம் மிகமிக நன்று.

இவைபோன்ற சிறந்த படைப்பாளிகளை வெளிக்கொணர்ந்து சிறந்த படைப்புக்களை வழங்கும் உனக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

**கற்கோவளம். பா. மணிக்குமார்.**

### வித்துவானை கைது செய்யுங்கள்!

கடந்த 24-07-99 சஞ்சீவியில் முத்தான இரண்டு சிறுகதை பிரசுரமாகியிருந்தன. தனது 'உணர்வுகள்' மூலம் உள்ளத்தை தொட்டுவிட்ட உடுவில் அரவிந்தனுக்கு என் மனப்பூர்வமான நன்றிகள்.

காதலை இன்றைய நடைமுறை வாழ்வியலுடன் இணைத்து நிஜத்தைச் சொன்ன கோகுலராகவன் அவர்களுக்கும் என உளமார்ந்த பாராட்டுக்கள். இத்தகைய படைப்பிலக்கியங்கள் எப்போதும் இந்தச் சமுதாயத்திற்கு தேவையான ஒன்று. இவற்றை இனங்கண்டு வெளிப்படுத்தி எம்மை உவகையடையச் செய்யும் சஞ்சீவிக்கு என் பாராட்டுக்கள்.

ஆனாலும் வெண்ணிலாவில் தென்படும் கறைபோல சஞ்சீவியில் வித்துவான் பதில்களும் கட்டமிடப்பட்டு பிரசுரிக்கப்படும் ஜோக்குகளும் காணப்படுகின்றன. இதை முழுமையாகத் தவிர்க்க முடியாவிட்டாலும் முடிந்தளவு தவிர்க்கலாமல்லவா?

*"நலத்தின் கண் நாரின்மை தோன்றின்*
*அவனைக் குலத்தின் கண் ஐயப்படும்."*

என்றார் வள்ளுவர். என் கருத்துப்படி வித்துவான் கூட்டணியினர் பாலியலில் மிகுந்த நாட்டமுள்ளவர்கள் போலும். இன்னும் சிறிது காலத்தில் (2000ஆம் ஆண்டில்) வித்துவான் பதில்கள் 'கிளிண்டன் பதில்களாக' மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இங்கே உளவியல் ரீதியான கருத்தொன்றைக் குறிப்பிட்டு விடைபெற விரும்புகிறேன். "பாலியலில் அதிக நாட்டமிருந்தும் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் சதா அதைப் பற்றியே கதைத்துக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் எழுதிக்கொண்டுமிருப்பார்களாம்" இந்தக் கோட்பாட்டிற்கு வித்துவான் சிறந்த எடுத்துக் காட்டாகின்றார். இத்தகைய நிலைமையைத் தவிர்க்க வித்துவான் கைது செய்யப்படல் வேண்டும். அல்லது அவரது அடையாள அட்டை தொலைய வேண்டும்.

**கரவெட்டி. ச.இராகவன்.**

### 'மதுரபாவங்கள்' சிறந்த சிறுகதை

கடந்த 24-07-1999 அன்றைய சஞ்சீவியில் பிரசுரமான கோகுலராகவனின் 'மதுரபாவங்கள்' என்ற சிறுகதை மிகவும் சிறப்பாக உருவாக்கப் பட்டிருந்தது.

கண்ணியமான காதல் உணர்வுகளை சிறப்பாகக் கற்பனையில் ஆக்கியிருந்தார். இடையிடையே கவித்துளிகளும், கவிதையான வசனங்களும் சிறுகதைக்கு மேலும்மெருகூட்டின. கோகுலராகவனின் எழுத்தாற்றல் மேலும் சிறப்படைய வாழ்த்துக்கள்.

**உசன். அ.நிதர்சன்.**

### பொறுப்பற்ற தன்மையே வித்துவானின் போக்கு!

வித்துவானின் பதில்களைப் பற்றி பல விதமான விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் நோக்கி மோசமானவற்றைத் தவிர்ப்பதில் எவருக்குமே ஆட்சேபனை இருக்காது. ஆனால் பதில்களோ தொடர்ந்தும் மாற்றமில்லாமலே வந்துகொண்டிருக்கின்றன.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் பயன்படுத்தி பாதிப்பு ஏற்படாத வகையில் எதையும் செய்யலாம் என்ற ஒரு தன்மை உருவாகிவிட்டது. இது யாழ் குடாநாட்டின் தற்போதைய நியதி. (Order of the-day) என்று கூடக் கொள்ளலாம். தார்மீகப் பொறுப்பில் பதில் சொல்லத் தேவையில்லை. என்ற ஒரு நிலைப்பாட்டை பல இடங்களில் காணலாம். உதாரணமாக பகிரங்க வீதியைத் தடை செய்யலாம். ஒலிபெருக்கியை அலறவிட்டு பலரையும் இம்சைப்படுத்தலாம். நினைத்த விலைக்குப் பொருள்களை விற்று இலாபம் சம்பாதிக்கலாம். கடமையைச் செய்யாமல் அரச ஊழியர் இழுத்தடிப்புச் செய்யலாம். இப்படிப் பலப்பல.

இதேபாணியில்தான் சஞ்சீவியும் வித்துவானும் செயல்படுகின்றார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. உலகத்தில் எத்தனையோ விடயங்கள் இருக்க இரண்டு மூன்று புள்ளிகளைச் சுற்றித்தான் கூடுதலாக ஒருவர் சிந்திப்பது என்பது ஏதோ கோளாறுதான்.

தமது எழுத்தால் பத்திரிகைகளை நிரப்புகின்ற பலர் மறந்துபோகின்ற ஒரு விஷயமும் இதில் உண்டு. வருங்காலத்தில் ஒரு மதிப்பார்ந்த சபையில் இவை விமர்சிக்கப்படவேண்டி வந்தால் எப்படியிருக்கும் என்ற சிந்தனை இல்லாத தன்மைதான் அது. அதற்காகவாவது திருந்தலாமே!

**கொக்குவில். வை.சந்திரபாலன்.**

### உண்மையைக் கூறினால் "வம்பன்" எனலாமா?

'யாரையா அந்த வம்பன்?' என்று சேரலாதன் பற்றி ஓர் அன்பர் குறைபட்டுக் கொண்டார். உண்மையில், சேரலாதன் எழுதும் கவிதை, கட்டுரைகளை ஊன்றிப் படிப்பவர்களுக்குத் தெரியும், நன்கு பழுத்த அனுபவமுள்ள புத்திஜீவன் ஒன்று 'சேரலாதன்' என்னும் பெயருக்குள் மறைந்து நிற்கிறது என்று!

ஒருசிலர் ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்தைக் கூறிவிட்டால் - கூறியவரை 'வம்பன்' என்று அழைப்பது அநாகரிகமான செயலாகும்.

'விளம்பரம்' தனி இணைப்பாக வெளியிட வேண்டும் என்று கூறியதில் தவறு என்ன இருக்கிறது?

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுடன் எங்கள் நாட்டில் வெளிவரும் 'குட்டி'ப் பத்திரிகையை அந்த அன்பர் ஒப்பிட்டுள்ளார். வெளிநாட்டில் இருந்து, வெளிவரும் பத்திரிகைகளில் விளம்பரம் ஒரு தனி இணைப்பாக வெளிவருவதை அந்த அன்பர் அறியவில்லையா?

எங்களுக்கு விளம்பரமும் தேவைதான். அதற்காக 'விடயம்' விடுபடக்கூடாது. ஆகவே 'விளம்பரம்' தனி இணைப்பாக வெளிவரவேண்டும் என்ற 'சேரலாதன்' கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

**ஆனைப்பந்தி. சபா.தியாகராஜா.**

### நியாயத்தை ஏற்று வித்துவானை கலையுங்கள்!

"வித்துவான் பதில்கள்" என்ற பக்கத்தை நீக்குவதில் உங்களுக்கு ஏதாவது சிரமமா?

வித்துவான் பக்கத்தை வாசித்து மாணவ சமுதாயம் சீர்கெட்டுப்போகின்றது.

"வித்துவான்" என்ற பட்டத்தை நீங்கள் தான் இவருக்கு அளித்தீர்கள்? இவருக்கு எந்த வகையிலும் "வித்துவான்" என்ற பட்டம் பொருந்தாது என்பதே எனது கருத்து.

வித்துவான் கொடுக்கும் பதில்களைப் பார்த்தால் போகின்ற போக்கில் அவர் எல்லாவற்றையும் அப்படியே வெளிப்படையாகவே கூறிவிடுவார் போலும்.

வித்துவான் பக்கத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது கல்விசார்ந்த, அல்லது உலக விவகாரம் சார்ந்த அல்லது நம் நாட்டு நடத்தைகள் பற்றிய விடயங்களை மிகவும் விவரமாகப் பிரசுரிக்கலாமே! இதைவிட்டு வித்துவானின் அலட்டல் பதில்களைப் பிரசுரித்து என்ன பயன்?

வித்துவான் பதிலை நீக்குமாறு பல்வேறு வாசகர்களும் கேட்டிருந்தார்கள். நீங்கள் அதற்கு முகம் சாய்க்காமல் இருக்கின்றீர்கள்.

அவர்களின் குரல்களை நீங்களும் செவிமடுப்பதே நியாயம்.

**சித்தன்கேணி. சணா.**

### சஞ்சிகையின் இங்கிதம்

சஞ்சிகையின் இங்கிதமும் செந்
தமிழால் மலர்ந்த இதழ்
புன்முறுவல் பூக்கின்ற புதுக்கவிதை
புணர்வில் வரும்
சின்னஞ்சிறு கவிதை களை சிறப்பாக
அள்ளித்தரும்
புலவரென கவிஞரென பூந்தமிழாய்
பொழிந்துவரும்
சமயங்கள் கூறுகின்ற தத்துவத்தை
வெளிப்படுத்தும்
யாழிருந்து வருவதால் படித்து நாம்
பயன் பெறுவோம்.

**இணுவில் கிழக்கு. த.சற்குருதாஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org